


செ. யோகநாதன்

# காவியத்தின் மறுபக்கம்

எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம்

Theniyan

'Theniyaham'
Polikandy
V.V.T

# காவியத்தின்

# மறுபக்கம்

செ. யோகநாதனின் ஏனையபடைப்புக்கள்

* **யோகநாதன் கதைகள்**
* **ஒளி நமக்கு வேண்டும்**
  (சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது)

# காவியத்தின் மறுபக்கம்

செ. யோகநாதன் எழுதிய 'காவியத்தின் மறுபக்கம்' என்ற இக் குறுநாவல் தொகுதியில் மூன்று குறுநாவல்கள் அடங்குகின்றன. ''காவியத்தின் மறுபக்கம்'' என்ற குறுநாவல் சிரித்திரன் குறுநாவல் போட்டியில் முதற் பரிசு பெற்றது.

செ. யோகநாதனின் தொகுதிகளாக 'யோகநாதன் கதைகள்' (1964) ஒளி நமக்கு வேண்டும் (1973) ஆகியவை ஏற்கனவே வெளியாகியுள்ளன. ''ஒளி நமக்கு வேண்டும்'' தொகுதி 1973 ன் சிறந்த படைப்பிலக்கியத்திற்கான சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றது.

சிறுகதை, குறுநாவல்களோடு புனை பெயரிலே கவிதைகளும் எழுதி வருபவர் செ. யோகநாதன்.

# யோகநாதனின் கதைகள்

எனக்கு அறிமுகமான நாட்களிலிருந்தே, யோகநாதன் இலக்கியத்தின் சமுதாயத் தோற்றத்திலும் பணியிலும் அசைக்கவியலாத நம்பிக்கை உடையவராய் இருந்து வந்திருக்கிறார்; முற்போக்கு அணியைச் சார்ந்து நின்றிருக்கிறார்; அதன் தூசிப்படை வீரர்களில் ஒருவராகவும் சில வேளைகளில் அமர் புரிந்திருக்கிறார். கடந்த பத்தாண்டு காலத்தில் முற்போக்கு இலக்கியத்துக்கு யோகநாதனின் பங்களிப்பு விதந்துரைக்கத் தக்கது. சோஷலிஸ தத்துவத்தைப் பொதுவாகவும் கலை இலக்கியத்திற்கு அதன் தொடர்பு பொருத்தப்பாடு ஆகியவற்றைச் சிறப்பாகவும் கற்றுச் சிந்தித்துத் தெளிந்து அவற்றைத் தனதாக்கிக் கொண்டுள்ள - விரல் விட்டு எண்ணி விடக் கூடிய - தமிழ் எழுத்தாளர்களில் அவரும் ஒருவர். இச்செய்தியை நான் வற்புறுத்திக் கூற வேண்டிய அவசியமேயில்லை; அவரது சிறுகதைத் தொகுதி (யோகநாதன் கதைகள் 1964) மூலமாகவும் நூல்வடிவம் பெறாத பல படைப்புக்கள் மூலமாகவும் வாசகர்கள் நன்கறிந்திருப்பர். தத்துவத் தெளிவும் சிருஷ்டித்திறனும் கலையுணர்வும் ஒருங்கிணைந்து வைரம் பாய்ந்த எழுத்தாளர் அவர். ..

**கலாநிதி க. கைலாசபதி**

(ஒளி நமக்கு வேண்டும் முன்னுரையிலிருந்து)

# காவியத்தின்
# மறுபக்கம்

செ. யோகநாதன்
எழுதிய
மூன்று குறுநாவல்கள்

எழுத்தாளர் கூட்டுறவுப்
பதிப்பகம்
வரையறுக்கப்பட்ட சங்கம்
51/9 ஹட்சன் வீதி,
கொழும்பு-3

'காவியத்தின் மறுபக்கம்' என்ற இந்தக் குறுநாவல்களின் தொகுதி எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகத்தின் எட்டாவது வெளியீடு. உரிமைகள் யாவும் ஆசிரியருடையதே. இக் குறு நாவல் தொகுதியின் முதலாம் பதிப்பு நவம்பர் 1976 இல் வெளியிடப் பெற்றது. 234, ம் இலக்கத்திலுள்ள ஸ்ரீ லங்கா அச்சகத்தில் காவியத்தின் மறுபக்கம் அச்சிடப்பட்டது. தனிப் பிரதியின் விலை. ஐந்து ரூபா,

5/=

# பதிப்புரை

கலைப்படைப்புகள் வாழ்க்கையைப் பிரதிபலித்தல் வேண்டும்.

வாழ்க்கை என்பது காவியம் என்ருல் காவியத்தின் வசந்த ருதுவை மட்டும் வர்ணிப்பதே எழுத்தாளனின் வேலையல்ல. இதைத்தான் மிகப்பலர் மிக மலினமாகச் செய்து கொண்டிருக்கிருர்கள்.

ஆனுல் - காவியத்தின் மறுபக்கம் என்றும் ஒன்றிருக்கிறது. அதைச் சித்திரிக்க முன்வரும் படைப்பாளிகளே பலவிதத்திலும் ஒடுக்கப்படும் மக்களுக்காக வாதாடுகிருர்கள்; அவர்களுக்கானதோர் புதிய வாழ்வைச் செப்பனிட விழைகிருர்கள்; சமுதாயத்தின் புதுக்காவியத்தைப் படைக்கப் பாடுபடுகிருர்கள்.

அந்த விதத்தில் செ. யோகநாதன் நீண்டகாலமாகவே இலக்கியத்தின் மூலம் தன் கடமையைச் செய்து வருகிருர்.

வாழ்க்கை நிலைமைகள், உரிமைகள், அழகு நோக்கம் என்பவற்ருல் மனிதன் எவ்வளவோ மாறிவிட்டான், முன்னேறி விட்டான் சோஷலிஸ நாடுகளில். எனினும் நமது சமுதாயத்தில் பின்தள்ளப்பட்ட, நசுக்கப்பட்ட மக்களின் வாழ்வு இன்னமும் அவலமுற்றே இருக்கிறது. சாதாரண எளிய மக்களுக்கு இன்றியமையாத - மிகச்சிறிய தேவைகள்கூட இன்றி, அவை மறுக்கப்பட்டு அவர்கள் இன்னமும் இத்தேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிருர்கள். சட்டமும், அதிகாரமும் இன்றும் கூட சில தனவந்தர்களுக்கே கைகட்டி சேவகம் செய்கிறது......இவற்றையெல்லாம் இக் குறுநாவல்களை படிக்கும்போது நாம் புரிந்து கொள்ள முடியும்.

காலத்தின் வளர்ச்சியோடு மக்கள்தம் உள்ளுணர்வுகளின் ஆழ்ந்த பரிணுமத்தைப் புரிந்து கொள்வதும் இன்றியமையாததல்லவா? அதனுல் மேற்குறிப்பிட்ட நிலைமைகளும், சமுதாய அமைப்பும் மாற வேண்டும். என்ற குரலை இக் குறுநாவல்களின் பகைப்புலத்தில் நீங்கள் கேட்பீர்கள்.

ஒன்றுமட்டும் நிச்சயமாகத் தெரிகிறது - நாளை நாம் எழுதுவது காவியத்தின் மறுபக்கமாக அல்ல காவியமாகவே திகழும்.

எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம்

இத் தொகுதியில் அடங்கும்
குறுநாவல்கள்


- ○ காவியத்தின் மறுபக்கம் 1
- ○ சிறுபொறி, பெருந்தீ 62
- ○ கட்டுமரங்கள் 114

# காவியத்தின் மறுபக்கம்

கமலம் பரபரப்போடு நின்ருள். வாசற்புறத்தையும், கதவு வழியாக உள்ளேயும் பார்த்த பார்வையில் அச்சமும் ஆவல் கலந்த எதிர்பார்ப்பும் சேர்ந்திருந்தன. கதவு வழியாக உள்ளே பார்த்த அவளை நடுஹோலில் ஆளுயரத் துக்கு நின்ற நிலைக் கண்ணுடி கோணத்தில் பிரதிபலித்தது. அந்த நேரத்திலும் கண்ணுடியிலே பார்த்து நெற்றியில் முன்விழுந்த மயிரிழையைச் சரிசெய்து கொள்கிருள் கமலம். கமலாவின் தாய் செல்லம்மா அடுக்களைக்குள் அலுவலாக இருந்தாள். துருவலை சத்தமிடுகின்றது. கமலத்தின் தகப்பன் கணபதிப்பிள்ளை வியாபார விஷயமாகக் கொழும்பிற்குப் போய் மூன்று நாட்களுக்கு மேலாகிவிட் டன. இன்று அல்லது நாளைக்குக் காலை அவர் கொழும்பி லிருந்து திரும்பிவந்துவிடக்கூடும். ஒரே தம்பி விக்னேஸ்வரன் விளையாடுவதற்காக வெளியே போயிருக் கிருன்.

அந்த வீட்டினைப்போலவே, அந்த வீதியும் மத்தியான வெய்யிலின் தகிப்பில் வெறுமையாகிக் கிடக்கின்றது. வீதி மருங்கில் அசைபோட்டுக் கிடக்கும் கறுப்புநிறப் பசுவை யும் காணவில்லை. வீதிக்கே நிழல்மரமான இலுப்பையும் சருகுகளைச் சோம்பலாய் உதிர்த்துக் கொண்டு அசைவற்று நிற்கின்றது.

அவனையும் இன்னமும் காணவில்லை!

கமலத்தின் கண்கள் வெறுமையையே வீதியினில் பார்த்துக் களைத்துப் போய்விட்டன. ''கமலம் ம்...'' உள்ளேயிருந்து செல்லம்மாவின் குரல்,

''என்னம்மா...'' வாய்க்குள் சினந்துகொண்டே உள்ளே போகாமல் வாசலில் நின்று குரல் கொடுத்தாள் கமலம்.

''ஏன் கூப்பிட்டீங்கள்?''

''மணி பன்னிரெண்டுக்கு மேலையாச்சு. ரேடியோவைப் பாடவிடன்...''

''ஓம் இந்தா போடுறன்...''

முகத்தில் பூவென மலர்ந்த புன்னகையோடு ரேடியோவுக்கு அருகாகக் கமலம் போகின்றாள். தன்னிடம் தாய் அலுவலேதும் சொல்லாதது அவளிற்குப் பெரிய ஆறுதல். ஷோகேசின் மேலுள்ள தன் மார்பளவு புகைப்படத்தைப் பார்த்துப் புன்னகைத்தபடியே அண்ணன் சிவகுருநாதன் சென்றமுறை இலங்கைக்கு வந்தபோது வாங்கிக்கொண்டு வந்த சொனி ரேடியோவைத் திருகுகின்றாள். இசைவெள்ளம் நேருக்கு நேராகவே நின்று பாடகர் பாடுவதைப் போன்ற கீதத்தின் இனிய ஒலி வீடெங்கும் புரள்கின்றது. ஷோபாவில் சிறிது இருக்க எண்ணியவள், இருக்க மனமின்றி நிலைக்கண்ணாடியின் எதிரே போய்நின்று முகத்தில் துளிர்த்த வியர்வையைத் துடைத்து விட்டு மீண்டும் கதவடிக்குப்போய் முள்ளிலே நிற்கும் அந்தரத்தில் அவதிப் படுகின்றாள். இன்று வந்தவுடன் அவனுக்கு நல்ல பேச்சுக் கொடுக்கவேண்டும் என்று நினைக்கின்றது மனம் பிறகு தன்னை நினைத்து அவள் தானே சிரிக்கின்றாள்.

''என்றால் அப்படி அவரைப் பேசமுடியுமா?''

புன்னகைக்கும் அவனுடைய முகத்தோடு அவளிற்கு அவன் சொன்ன சொற்களும் மனவெளியில் கேட்கின்றன.

''கமலம், நான் உம்மைப்போல காசுள்ளவனில்லை. பரம ஏழை. எனக்கு வீட்டிலை அனேக அலுவல்களிருக்கும்.

நான் வருவதற்குப் பிந்தினாலும் அதையிட்டு நீர் குறை யேதும் நினைக்கக்கூடாது. நான் எல்லா வழிகளிலும் கஷ்டப்பட்டனான்...''

கமலம் மனதிற்குள் இரக்கத்தோடு சிரித்துக்கொள்ளு கின்றாள். அவன் தன்னைப்பற்றி எவ்வளவிற்குக் குறைத்துச் சொல்லமுடியுமோ அவ்வளவிற்குக் குறைத்தே கூறுகிறான். அந்தப் பெருந்தன்மையே தன்னைப் பெரிதும் கவர்வதாய் அவள் எண்ணுவதுண்டு.

''கமலம்...''

மீண்டும் தாயின் அழைப்பு.

'சனி மனிஷி.. கழுத்தை அறுக்குது...' மனம் சீறிற்று, உள்ளே போகாமல், ஹோலின் திரைச்சீலையினைப் பிடித்தபடி உரத்துக் கேட்கிறாள்.

''...என்னம்மா...வாறதா?''

''அந்தப் பிறிட்ஜுக்குள்ளை இருக்கிற ஒறேஞ்ச் பார்லி யைக் கொண்டுவா...''

''சரி...சரி...''

பிறிட்ஜுக்குள் இருந்த ஒறேஞ்ச் பார்லியை அவசர மாக நுரைசிதறத் திறந்து கொடுத்துவிட்டு ஒப்பினரும் கையுமாய் மீண்டும் அவள் வாசற்புறத்திற்கு வருகின்றாள். அதே வேளையில் மூக்கை உறிஞ்சிக்கொண்டு விக்னேஸ்வரன் வாசற்படியில் ஏறுகின்றான்.

''அக்கா உள்ளைவா ஒரு கதை சொல்லுறன்...''

முகத்தில் வழிகின்ற வேர்வையோடு நிற்கும் அவனைச் சுட்டெரிப்பதுபோலப் பார்க்கின்றாள் கமலம். அவளின் பார்வை சொல்லுவன அவனிற்கு நன்குபாடம். தலையைச் சொறிந்துகொண்டு தயங்குகின்றான்.

''போ...உள்ளை போ.. போய் முகத்தைக் கழுவிவிட் டுச் சாப்பிடு. இப்ப உனக்கு எந்த நேரம் பார்த்தாலும்

விளையாட்டுத்தான்—பப்பா வரட்டும்—'' முணுமுணுப் போடு விக்கினேஸ்வரன் உள்ளே போகின்றான்.

அவனை — பாலசிங்கத்தை இன்னமும் காணவில்லை. பாலசிங்கம் கமலத்தின் காதலன். கமலத்திற்கு இந்த மார்கழி மாதம் முடியப் பதினெட்டு வயது தொடங்கு கின்றது. இளமையின் வசீகரமாகி நிற்கின்றாள், பொது நிறம், அடர்ந்த கரிய புருவங்களின் கீழே மிரள்கின்ற பெரிய கண்கள், சிரிக்கின்றபோது அழகுதரும் தெத்திப் பல், கலகலப்பான சிரிப்பு, கவுண் அணிந்திருக்கின்றமை யினால் மேலும் மோகமூட்டும் வனப்பு, யௌவனத்தின் கர்வமாகவே உருவங்கொண்டிருந்த அவளைப்பற்றி செல்லம்மாவைவிடக் கணபதிப்பிள்ளையருக்கே அதிக பெருமையிருந்தது.

கணபதிப்பிள்ளை பட்டணத்திற்கும் கிராமத்திற்கும் இடைப்பட்ட அந்த ஊரில் பெரிய வியாபார நிறுவனத்தை யும், வட்டிக்கடையையும் நிறுவி அங்குள்ளவர்களிடையே பணத்தாலும், தகுதியாலும் உயர்ந்தவர். சாதிமான் என்று ஊரார் கொண்டாடும் தகைமை பெற்றவர். அந்த ஊருக்கு வந்து குடியேறிய நாளிலிருந்து இன்றுவரை யார் வீட்டிலாவதுசரி செம்புத் தண்ணீர் கூடக் குடித்தறியாத வர். செத்தவீடு, கல்யாணவீடென்றால் தன்னோடு நெருங் கிப் பழகிக் கடமைப்பட்டவர்களிடம் போவார். ஆனால் பந்தியில் உட்கார்ந்தோ பானமருந்தியோ யாரும் இது வரை அவரைக் கண்டதில்லை. விக்னேஸ்வரனும் தகப்பனைப் போலவேதான். தகப்பன் பழகுகின்ற வீட்டுச் சிறுவர் களோடு மட்டுந்தான் அவன் விளையாடப்போவான்.

கணபதிப்பிள்ளை தன்னுடைய பிள்ளைகளை மிகவும் கட்டுப்பாடாகவும், கண்காணிப்பாகவும் வளர்த்து வந் தார். தன்னுடைய பரம்பரையின் கௌரவத்தினை நூல ளவும் பிசகவிடாது தன்னுடைய பிள்ளைகள் பேணிப் பாதுகாக்கவேண்டுமென்பது அவரின் தணியாத ஆசை; இலட்சியம்.

கமலம், தகப்பனாரை மனதிற்குக் கொண்டுவருகிறாள்: கண்டிப்பான, கடுகடுப்பு நிறைந்த முகம்; எந்த நேரமும் பசிகொண்டிருக்கும் கண்கள்—அடங்கிய கரகரத்த குரல்; ஆறடி உயரமும் நல்ல பருமனுமான தேகம். பிள்ளைகளோடுமட்டும் புன்னகை செய்து கலகலப்பாயிருக்கும் சுபாவம். அவர் கண்டத்திலிருந்து வரும் குரல், தட்ட முடியாத கண்டிப்பு நிறைந்தது.

'...இப்போது நான் பப்பாவின் கட்டளைகளையெல்லாம் மீறி என்னையே அறியாமல் எவ்வளவு கள்ளத்தனங்கள் செய்கிறேன். பப்பா எவ்வளவு கண்டிப்பு நிறைந்தவர், என்னைப் பற்றி எவ்வளவோ பெரிய கனவுகளெல்லாம் கண்டுகொண்டிருக்கிறார். இப்படி நான் ஒருவரை காதலிக்கிறேன் என்று பப்பா அறிந்தால்......?'

கமலத்திற்கு மனதினுள்ளே பயம் பிதுங்குகின்றது. அவள் எல்லாவற்றையும் மீறி, சர்வமும் தன்னைப் பாலசிங்கத்தினிடம் ஒப்புக் கொடுத்துவிட்டதாக நினைத்தாள். பாலசிங்கத்தின் கடிதத்தை வரவேண்டிய நாளன்று பெற்றுக்கொள்ளத் தவறினால் அவளின் மனம் படுகின்ற பாடு, அடைகின்ற தவிப்பு ஆகியவற்றை வார்த்தைகளினுள்ளே அடக்கமுடியாது.

அந்த வேளைகள்தனிலெல்லாம் அவளுக்குப் பாலும் கசந்து, படுக்கையும் நொந்து, வானொலிப் பாடல்களும் வெறுப்புக்குரியதாகிவிடும்.

வானொலி பாடிக்கொண்டிருக்கின்றது. காதலி காதலனைக் காணாது ஏங்கிய நெஞ்சோடு தென்றலைத் தூதாக அனுப்பிக்கொண்டிருக்கின்றாள்.

சொனியின் தலையில் படீரென்று சுத்தியலால் அடித்து உடைத்து நொருக்கவேண்டுமென்று கமலத்திற்கு நெஞ்சினுள்ளே எரிச்சல் பொருமி எழுகின்றது.

மணி பன்னிரண்டு நாற்பத்தைந்து. வானொலியில் செய்தி அறிவிப்பு தொடங்குகிறது.

வெய்யிலில் குளிர் நிழலொன்று தெரிகிறது கமலத்திற்கு.

அவளின் நெஞ்சு படபடக்கின்றது. அச்சம், தவிப்பு, ஆனந்தம்.

அவன் சையிக்கிளிலே வேகமாக வந்துகொண்டிருக்கின்றான்.

சுருளான தலைமயிர் நெற்றியிலே புரள்கின்றது. சந்தன வர்ண சேட் சிவப்பான அவன் நிறத்திற்கு மேலும் வடிவளிக்கின்றது.

கமலம் வீதியினைத் துளாவுகின்றாள். வீட்டினுள்ளே பார்க்கின்றாள். பாத்றூமிலே தண்ணீர் சளசளத்துக் கேட்கின்றது. செல்லம்மா குளித்துக்கொண்டிருக்கின்றாள்.

விக்கினேஸ்வரன் பின்புறமிருந்து எதையோ தட்டிக் கொண்டிருப்பது, வர்ணொலி அறிவிப்பாளரின் குரலை மீறிக் கேட்பதால் அவன் தன்னுடைய சையிக்கிளைத் திருத்திக் கொண்டிருக்கின்றான். வீதியின் மருங்குகள் துடைத்து விட்டாற்போல நடமாட்டமின்றியுள்ளன.

எல்லோருமே சொல்லி வைத்து ஒளித்தாற்போல வீதியிலே வெறுமை.

கமலத்தின் நெஞ்சு விம்மித்துடிக்கின்றது. காதோரமாக வேர்வை நீர்க்கோடு இழுக்கின்றது. முகம் சிவந்து மாறுதல் காண, அவளுக்கு நெஞ்சினுள் எழுதியிருந்த மதுரமான எண்ணங்கள் யாவுமே மறந்துபோய்விட்டன.

மெதுவாக அவள் முன்னே சையிக்கிளை நிறுத்தி அவள் கையிலே சிறியதொரு பார்சலைக் கொடுத்தான் பாலசிங்கம். அவளின் விரல்களைத் தொடுகையில் இளஞ்சூட்டினை அவன் விரல்கள் உணர்ந்தன.

கமலத்தின் கைகள் நடுங்கின.

''போங்கோ போங்கோ யாரும் பார்த்தாலும்...''

கமலத்தின் குரல் தளுதளுத்தது.

''என்னை ஒருக்காப் பாருங்க...''

பாலசிங்கந்தான் சொன்னான்.

கமலம் நாணத்தோடு தலை நிமிர்ந்தாள். கண் இமைகள் படபடத்தன.

''என்னைப் போகவா சொல்லுறீங்கள்...''

பாலசிங்கத்தின் மெல்லிய குரல் கமலத்தின் இதயத்தினைத் தொட்டது.

அவளின் இதழ்கள் துடிக்க, கண்ணிமைக்காது சில கணங்கள் மௌனமாக நின்றாள்.

''நான் அப்ப போறன்...''

எதையோ சொல்வதற்கு கமலத்தின் வாய்துடித்து, கைகள் எழுந்து பின் தாமாகவே மௌனமாகின. சொல்லற்ற உணர்ச்சிகள் கண்களிலே மின்னின. அந்த வேளையிலே, வழமையினைவிட அவள் மிகவும் அழகாக இருக்கின்றாள் என்று பாலசிங்கம் மனதினுள்ளே நினைத்துக் கொண்டான்.

''எல்லாம் கடிதத்தலை விபரமாக எழுதியிருக்கிறன்.''

விறுக்கென்று அவன் சையிக்கிள் பெடலை மிதித்தான். கமலம் அவன் போவதனை நின்றும் பார்க்காமல் தன்னுடைய அறையினுள்ளே சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

ஐ ஐ

அந்தப் பார்சலைப் பத்திரமாக அவிழ்த்து, அதனுள் இருந்த பொருட்களை வெளியே எடுத்து மேசையில் வைத்து விட்டு பார்சல் மடித்துவந்த கடுதாசியையும் நூலையும் கவனமாக மடித்து தலையணைக்குக் கீழே ஒளித்ததுபோல வைத்தாள் கமலம்.

மேசையிலே ஒரு புத்தகம், நான்கு கைலேஞ்சிகள், கோயா பவுடர், கிஸ்மீ சொக்கிலெற் ஆகியவை பரவி யிருந்தன.

அவற்றை ஆசையோடு சில நிமிஷங்களுக்கு பார்த்த படியே நினைவுகளில் லயித்துப்போய் இருந்தாள் கமலம்.

அவனைப் போகச் சொன்னபோது, அவன் தயக்கம் மிதக்கக் கெஞ்சிய குரலும், பின் வேகமாகச் சைக்கிள் பெடலை மிதித்துக்கொண்டு போன அவசரமும் அவளின் முன் உருவெளித்தோற்றங்காட்டி மறைந்தன. இன்னும் சில நிமிஷங்கள் அவனைப் பார்த்துக் கதைத்திருக்கலாமே யென நெஞ்சு கழிவிரக்கப்பட்டது.

கிஸ்மீ சொக்கிலெற்றின் உறையை அகற்றி, அதைத் தனியே எடுத்து கிஸ்மீ எழுத்துக்களை வாய்க்குள் முணு முணுத்து வாசிக்கையில் அவன் குறும்பை எண்ணி மனத் தினுள் சிரிப்பும், உடலினுள் சிலிர்ப்பும் அரும்பி மலர்ந் தன கமலத்திற்கு.

கமலத்திற்கு அவளது தகப்பனார் டசின் கணக்கிலே தான் எல்லாவற்றையும் வாங்கிக்கொடுப்பார், அத்தோடு நின்று விடாது இன்னும் வேண்டுமா, வேண்டுமா என்று துளைத்துக்கொண்டே இருப்பார். ஆனால் அவர் வாங்கிக் கொடுக்கும் விலையுயர்ந்த பொருட்கள் எல்லாலாவற்றை யும் விட பாலசிங்கத்தின் இந்த அன்பளிப்பு மிகப் பெறு மதிவாய்ந்த பொக்கிசமாக கமலத்திற்குத் தோன்றுகின் றது.

இப்போதும் அவளின் வீட்டுக் குளிர்சாதனப் பெட்டி யினுள் தின்பண்டங்களும் இனிய பானங்களும் வெகுத்துப் போய் உள்ளன.

பாலசிங்கத்தைக் கமலம் சந்தித்து ஆறு மாதங்கள் கழிந்து விட்டன.

அந்த நாட்களின் பரபரப்பும் இனிமையும் நிறைந்த நினைவுகளையெல்லாம் நெஞ்சினுள்ளே நிறைத்து அவற்றைத்

திருப்பத் திரும்ப எண்ணிப் புன்னகைப்பதிலும் மனதி னுள்ளாகவே பிணங்கிக்கொள்வதிலும் அவர்கள் வெறி பிடித்திருக்கின்றூர்கள்.

ஆறு மாதங்களின் முன்னே, ஒரு செவ்வாய்க்கிழமை யன்று அந்தச் சம்பவம் நடைபெற்றது. அவள் பள்ளிக் கூடத்திற்குச் சென்றுகொண்டிருந்தபோது அவள் சென்று கொண்டிருந்த கார் வழியிலே பழுதாகி நின்றுபோய் விட்டது. கார் டிரைவர் தங்கராசாவும் காரைப் போலவே வயதுபோனவர். ஊரிலேயுள்ள அந்த ஒரேயொரு காரினை வாடகைக்கு ஓட்டுபவர். நல்ல மனிதர். பார்வைக்கு பயங்கரமூட்டும் முறுக்கு மீசையும், நரைத்த பாகவதர் குடுப்பும், தடித்த தேகமும், நிறம் மாருது என்றுமே அணிந்துகொள்ளும் காக்கி நிறச் சேர்ட்டும் அவருக்குச் சொந்தமானவை. இரக்கமும், கண்டிப்பு நிறைந்த நாணய மும் உள்ள தங்கராசாவுக்கு ஊரிலே பயபக்தியும், மரியாதையுமிருந்தது.

அதனுலேதான் கணபதிப்பிள்ளையின் அபிமானத்திற் குப் பாத்திரவாளியாகிவிட்டார் தங்கராசா.

தங்கராசா மீசையைத் தடவிக்கொண்டே காரை உடனே புறப்படச் செய்வதற்காகப் படாதபாடுபட்டுக் கொண்டிருந்தார். காரைச் சுற்றி இரண்டொரு சிறுவர்கள் நிற்பது சினத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது. அவர் களை விரட்டியபோது, தொலேவிலே போய்நின்று அவரு டைய மீசையைப்பற்றி உரக்கக் கூவிவிட்டு பூவரச மரத் திலே ஏறிக்கொண்டு, இலேபிடுங்கி குழல் செய்து ஊதிக் கொண்டிருந்தனர். கர்ணகடூரமான ஊதல்கள். மீண்டும் திறந்த பொனெற்றுக்குள் தலேமூழ்கிவிட்டு ஒன்றுஞ் செய்ய முடியாத நிலேயில் தங்கராசா வேர்வை வழியவழியப் பரிதாபகரமாக யாராவது உதவிக்கு வருவார்களா என்று பார்த்துக்கொண்டு நின்றபோதுதான் அந்தச் சிவப்பு நிற மான சுருண்ட தலேமுடியை உடைய குறுகுறுக்கும் கண் களின் சொந்தக்காரனுன இளைஞன் அருகே வந்தான்.

காருக்குள்ளிருந்த கமலாவையும் காரையும் அவன் மாறி மாறிப் பார்த்தான். பிறகு தன்னைப் பிடிக்காத முகபாவத்தோடு நின்ற தங்கராசாவைக் கேள்விக் கண்களினால் பார்த்துச் சிரித்தான். சிநேகபாவமான புன்சிரிப்பு.

“காரைத் திருத்தித் தரட்டுமா?”

அவனது கேள்விக்குப் பதிலேதும் சொல்லாது, நம்பிக்கையீனமாகவும் துவேஷத்தோடும் அவனைப் பார்த்தார் தங்கராசா. “உன்னால் இயலுமா?” என்று நெற்றிச்சுருக்கங்கள் கேட்டன.

“பயப்படாதீங்க...நான் திருத்தக்கூடியவன்...”

தங்கராசாவின் மௌனத்தைக் கலைத்தது கமலத்தின் குரல்:

“டைவர், பள்ளிக்கூடத்திற்கு நேரமாச்சுது, சுறுக்காகத் திருத்தச் சொல்லுங்கோ..”

கணப்பொழுதே தயங்கிய தங்கராசா அவனை ஏறிட்டார்:

“சரி, வாரும் ”

அவன் தன்னுடைய சேர்ட்டைக் கழற்றி, ஓரமாக நின்ற வேலியின் பூவரசங்கதியாலில் தொங்க விட்டுவிட்டு, அந்த வயோதிபமான காரின் நோயை அறிவதற்குத் தயாரானான். சினத்துடனிருந்த கமலம் அவன் காரைத் திருத்துவதை இடையிடை கவனித்துக்கொண்டிருந்தாள். தூரத்தில் பூவரச மரத்தில் குழல் ஊதிக்கொண்டிருந்த சிறுவர்கள் மரத்திலிருந்து இறங்கிவந்து காருக்கு கொஞ்சம் தள்ளிநின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். ஒரு ஆட்டுக்குட்டி தாயைத்தேடிக் கத்தியவாறு காருக்கு அருகாக ஓடிவந்தது. கமலத்தின் அழகிய தங்கக் கடிகாரத்தில் முட்கள் நேரத்தை விழுங்கிக்கொண்டிருந்தன. அவன் மிகவும் சுறுசுறுப்போடு இயங்கினான். துரிதமான அந்தக் கைகளையும், கடமையிலேயே திளைத்துப்போன கண்களையும்

வியப்போடு சில நிமிஷங்கள் தன்னைமறந்து கவனித்தாள் கமலம். சில நிமிஷங்களில் கொழுப்பும், கரியும் படிந்த கைகளைத் துடைத்துக்கொண்டே காரை ஸ்ராட் செய்தான். கார் புறப்பட ஆயத்தமாய் உறுமியது.

"இப்போ எல்லாஞ் சரி. பற்றறியும் கொஞ்சம் வீக் காய் இருக்குது. சேவிசுக்குப் போய் அதிக நாள்ப் போலை இருக்குது "

தங்கராசா மனம் நிறைந்த புன்னகையோடு அவனைப் பார்த்தார். அவனுக்கு முகமெல்லாம் துளிர்த்த வேர்வை, இடது கன்னத்தில் கரி புகைபூசியிருந்தது. இப்போது அவனில் அவருக்கு வசீகரமொன்று அரும்பிற்று. வெறுப் போடு தொடங்குகின்ற அநேக அறிமுகங்கள் காலப் போக்கிலே ஆழப்பதிந்த உறவுகளாகி விடுவதை அவர் அறியாதவரல்ல.

கமலம், தங்கராசாவைக் கையால் அழைத்தபடியே ஹாண்பாக்கைத் திறந்தாள்.

"இந்த ஆளுக்கு எவ்வளவு கொடுக்க வேணும்?"

பாலசிங்கம் கமலத்தை உற்றுப் பார்த்தான்.

"இல்லையுங்கோ... நான் ஒரு உதவியாகத்தான் இதைச் செய்தனுன். கூலிக்காகச் செய்ய இல்லை..." அவனுடைய பதிலுக்கு கமலம் எதுவும் கூறவில்லை.

தங்கராசா அவனை மேலுங்கீழுமாகப் பார்த்தார். அவனுடைய திறமை, பெருந்தன்மை, நாகரிகம் பொதிந்த பேச்சு ஆகிய யாவுமே அவரைக் கவர்ந்துவிட்டன.

"தம்பியினுடைய பெயர் என்ன? என்ன செய்கிறீர்?"

"எனக்கோ?"

அவன் புன்முறுவலோடு கூறினான்.

"பாலசிங்கம், நீங்க போறவழியிலே—அந்த வைரவ கோயில் முடக்கிலேயுள்ள கரூச்சிலே வேலே செய்யிறன்..."

தங்கராசா நெற்றி சுருங்க மீசையை உருவிக்கொண்டார்.

"எடடே அந்த ஆலமரத்துக்குப் பக்கத்திலேயுள்ள கருச்சொ? எத்தினையோதரம் நான் அதாலே வந்து போயிருக்கிறன். ஒருநாளும் உம்மைக் கவனித்ததில்லே. நீர் அப்ப ஒரு மெக்கானிக்கென்று சொல்லுமன்..."

பாலசிங்கம் கமலத்தைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே துணிந்த குரலிற் சொன்னுன்,

"ஆனுல் ஒவ்வொருநாளும் நான் உங்களைக் காணுறனுன்..."

அவன் சொன்ன பதிலிலேயே கமலத்திற்கு மனத்திற்கு அவளை அறியாமலே சிரிப்புப் பொங்கியது. இவன் மகா குறும்புக்காரன் என்று மனதினுள்ளே நினைத்துக் கொண்டாள். தன்னை மீறிய துணிச்சலோடு அவனை அந்த நிமிஷந்தனிலே விழுங்கிவிடுகிறுற்போலப் பார்த்தாள் கமலம். அவனே ஒன்றுமே தெரியாத பாவனையிலே கதியாலில் தொங்கிய சேர்ட்டை எடுத்து அணிந்துகொண்டான். மறுநாள், அடுத்தநாள் இப்படியே ஆலமரத்தடிக் கரூச் வந்ததும் கமலத்தின் பார்வை ஆவலோடு அங்கே விழுந்தது. வெள்ளிக்கிழமைகளில், வைரவகோயிலில் காலையில் பாடசாலைக்குப் போகும்போது கற்பூரம் கொடுத்து தங்கராசாவைக்கொண்டு கொழுத்தி வழிபட்டாள் கமலம். அந்த இடைநேரத்திலே பின்சீற்றில் கமலத்தின் புத்தகங்களின் மேல் பாலசிங்கத்தின் கடிதத்தை உறைக்குள் அடக்கிய புத்தகமும் சேர்ந்துகொண்டுவிடும். இப்படியே பார்வையும் பார்வையும், சிரிப்பும் சிரிப்பும், கடிதங்களும் கடிதங்களும் நளினமாயும் களவோடும் சந்தித்துக்கொண்டன.

தகப்பனை வற்புறுத்தி அடிக்கடி சினிமாப்படம் பார்ப்பதற்கு நகரத்துத் தியேட்டருக்குச் செல்வாள் கமலம். பார்க்கும் படங்களின் பாடல்களெல்லாம் அவளிற்கு மனப்பாடம். சிறு வயதிலிருந்தே கேட்கும் கதைகளோடும், பார்க்கும் சினிமாப் படங்களிேனோடும் ஒன்றிப்போய்விடும் இயல்பினை அவள் தன்னுடைய குணமாகக் கொண்டு விட்டாள். சினிமாப் படத்திலே காதலனின் காதலியை அணைத்துத் தகிக்கின்றபோதிலே அவளும் அந்த உணர்வின் வயப்பட்டுக் கிறங்கிப்போயிருப்பாள். பிரிவுதாளாத விரகத்தீயினிலே வெந்து காதலி கண்ணீர்விட்டு அழுகின்ற வேளைகளில் கமலத்தின் கண்களும் நனைந்துவிடும். விசும்பல்களை வாயினுள்ளே விழுங்கிக்கொண்டு பொருமுவாள் அவள். படம் முடிவடைந்து வீட்டிற்குப்போய், பிறகும் பலநாட்களுக்கு அவள் அந்தச் சினிமாவின் கதையோடு மானசீகமாக உலவிவருவாள். அந்தப் பிரமையின் ஆழ்தலின்போது தானும் அதுபோலவே காதலிக்கவேண்டும், கண்ணீர் விடவேண்டும், முடிவிலே எல்லாத் துன்பங்களும் நீங்கி காதலின் வெற்றிக்களிப்போடு காதலனின் இறுகிய அணைப்பின் பரவச சுகத்தினுள்ளே புதைந்துபோய்க் கிடக்க வேண்டுமென்று அவள் அடிக்கடி நினைத்தாள். கனவுகளாகவும் கண்டு இன்புற்றாள். அகிலன், நா. பார்த்தசாரதி போன்றோரின் காதல் நவீனங்களோடு அவள் வாழ்ந்தாள். அந்தக் காதல் நவீனங்களிலே வருபவனைப்போன்ற, அவள் பார்த்து லயித்த சினிமாப் படங்களில் தோன்றுபவனை ஒத்த காதலனிற்காக அவள் ஏங்கிக் காத்திருந்தாள். கடைசியிலே தனக்கென்றே பிறந்து வந்தவனாக பாலசிங்கத்தைப் போற்றிக்காதலித்தும் வருகின்றாள்...

பாலசிங்கத்தைப் பற்றிய பூர்வீகம் எதுவுமே அவளுக்குத் தெரியாது. அவன் எங்கே பிறந்தான், அவனது குடும்பநிலை, உறவுகள் பற்றிய எதையும் பாலசிங்கம் அவளிற்கு எழுதியதில்லை. ஆயினும் தங்களுக்கிடையேயுள்ள ஏற்றத்தாழ்வு மலைக்கும் மடுவுக்கும் சமமானது என்றுமட்டும் அடிக்கடி எழுதிக்கொள்ளுவான். அவை

அவளுக்கு பழகிய வசனங்களாய், சொற்கூட்டங்களாய் மாறிப்போய்விட்டன. கமலத்தின் மனம் எதைப்பற்றியும் அக்கறைப்படவில்லை. அவளிற்குப் பாலசிங்கம் மட்டுந்தான் வேண்டும். வேறு எதைப்பற்றியுமே தனக்குக் கவலை வேண்டியதில்லை என அவள் நினைத்துக்கொண்டாள். பால சிங்கத்தின் புன்னகை ததும்பும் இனிய முகத்தினைப் பார்த் துக்கொண்டிருந்தால் போதும், கூழோ கஞ்சியோ குடித்து ஓலைக் குடிசையிலே வாழ்ந்திருக்கமுடியும் என அவள் நினைத்திருந்தாள்.

ஒரு நாள் காரிலே போகின்றபோது, வழியிலே பால சிங்கத்தைக்கண்ட தங்கராசா புன்னகையோடு சொன்னார்.

''நல்ல குணமான பொடியன்.. கெட்டிக்காரன்... முன்னுக்கு வரக்கூடியவன்...''

அந்தக் கணந்தனிலே கமலத்திற்கு மனம் முழுவதுமே ஆனந்தம் மலர்ந்து பொங்கியதாயினும் அவள் எதுவுமே பேசவில்லை.

முன்பாயின் காருக்குள்ளே போகின்றபோது கமலம் மிகவும் பரபரப்போடு விளங்குவாள். வழியில் காணுகின்ற எதைப்பற்றியும் வேடிக்கையான விமர்சனங்கள், அனு தாபங்கள், முனகல்கள், சிரிப்புகள். பள்ளிக்கூடத்திலும் அவளிருக்குமிடமெல்லாம் களிப்பும் கலகலப்புமே குரலிட் டுக் கும்மாளமிடும். இப்போதோ அவள் தலைகீழாக மாறிப்போய் விட்டாள். மௌனத்தினுள் ஆழ்ந்து கன வுலகினுள்ளே சஞ்சரிப்பவளாக அவள் மற்றவர்களுக்கு தோற்றம் கொடுக்கின்றாள்.

பாலசிங்கமும் முன்பு போல வேலையில் ஒழுங்கில்லை. ஆனால் தன்னுடைய நடையுடை பாவனையில் பெரிதும் சிரத்தை வைத்து நடந்தான். அவன் எழுதிய கடிதத்திலே பின்வருமாறு எழுதியிருந்த வசனங்கள் அவளிற்கு மனப் பாடமாகிவிட்டது. அவனுடைய புகைப் படத்தை ரகசிய மாகப் பார்த்துக் கொண்டிருக்கும் போதிலே கமலத்தினைப்

பார்த்து அவன் அந்த வசனங்களைச் சொல்வதாக அவள் பிரமை கொள்ளுவாள்......''வாழ்வானது காதலினுலேதான் இன்பக்காவியமாக மாறுகின்றது. அந்த இனிய காவியத்திற்காக எந்த வேறுபாட்டையும், வித்தியாசங்களையும் உதறித்தள்ளி விடுவோம். அதை உறுதியாகக் கொள்வோம்...''

§ § §

வீதியில் நின்ற இலுப்பை மரம் பூக்களைச் சொரிந்து கொண்டிருப்பது பார்வைக்கு ரம்மியமாக இருந்தது. மாலை நேரத்து மஞ்சள் வெய்யில் அந்த வீதிக்கே மினுமினுப்பையூட்டியிருந்தது.

கமலம் யன்னல் வழியாகப் பார்த்து நிற்கையில், வள்ளிப்பெட்டை அள்ளுகொண்டையுடன், சிவப்புநிறச் சேலையைக் குறுக்குக் கட்டாகக் கட்டிக்கொண்டு கம்பீரமாக வந்து கொண்டிருந்தாள். அவள் கறுப்பியாயினும், அந்தக் கறுப்பு நிறமே அவளிற்கு அழகான தோற்றத்தையும் வசீகரத்தையும் கொடுத்திருக்கின்றது. நீண்ட மூக்கு, வெற்றிலை போட்டுச் சிவந்த உதடு. பளபளக்கும் கண்கள். முப்பத்தைந்து வயதேயாயினும் அதைவிட இளமை கூறும் சுறுசுறுப்பான முகம். அவளைப் பார்க்கையில் கமலத்திற்கு மனதினுள்ளே இனந்தெரியாததோர் துவேஷம் உருக்கொள்வதுண்டு. அவள், அவர்களின் வீட்டிலே சென்ற சில மாதங்களாக அரிசி, மிளகாய் ஆகியவற்றை வறுத்தும் இடித்தும் வருகின்ருள். அந்த வீட்டிற்கு அவளை அரிசி, மிளகாய் இடிப்பதற்கு ஒழுங்கு செய்து கொடுத்தது தங்கராசா. அவள் மிகவும் கண்டிப்பும், நாணயமும், சுயகௌரவமுமுள்ளவள் என்று அவளைப் பற்றி தங்கராசா செல்லம்மாவிடம் கூறியபோது, செல்லம்மா கேலியாகக் கண்களைச் சிமிட்டிக் கொண்டு சிரித்தாள்.

''ஓமோம் கண்டகண்ட சாதியளுக்கெல்லாம் இப்ப நாணயமும், கௌரவமும்தான் வந்திட்டுது. இந்த மாதிரி

நீங்களெல்லாம் அவையளைப் பற்றிச் சொல்லுறதாலே தானே அவையளுக்கும் தங்களையறியாமலே கெறு வந் திட்டுது ..''

செல்லம்மா அப்படிச் சொன்னதை தங்கராசா விரும்பவில்லை என்பதனை அவரின் நெற்றிச் சுருக்கங்கள் காண்பித்தன. மீசையைத் தடவிக்கொண்டு ஆறுதலான குரலிற் சொன்னார் தங்கராசா;

''நீங்க நினைக்கிற நாளெல்லாம் எப்பவோ போயிட் டுது. இந்த நாளிலை நாங்க எவரையும் ஏளனமாக நடத்தேலாது. காலம் நல்லா மாறிப்போச்சுது ''

வெடுக்கென்று திருப்பியடித்தாள் செல்லம்மா.

''காலம் மாறினப்போலை எங்கடை பரம்பரைப் பழக்க வழக்கங்கள் மாறிப் போயிடமுடியுமோ?... வள்ளிப் பெட்டை முற்றத்திலை நின்று மா இடிக்கலாம்... ஆனல் வீட்டுக்குள்ளை வந்து எங்களோடை சமனுக இருக்க முடியுமோ?...''

தங்கராசா சிறிது நேரம் மௌனமாகி விட்டுச் சிரித்தார்,.

''இப்ப நான் வீட்டுக்குள்ளை விடுகிறதைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. வள்ளிப்பெட்டையின்ரை குணத்தை நேரத்தோடை சொன்னன். உங்களுக்கு அவளை வேலை செய்விக்கவிரும்பமில்லையெண்டால் விட்டிடுங்க...''

செல்லம்மா சிறிது தணிந்தாள்.

''சரி, அவளை நாளைக்கு வந்து மா இடிக்கிறதுக்கு அரிசியை ஊறப்போடச் சொல்லிவிடுங்க...''

மறுநாள் அவள் காலையில் வந்து ஆறு கொத்து அரிசியை நீரில் ஊறப்போட்டு, மாலையில் இடித்துக் கொடுத்தாள். அவளை இடித்த மாவை அரிக்கவிடாமல் தானே அரித்தாள் செல்லம்மா. அப்போது வள்ளிப்

பெட்டை வாய்க்குள்ளே புன்னகை செய்து கொண்டாள். தன்னுடைய கை மாவிலே பட்டுவிடக்கூடாதென்றுதான் செல்லம்மா அந்த ஏற்பாட்டினைச் செய்தாள் என்பதனை வள்ளிப்பெட்டை அறிவாள். ஆயினும் மறுமுறை தனக்குக் கைமூட்டுகள் நோவெடுக்கிறதாக செல்லம்மா கூறி அவளையே மா அரிக்கச் சொன்னபோதிலே பதிலுக்கு அதே புன்னகையை உதிர்த்துக் கொண்டே வள்ளிப் பெட்டை மனதினுள்ளே நினைத்துக் கொண்டாள்: 'இந்தப் பெரிய சாதிக்காறர் தங்கதங்கடை வசதிபோலதான் எல்லாக் கட்டுப்பாடுகளையும் மாற்றியும், உண்டாக்கிக் கொண்டும் வருகினையோ?'

அவள் மாவிடிக்கின்ற முற்றத்தில் பெரிய மல்லிகைக் கொடி படர்ந்திருந்தது. பூவும்மொட்டும் வாசமுமாய் பொலிந்திருந்தது அந்தப் பசுமையான மல்லிகை. மா விடிக்க வருகின்ற நேரத்திலெல்லாம் கொத்தாகப் பூத்த மல்லிகைப் பூக்களைப் பிடுங்கி வள்ளிப்பெட்டை தன் அள்ளுகொண்டையில் சொருகிக் கொள்வாள். அதைப் பற்றி செல்லம்மா நையாண்டி செய்ய நினைத்த போதிலும், தங்கராசாவின் எச்சரிக்கை அதனைத் தடுத்து நிறுத்தி விடும். அரிசியை மூசிமூசி வள்ளிப்பெட்டை குற்றிக் கொண்டு நிற்பதனை ஈஸிசியரில் இருந்து கவனியாத பாவனை யில் ஆனல் கூர்மையாகப் பார்த்துக் கொண்டிருப்பாள் கமலம். அப்படிப் பார்த்துக் கொண்டிருந்த வேளையிலே தான் கமலத்தின் மனதிலே அந்த எண்ணம் முளைத்தெழுந் தது. கமலத்திற்கு விடுமுறை வருகின்ற நாளிலே பால சிங்கத்தினேடு கொள்ளும் கடிதத் தொடர்பு துண்டிக்கப் பட்டு விடும். தபாலிலே கடிதம் வந்து தற்செயலாகத் தகப்பனிடம் அது பிடிபட்டால் பிறகு என்ன நடை பெறும் என்பதனை அவள் நன்ருகவே அறிவாள். எனவே அவளிற்குப் பாலசிங்கத்தோடு தொடர்பு கொள்வதற்கு தூதொன்று தேவையாக இருந்தது. அதற்குத் தகுந்த வளாக வள்ளிப்பெட்டை கமலத்தின் மனதிலே தெரி

வானுள். எப்படி வள்ளிப்பெட்டையோடு இதனைக் கதைக் கத் தொடங்குவதென்று மனதினுள்ளே போராடிக் கொண்டிருந்த கமலம், வள்ளிப்பெட்டை மாவரிக்கத் தொடங்கும் போது சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு மல்லிகைப் பந்தற் பக்கமாகப் போனுள். அவள் வருவதைப் பற்றியும் அக்கறை கொள்ளாது அரிதட்டைத் தட்டித் தட்டி குறுணலை அள்ளிக் கொண்டு மாவரிப்பதிலேயே கவனமாயிருந்தாள் வள்ளிப்பெட்டை.

மல்லிகை மொட்டொன்றைக் கன்னத்தில் உரசிக் கொண்டே கமலம் மெதுவாகச் செருமினுள்.

''வள்ளிப்பெட்டை மாவரிக்கத்தொடங்கினுல் ஆட்கள் வாறதும் தெரியாதுபோலை...''

வள்ளிப்பெட்டை அரிதட்டை மாச்சுளகிலே வைத்து விட்டு கமலத்தை நிமிர்ந்து பார்த்துப் புன்னகை செய் தாள்.

அவள் சிரிக்கையில் கன்னத்திலே குழிவிழுகின்றது. பற்கள் முத்துக்களாகிப் பளீரிட்டன. என்ன அழகான பற்கள்; அந்தக் கணத்தினிலே தன்னை மறந்து இருதயத் திலிருந்து வந்த உணர்வோடு அவளைப்பற்றிச் சொல்ல நினைத்த கமலம், மறுகணம் சுயநினைவோடு அந்த வார்த்தை களை மனதினுள்ளே விழுங்கிக் கொண்டாள். இந்த வார்த் தைகளைக் கொட்டிவிட நினைத்ததற்குத் தன்னைத்தானே கடிந்தும் கொண்டாள்.

'வள்ளிப்பெட்டை, நீ சிரிக்கின்றபோது என்ன வடிவாயிருக்கிருய் தெரியுமா? உன்ரை சிரிப்பிற்கு முன்னுலே விஜயா பிச்சை வாங்கவேணும்... அவ்வளவு வடிவு. நீ... அவ்வளவு வடிவு!' எதையோ சொல்ல வந்த கமலம், சொல்லாமல் நிற்பதனை அவதானித்த வள்ளிப்பெட்டை அவளைப்பார்த்துத் தானே கேட்டாள்:

''என்ன பிள்ளை எதையோ சொல்ல வந்திட்டுப் பேச்சுமூச்சில்லாமல் நிற்கிறீர்?'' மறுகணத்தில் தன்னைச் சுதாரித்துக் கொண்டாள் கமலம்.

''இல்லையில்லை... வள்ளிப்பெட்டை நீ படம் பார்க்கப் போறதில்லையோ?...'' வள்ளிப்பெட்டை, அரிதட்டினுள்ளிருந்த குறுணலை உரலுக்குள் செப்பமாகக் கொட்டிக் கொண்டே சொன்னாள்:

''நல்ல கேள்வி கேட்டீர் பிள்ளை... எங்கடை அப்பர் எப்பவோ ஒருநாள் கூட்டிக்கொண்டு போயிருக்கிறார்... பிறகு ஒருக்காலும் நான் போனதில்லை...''

''ஆ... அப்பிடியோ?''

வியப்போடு கேட்டாள் கமலம்.

''அப்ப உன்ரை புருஷன் உன்னைப் படத்துக்குக் கூட்டிக் கொண்டு போறதில்லையோ? நீ போறதுக்கு கேக்கிற தில்லையோ?''

உரலுக்குள், உலக்கையை குத்தி வைத்து அதனை இரு கைகளாலும் பிடித்து, முகத்தை உலக்கையில் சாய்த்துக் கொண்டே அவளைப் பார்த்தாள் வள்ளிப்பெட்டை.

''அந்தாளின்ரை சம்பாத்தியம் வீட்டுச் சிலவுக்கே சரியாய்ப் போயிடும். நாலும் எனக்குப் பெட்டைக் குட்டிகள். அதுகளின்ரை பாட்டைப் பார்க்கிறதிலேயே பொழுதும் போயிடும்...''

வள்ளிப்பெட்டையின் முகத்தில் அந்தக் கணத்திலே துயரம் நிழலாடியது. கமலம் அதைக்கண்டு கொண்டாள்.

''வள்ளிப்பெட்டைக்கு நாலு பிள்ளைகளோ?...பாவம். உனக்கேதும் காசுக் கஷ்டமிருந்தால் என்னட்டைக் கேட்டுக் கொள்...''

வள்ளிப்பெட்டை நன்றியோடு அவளைப் பார்த்தாள்.

''கேட்டதே பெரிய உதவி பிள்ளை...''

கதையை முடித்துக்கொண்டு மீண்டும் மாவிடிக்கத் தொடங்கினுள் வள்ளிப்பெட்டை. கமலம் பிறகும் கதையை ஆரம்பித்தாள். வள்ளிப்பெட்டையைத் தனது வார்த்தை களுக்குள் வசப்படுத்தி எப்படியாவது தன் எண்ணத்தை நிறைவேற்றிவிட வேண்டுமென்ற ஆசையே அவளின் நெஞ்சினுள்ளே துடித்துக் கொண்டிருந்தது. பனைமரங்களில் சுழன்று சுழன்று பறந்தும், தங்கியிருந்து கணமாகுமுன்னர் விர்ரென்று பறந்து நிரைவகுத்து, வானிலே தொலைதூரம் போய்க் கண்களின் பார்வையை விட்டகன்று கரைந்து மறைகின்ற கிளிகளையும் பார்த்தபடியே கமலம் வள்ளிப் பெட்டைக்குக் கூறினுள்.:

''உன்ரை புருஷன் உன்னை நல்லாக வைச்சுப் பார்க் கிறவனே?''

வள்ளிப் பெட்டைக்கு அந்தக் கேள்வியே கட்டோடு பிடிக்கவில்லை என்பதனை முகக்கடுகடுப்பு துல்லியமாகக் காண்பித்தது.

''குமர்ப்பிள்ளை உமக்கேன் அந்தக் கதையளை...''

கமலத்திற்கு முகஞ்சுண்டிப் போய்விட்டது. மனதி னுள்ளே ஆத்திரம் பொங்கியது. வள்ளிப் பெட்டைக்கு பளார்பளாரென்று கன்னத்தில் அறைந்துவிட்டு, ஒரு புழுவினைப்போலப் பெருவிரலால் தரையிலே நசித்து அரைத்து துவம்சம் செய்தால் என்னவென்று மனப்பற்கள் நறுநறுத்துக் கறுவின. அதேவேளையில் உள்ளிருந்து விக்னேஸ்வரனின் குரல் கேட்டது.

''அக்கா, ஐஞ்சாறு மாம்பழங்கள் அழுகிப்போய்க் கிடக்குது. அதை எடுத்து வள்ளிப்பெட்டைக்கு கொடுக் கட்டோ? வீணுக எறியிற பழத்தை வள்ளிப்பெட்டை கொண்டு போய்த் தின்னட்டுக்கும்...''

வள்ளிப்பெட்டை உலக்கைப் பூணுக்குள் அடைந்து கிடக்கின்ற மாவை வழித்தெடுத்துச் சுத்தமாக்கிக்கொண்டு அலட்சியத்தோடு விக்னேஸ்வரனைப் பார்த்தாள்.

''இல்லைத் தம்பி. நாங்கள் நல்ல பழங்கள் வைத்திருக்கிறம்.''

கமலம் பற்களை நரும்பிக்கொண்டாள்.

வள்ளிப்பெட்டை அலுவலை முடித்துக்கொண்டு உரலை உருட்டிச் சுவரோரமாக விட்டுவிட்டு உலக்கையை ஓரத்திலே சாத்திஞள்.

''பிள்ளை கொஞ்சங் குடிக்கத் தண்ணீர் வார்த்து விடும்...''

களைப்போடு கேட்டவளுக்கு செம்பு நிறையைத் தண்ணீரைக் கொண்டு வந்து, குவித்த கைகளுக்குள் வார்த்து விட்டாள் கமலம். நீர் பருகிய திருப்தியோடு தலைநிமிர்ந்த வள்ளிப் பெட்டையின் நன்றி நிறைந்த பார்வையினைச் சாதகமாக்கிக் கொண்டு அங்குமிங்கும் பார்த்தபடியே மெதுவான குரலில் கதையை மீண்டும் ஆரம்பித்தாள் கமலம்.

''வள்ளி... நான் ஒரு அலுவல் உனக்குச் சொல்லுவன். செய்து தருவியா?''

அவளின் கெஞ்சும் குரலளித்த அதிசயத்தோடு வள்ளிப்பெட்டை கமலத்தின் முகத்தை ஊடுருவினுள். குரல் தடுமாறியது:

''என்ன பிள்ளை இது - என்னட்டை நீர் உதவி கேட்கிறீர்? பெரிய புதினமாக இருக்குது... என்னண்டு சொல்லுமன்... கட்டாயம் செய்து தாறன்...''

கமலம் உற்சாகமானுள்.

''செய்கிறது சரி. ரெண்டாம் பேருக்குத் தெரியப் படாது. வள்ளிக்கு இதுக்காக நான் எது வேணுமெண்டாலும் தருவன்...''

வள்ளிப்பெட்டையின் முகத்தில் மேலும் குழப்பங்கள் ஏறிக்கொண்டன. கேள்விக்கண்கள் படபடத்தன.

''என்னவெண்டு சொல்லுமன் பிள்ளை...''

கமலம் வள்ளிப்பெட்டைக்கு அருகாக வந்தாள். வெட்கத்தினுள் புதைந்த சொற்கள் மெதுவாக வெளி வந்தன, கெஞ்சினுற்போல. பணிகிருற் போல. இரகசியம் பரிமாறுகிருற்போல.

''வள்ளி நான் ஒருதருக்குப் புத்தகமொண்டு தருவன் கொடுத்து வாங்கித்தருவியோ ?''

உலக்கை தவறி பெருவிரலில் வலுவாக விழுந்தாற் போல திடுக்கிட்டு சிறிது பின்வாங்கினுள் வள்ளிப்பெட்டை.

''ஒரு சிவலைப்பொடியனும் போனகிழமை என்னட்டை இதேபோலை தான் கேட்டவன்... நல்ல பேச்சுக் குடுத்து விட்டனுன்...''

வள்ளிப்பெட்டையின் குரல் சற்றுக் கடுகடுக்க கமலம் நிலைமையைச் சமாளித்தவாறு பதறினுள்.

''வள்ளிப்பெட்டை உன்னுலை ஏலாட்டில் விட்டிடு... சரிசரி...''

வள்ளிப்பெட்டை பதிலேதும் பேசவில்லை. விறுவிறு வென்று அங்கிருந்து திரும்பியும் பாராமல் நடந்தாள்.

மல்லிகைப்பந்தலின் கீழே திகைத்துப் போய் நின்ற கமலத்தின் கோபமெல்லாம் இரண்டு சொற்களிற் பொரிந்தன.

''கீழ்சாதித் தேவடியாள்...''

## இரண்டாம் அத்தியாயம்

செல்லம்மாவுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. கொழும்பிலிருந்து வீடு திரும்பிய கணபதிப்பிள்ளை கடுகடுவென்ற முகத்தோடு வந்திறங்கி, யாருடைய முகத்தையும் ஏறிட்டுப்

பார்க்காது கமலத்தின் அலுமாரியைத்திறந்து கிளறிவிட்டு சில கடுதாசிக்கற்றைகள், பிரித்துப்பார்த்தபின் கட்டப் பட்ட பார்சல்கள் ஆகியவற்றைப் பெரிய மாட்டுத்தாள் உறையொன்றினுள் போட்டு, அருவருத்த நிலையில் கையினால் தூக்கிப்பிடித்தபடி ''கமலம்'' என்று அடிக்குரலில் உறுமியபோது கமலம் ஒன்றுமறியாதவள்போல வெல வெலத்து நின்றாள். எனினும் நிமிஷங்கள் கழியமுதல் அவளின் மனம் விஷயங்களை யூகித்துக்கொள்ள அவள் திக்பிரமையடைந்தாள் ''பப்பாவுக்கு எல்லாம் தெரிந்து விட்டது. இனி எப்படியும் அவரிடமிருந்து தப்பமுடியாது; கொலைதான் விழப்போகிறதோ... கடவுளே... என்னைக் காப்பாற்ற உம்மைத் தவிர வேறு யாருமே இல்லை...''

செல்லம்மா எதையும் செய்யவோ சொல்லவோ முடியாது பரிதாபகரமாகத் தகப்பனையும் மகளையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தாள். மகளின் நிழல் மீது தானும் தூசு விழவிடாத தகப்பனின் முகம் சிவப்பேறி, குரல் உரத்துப் பயங்கரமாக மாறியது இதுதான் முதல் தடவை. பருத்த அவளின் தேகம் அச்சத்தினால் நடுங்கிக் கொண்டிருந்தது. கணபதிப்பிள்ளையோடு வாழ்ந்து முடிந்த காலத்தினுள் இப்படி ஒரு நாளாயினும் அவர் முகத்தில் கடுகடுப்பு ஏறியதனைக் கண்டதில்லை செல்லம்மா.

கணபதிப்பிள்ளை கையில் வைத்திருந்த பையினைக் கொண்டுபோய் முற்றத்திலே எறிந்துவிட்டு, மண்ணெண் ணெயை அதன்மேலே ஊற்றியபின் நெருப்புக்குச்சியினைக் கிழித்து வைத்தார். தீ அவரின் கோபமாகி எரிந்தது. புதிய துணிகளும், கடுதாசியும் பொசுங்கி எரியும் நாற் றம் முற்றமெங்கும் மணத்தது. செல்லம்மா எதையோ மனதினுள் நினைத்தவளாய் பின்பக்கத்துக் கேற்றைப் போய் இழுத்துப்பூட்டினாள். எதையுமே கணபதிப்பிள்ளை யிடம் கேட்பதற்கு அவளின் மனம் துணிந்திடவில்லை.

எதையாவது பேசினால் என்ன நடக்குமென்பதனையும் அவள் அறிவாள். மௌனமாக, பூக்கள் பொலிந்து மணங்கமழு கின்ற மல்லிகையையே பார்த்துக்கொண்டு நின்றாள். மனந் தனிலோ அளவற்ற குழப்பங்கள் சக்கரங்களாயாடிக் கொண்டு அவளைக் கதிகலக்கின.

கமலம் முகந்தாழ்ந்து விசும்பினாள்.

''உன்னுடைய மகளை என்ன லட்சணமாய் வளர்த் திருக்கிறாய் பார்த்தியா?''

முதன்முதலாக அப்போதுதான் வாயைத் திறந்தார் கணபதிப்பிள்ளை. தகப்பனுடைய உறுமலைக் கேட்டுப் பயந்து தன்னுடைய அறைக்குள்ளே ஒளித்திருந்த விக்னேஸ்வரன், பன்றிமுட்களாய்க் குத்திட்டு நிற்கும் தலைமயிரை அழுத்தித் தடவிக்கொண்டே தண்ணீர் குடிப் பதற்கு வருபவன்போல மெல்லரவாக விறுந்தைக்கு வந்து தூணடியிலே மறைவாக நின்றான்.

''எங்கையோ கிடந்த எளியசாதி நாய்க்கு கடிதம் எழுதியிருக்கிறாள் உன்னுடைய மகள்''

அருவருப்பான குரலிலே மீண்டும் கூறத்தொடங்கினார் கணபதிப்பிள்ளை. ''...அவனைத்தான் கலியாணமும் முடிக்கப் போறாளாம் முடிச்சும்வை...''

செல்லம்மா விறைத்துப் போனாள். அந்தச் சொற்கள் அவளின் இருதய அந்தரங்கத்தின் ஆசைகளில் அதிர்ச்சி யோடு மோத, அவள் வன்மத்தோடு மகளைப் பார்த்தாள்.

''என்ன என்ன? ''

''இவளுக்கு நாங்கள் கொடுத்துவளர்த்த செல்லத் துக்கு இவள் என்னத்தைத் தேடித் தந்திருக்கிறாள் பார்த் தியா? ஊரிலை நான் எவ்வளவு மானம்மரியாதையோடை உலாவிவந்தன். நான் றோட்டாலை நடந்துபோனால் எல் லாருமே ஒதுங்கிநின்று வழிவிடுவாங்கள்... அந்தப் பெருமை களையெல்லாம் குலைத்து நாசமாக்கவென்றே இவள் பிறந் திருக்கிறாள்...''

செல்லம்மாவின் சதைநிறைந்த முகத்திலே குரூரம் பொங்கிற்று. மூக்கு சினத்தில் சிவப்பேறியது.

''எங்கடை பரம்பரையிலேயே இல்லாத பழக்கம்... இவளைப் படிக்கிறதுக்கென்று அனுப்பினதாலே வந்த வினை தான் இது .. எவ்வளவு காசெண்டு உனக்கு அள்ளிக் கொட்டியிருக்கிறம்... இனி உனக்குப் படிப்பும் வேண்டாம் ஒரு அறுப்பும் வேண்டாம்...'' என்றவள் கெஞ்சுகிறார்ப் போல, ''இது வேறை ஆளுக்குந் தெரியுமோ?'' என்று கணபதிப்பிள்ளையைப் பார்த்துக் கேட்டாள்.

பரபரத்துத் தடுமாறிய செல்லம்மாவின் குரலினை கணபதிப்பிள்ளையின் தணிந்து ஆறுதலான குரல் அமைதிப் படுத்தியது.

''இல்லை; ரெண்டு பேரைத்தவிர இந்த விஷயம் வேறை ஒரு குருவிக்குத்தன்னும் தெரியாது .. அப்படி ஊருக்குள்ளை விஷயம் தெரிந்திருந்தால் இவளின்ரை சவந் தான் இதிலை இப்ப விழுந்துகிடக்கும் .. கந்தவனத்தின்ரை மகன் கணபதிப்பிள்ளை எவ்வளவு மானஸ்தன் என்பது எல்லாருக்கும் தெரிய வந்திருக்கும் .. நல்லகாலம் .. எண்டைக்கும் முருகன் என்னைக் காவாந்துபண்ணி வருகிறான்...''

''.. கடவுளே கடவுளே முருகா ''

பெருமூச்செறிந்தாள் செல்லம்மா.

''நாங்கள் இருந்தம்... என்ன பண்பாடோடையும் மரியாதையோடையும் இருந்தம். ஒருநாளும் ஆம்பிளையை நிமிர்ந்து பார்த்தறியம். கட்டின புருஷனுடைய முகத்தைத் தவிர வேறை முகத்தைக் கண்டறியம். வேலிக்கு வெளியாலை என்ன நடக்குதென்று ஒருநாளும் அறிஞ்சிருக்க மாட்டம் .. அந்தக் குலத்திலை பிறந்து ஒழுங்காயிருந்த உனக்கு யார் இந்த நாசவேலையைச் சொல்லித் தந்தது?''

செல்லம்மாவுக்கு உக்கிரமான கோபத்தினிடையேயும் கண்களில் கண்ணீர் துளிர்த்து மூக்கைச் சிந்திஞள்.

''கமலம் இஞ்சை வா.''

கமலம் கூனிக்குறுகியவளாய் கணபதிப்பிள்ளையின் முன்ஞகப் போய் நின்ருள். மனம் வெறுமையாஞற் போலவும், கனக்கிருர்ப்போலவும் அவளுள் உணர்ச்சிகள் மாறி மாறிப் புரண்டுகொண்டேயிருந்தன. நெஞ்சினைத் துளையிட்ட அதிர்ச்சியில் முகம் பரிதாபகரமாகத் தெரிந்தது.

''உன்னை ஒரு ராசகுமாரத்திமாதிரி அல்லவா வளர்த்தம்...''

கமலத்தின் தலையை அந்தச் சொற்கள் குனியவைத்தன.

''......''

''உனக்கு எதிலையாவது நாங்கள் குறைவச்சு வளர்த்தமா?''

செல்லம்மா கமலத்தின் நாடியைப்பிடித்து முகத்தை நிமிர்த்திஞள். அதே வேளையில் மிரட்சியோடு கணபதிப் பிள்ளையையும் பார்த்துக்கொண்டாள். கணபதிப்பிள்ளையோ அந்தக் கண்ஙகளிலேயே மனந்தரிக்காது நின்ருர்.

''இவ்வளவுக்கும் பதிலாகக் கடைசியிலை நீ என்ன செய்திருக்கிருய்? நல்லாக யோசித்துப்பார் ...'' அவரின் குரல் சற்றுத் தணிந்தது.

'' நீ ஒரு பணக்காரப் பொடியனை விரும்பியிருந்தாலும் பறுவாயில்லை......''

கணபதிப்பிள்ளை வெளியே பார்த்து சில கணங்கள் எதையோ யோசித்தார். முகத்தில் யோசனையின் விளைவாக கடுமை பிறந்தது ... 'சீ என்ன வேலை செய்திருக்கிருள் இவள்? என்ன மாதிரி இவளை வளர்த்தேன்! என்

னுடைய கௌரவம், பெருமை எல்லாமே இவளாலேதான் சிறக்குமென்று நாளிலும் பொழுதிலுமாகக் கனவு கண்டு கொண்டு வந்தேன். கடைசியிலே இவள் எல்லாவற்றை யுமே தகர்த்து தரைமட்டமாக்கி விடுவாளோ?... ...இதை ஒருபோதும் நான் விடப்போறதில்லை, என்னுடைய உயிருள்ளவரை விடப்போறதில்லை......, தானே தன் அமைதியைக் குலைத்துக் கொண்டவராய், '' எங்களின்ரை வீட்டு வாசற்படியிலே கூட ஏறுவதற்குத் தகுதியில்லாத ஒரு கீழ்சாதி நாய்க்கல்லவா இவள் கடிதம் எழுதியிருக்கி றாள்........,, என்றார் கணபதிப்பிள்ளை.!

இடிந்துபோனாள் செல்லம்மா. ''ஐயோ முருகனே!, '

கணபதிப்பிள்ளையின் வார்த்தைகள் கமலத்தையும் நிலைகுலைய வைத்தன, அவளுக்கு மூளை முற்றாகக்குழம்பித் தலையைச் சுற்றிக் கொண்டே வந்தது. ... சீ என்ன மாதி ரியான பொய்யை இவர் சொல்கிறார்? பாலசிங்கமா கீழ் சாதி அந்த வார்த்தைகளை ஏன் பப்பா கூசிக்கூசிப் பாவிக்கிறார்? என்னுடைய மனதினைக்குழப்பி மனதை மாற்றத்தானே இவர் இப்படியொரு அபாண்டமான பொய்யைக் கற்பிக்கிறார்? கீழ் சாதி நாய் என்று சொல் கிறாரே, வள்ளிப் பெட்டையின்ரை சாதி என்று சொன்னால் எனக்கு வெறுப்பாக வருமென்றுதானே இப்படியொரு அபாண்டம் சொல்கிறார் ... கமலத்தின் கண்களிலே பாலசிங்கம் வந்து நின்றான், அந்த அழகிய முகம், உறுதி யான உடல், கபடமறியாப் புன்னகை, நாகரிகமான பேச்சு, ஆண்மைக்கே பொருமையூட்டும் சுறுசுறுப்பு-அவனு அந்த பாலசிங்கமா கீழ் சாதி? பப்பா தன்னை முழு முட் டாளாக்க நினைப்பதனை எண்ணி அந்த வேளையிலேயும் அவள் மனதினுள்ளே சிரித்தாள். உண்மைக் காதலுக்குத் தான் எத்தனை தடை வரும்? இது எனக்கு முதல் தடை உண்மைக்காதலில் வெற்றி பெறுவதற்காக எத்தனை தொல்லைகள் வரினும் புன்னகையோடு தாங்கிக்கொள்

வேனென்று நான் பாலசிங்கத்திற்கு சத்தியவாக்கல்லவா கொடுத்திருக்கிறேன், ..... மரணம் வந்தாலும் அதிலிருந்து நான் மாறமாட்டேன் .. ... மாறவே மாட்டேன்.. .., !

இத்தனைக்கிடையேயும் திடீரென மனம் புரள்கிறது பப்பா கூறுவது போல பாலசிங்கம் கீழ்சாதி ஆளாக இருப்பாரோ? பாலசிங்கம் இதனை மனதினில் வைத்துக் கொண்டுதான் அடிக்கடி நாங்கள் இருவரும் மலைக்கும் மடுவுக்கும் சமமானவர்கள் என்று எழுதிவந்தாரோ?

கமலத்தின் யோசனைகளால் முற்றுகையிடப் பட்ட முகத்தினைப் பார்த்துவிட்டு செல்லம்மாவின் பக்கமாக பார்வையினைத் திருப்பினார் கணபதிப்பிள்ளை:

''அவன் யார் பகுதியென்று உனக்குத்தெரியுமோ? அம்பலவாணர் வீட்டுக்கு தேங்காய் பிடுங்கவாற சிவலைக்கணவதியின்ரை பொடியன்.. .....''

செல்லம்மா அறையிலிருந்து வெளியே போய் காறித் துப்பிவிட்டு மீண்டும் உள்ளே வந்தாள். விக்கினேஸ்வரனுக்கும் கமலத்தின்மேலே ஆத்திரம் வந்தது. அவன் ஒரு நாள் சைக்கிளில் போகும் போது சிவலைக் கணவதியிடம் அவனது சிநேகிதன் சுரேஷ் கிளிக்குஞ்சு பிடித்துத் தரும்படி கெஞ்சியதனைக் கண்டிருக்கிறான். கள்ளுமுட்டியும், தளர் நாருமாக வீதியில் திரியும் அவனுடைய மகனையா அக்கா ......... ?

விக்கினேஸ்வரனுக்கு நெஞ்சைப் பிய்த்த கவலையினோடு மீண்டும் தன் அறையினுள் போனான்.

சிவந்து வெடிக்கின்ற முகத்தோடு நின்ற தாயை ஏறிட்டாள் கமலம். அவளின் பார்வையை எதிர்கொண்ட சிலகணத்தால் கண்ணீர் மல்க விசும்பினாள் செல்லம்மா:

'' தங்கச்சி எங்கடை பரம்பரைக்கு அவப்பெயரைத் தேடித் தந்திடாதை ..... .. பப்பாவின்ரை சொல்லை நீ கேட்டு நடக்காவிட்டால் என்னுடைய பிரேதத்தைத் தான் காண்பாய்.......''

கணபதிப்பிள்ளை ஒரு தெளிந்த முடிவுக்கு வந்தவர் போல அடங்கிய குரலிலே சொன்னார்.

"கமலம்...... நடந்ததெல்லாம் கெட்ட கனவு மாதிரியே போயிடட்டும்..........ஏதோ தெரியாத்தனமாக நீ நடந்திட்டாய். இன்று முதல் எல்லாவற்றையுமே மறந்து போய்விடு......... உன்னைக் கலியாணம் முடிக்கிறத்துக்கென்றே உன்னுடைய அத்தான் அமரிக்காவிலே காத்துக்கொண்டிருக்கிறான் என்றதை மறந்துபோய்விடாதை......"

சொல்லி முடித்த கணபதிப்பிள்ளை மனதினுள்ளே நினைத்துக் கொண்டார். 'காலம் முன்பு போலை இல்லை...... பிள்ளைகளைக் கொஞ்சம் கண்டித்துப் பேசினாலும், அதுகள் போய் நஞ்சைக் குடித்து விடும். மெதுமெதுவாக அவளைச் சொல்லித் திருத்திவிடலாம்...... அதற்கிடையில் அந்தக் கேடுகெட்ட ருஸ்கலுக்கு முறையான பாடம் படிப்பித்தால் எல்லாஞ் சரியாகி விடும். இப்படியான விஷயங்களிற்கு அடியைப்போலை நல்ல மருந்து எதுவுமே கிடையாது...... பார்ப்பம். பார்ப்பம்..........'

## II

யன்னல்கள் பூட்டியிருந்தாலும் வீட்டினுள்ளிருந்து ஆளரவம் கேட்டுக்கொண்டிருந்தது அவளுக்கு ஆச்சரியத்தையளித்ததாயினும், நமக்கேன் பிறருடைய விஷயங்களைப்பற்றிய 'விடுப்பு' என்ற முகதோரணையிலே உதட்டைப்பிதுக்கிக்கொண்டே, "பிள்ளை...ஒருதரும் வீட்டிலை இல்லையோ?" என்று உரத்த குரலில் கூப்பிட்டாள் வள்ளிப்பெட்டை. அவளுடைய குழந்தையை ஆஸ்பத்திரியிலே விட்டு வந்திருக்கும் வள்ளிப்பெட்டை தன்னுடைய கூலிக்காசை வாங்கிச் செல்வதற்காகக் கணபதிப்பிள்ளையின் வீட்டிற்கு நேரத்தோடேயே வந்துநிற்கின்றாள். முதற் குரலுக்கு ஒரு பதிலுமில்லாமற் போகவே இரண்டாவது தடவையும் சிறிது உரத்தே கூப்பிட்டாள். "ஆரது?" என்ற ஆத்திரமான குரல், கதவு நீக்கலால் வள்ளிப் பெட்டைக்குப் பதில் கொடுத்தது. செல்லம்மா முகத்தை உர்ரென்று வைத்துக் கொண்டு, 'ஏன் வந்தனி' என்று கேட்டாள். காலையில் அப்படியொரு முகத்தினை முழிக்க வேண்டி நேரிட்டதே என்று மனதினுள் குமைந்தபடியே,

"மாவிடிச்ச காசுக்கு வந்தனான் பிள்ளை...என்ரை சின்னவனுக்கு சுகமில்லையெண்டு ஆஸ்பத்திரியிலை வைச்சிருக்கிறம் காசைத்தந்தீரெண்டால் நேரத்துக்குப் போயிடலாம்......'

என்றாள் வள்ளிப்பெட்டை. அவள் குரல் முடியுமுன் கதவு படீரென்று சாத்தப்பட்டது. நிமிஷங்களின் பின்பு விக்கி னேஸ்வரன் கதவைத் திறந்து கொண்டு, ஐந்து ரூபாத் தாளொன்றை அவளிடம் நீட்டியபடி, ''இனி நீ மாவி டிக்க வரத்தேவையில்லை. அம்மா சொன்னவ. மறந்து போயும் வந்திடாதை'' என்றான்.

வள்ளிப்பெட்டையின் வெற்றிலை போட்டுச் சிவந்த உதடுகளில் புன்முறுவல் மலர்ந்தது. பளபளக்கும் கண்க ளால் விக்னேஸ்வரனைப் பார்த்தவள் ஏளனம் பொலிந்த குரலிலே, ''நீங்கள் வெத்திலை வைச்சுக்கூப்பிட்டாலும் இனி நான் வரமாட்டன் ஏதவோ உங்களாலைதான் நான் சீவிக்கிறமாதிரிக் கதைக்கிறியள்... ..'' என்றவள் விடுக்கென்று வீதியில் இறங்கி ஓரமாகக் காறித்துப்பி விட்டு விறுவிறுவென்று ஆஸ்பத்திரிப் பக்கமாக நடந் தாள். மனதினுள்ளே சின்னக் குழந்தையைப் பற்றிய கவலை பாரமாக அழுத்திக் கொண்டிருந்தது.

செல்லம்மாவிடம் கூலிக்குரிய பணத்தினை வாங்கிக் கொண்டு இன்னும் ஐந்தோ பத்தோ கமலத்திடமும் கட னகப் பெறலாம் என நம்பி வந்த அவளுக்கு மிகவும் ஏமாற் றமாகப் போய்விட்டது. வேறொரு சந்தர்ப்பமாயிருந்தால் அந்தக் கூலிப்பணத்தையே முகத்தினில் வீசியெறிந்துவிட்டு வீட்டுக்குப் போயிருப்பாள் வள்ளிப்பெட்டை, இன்றோ, இன்று அவளின் எண்ணங்களின் மேல் மனக்குழப்பங்கள் பாரமாகி நசித்துக்கொண்டிருக்கின்றன. ஏழையாகப்பிறக் கின்ற அவலத்தினை எண்ணி அன்றுதான் அவளுக்கு அழ வேண்டும்போல இருந்தது. ஆனால் அந்த அழுகையினிடை யேயும் அவளுக்கு மனதினுள் கோபம் அக்கினியென எரிந் தது. 'காலும் கையும் முறிய உழைக்கிற எங்களின்ரை கஷ்டங்களுக்கு எப்போதுதான் விடிவுவரும்?'

சுந்தரம்பிள்ளை கடைமுடக்கினுல் அவள் திரும்பிய போது, மீசையைத் தடவிக்கொண்டே வந்துகொண்டிருந்த தங்கராசுவைக் கண்டாள் வள்ளிப்பெட்டை. கவலை போர்த் தியிருந்த முகத்தில் மீண்டும் மலர்வு கனிய அவரை நோக் கினாள் வள்ளிப்பெட்டை.

''என்ன பெட்டை, நேரத்தோடை எங்கை வெளிக் கிட்டிருக்கிறாய்?'' வள்ளிப்பெட்டை விஷயத்தைச் சொன் னாள். தங்கராசுவின் முகத்திலே வருத்தம் தேங்கிற்று. தேறுதலான குரலிலே அவளைப்பார்த்துக் கேட்டார்; ''வள்ளி, அப்ப பிள்ளையை ஆர் ஆஸ்பத்திரியிலை வைச்சி

ருக்கிறது? சிலவுக்கு என்ன செய்யிறது?''

வள்ளிப்பெட்டையின் முகம் கூம்பிற்று. கவலையோடு பதிலின்றி அவரைப்பார்த்தாள்; பார்த்தவள் எதையோ நினைத்துக் கொண்டு, ''என்ன செய்யிறதெண்டு எனக்கே தெரியேல்லை'' என்றாள்.

தங்கராசு சிறிது நேரம் யோசித்துக் கொண்டு நின்றார். பிறகு தன்னைச்சமாளிப்பவர்போல தலையை அசைத்தவராக ''சரி நானும் ஆஸ்பத்திரிக்குத் தான் போறன் .....வா போவம்.........'' என்றபடியே யோசனையோடு நடந்தார். இடையிலே கதையோடு கதையாக அவர், அவளிடம், ''இனி நீகணபதிப்பிள்ளை வீட்டுக்கு மாவிடிக்கப் போகாதை என்றார். அப்போது அவள் மனதினுள்ளே சிரித்துக்கொண்டாள். அவளின் பதிலையே கேளாதவராக, அவர் மெல்லிய குரலிலே, ''காசுள்ளவன் எல்லாரும் நஞ்சுப்பயல்களாய்த்தான் இருக்கிறாங்கள். நான் கணபதிப்பிள்ளையின்ரை குடும்பத்துக்குச் செய்த உதவிக்கு ஒரு அளவில்லை... ஆனால் நன்றி கெட்டதுகள் அதைமறந்திட்டுது ..... '' என்றார். வள்ளிப்பெட்டைக்கு ஆர்வம் மேலிட்டது:

''ஏன் அப்பு, உங்களுக்கு அவை என்ன செய்தவை?''

''நீ அங்கை மாவிடிக்கப் போகப்படாது ....எனக்கே இப்பிடிச் செய்தவங்கள் உனக்கு சாகக் கிடந்தாலும் தண்ணி கூடத்தராதுகள்.....'' பெருமூச்சு இழுபட தங்கராசு தொடர்ந்தார்.....

''நேற்று நடுராத்திரிபோலை, எனக்கு நல்ல பழக்கமான ஒரு பொடியனுக்கு நாலஞ்சு பேராகப் போட்டு அடிஅடியெண்டு அடிச்சுப் போட்டாங்கள், அவனுக்குப் பேர் பாலசிங்கம். திறமான மெக்கானிக், அவனை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போறதுக்கு காரை எடுத்தன். பெற்றோலும் இல்லை. கையிலை காசுமில்லை .... வேறை ஆரிட்டையும் கேட்கேலாதெண்டு கணபதிப்பிள்ளையரிட்டை ஓடிப்போனேன். ஐயா இப்படியிப்படிச்சங்கதி எண்டு சொன்னன்... அந்தாள் நான் சொன்னதை வடிவாகக் கேட்கவுமில்லை.: ஒரு சதக் காசுமில்லை .. நீ போகலாம் எண்டு சொல்லிவிட்டு கதவை மூஞ்சையிலை அடிக்கிறமாதிரி இழுத்துப்பூட்டிவிட்டுது...''

வள்ளிப்பெட்டை பரிதாபகரமாக தங்கராசுவைப்பார்த்தவள், முகத்திலே ஆறுதலான பாவனையை வரவழைத்துக்கொண்டு, மனதினை வருடி இதப்படுத்துகிறாற்போன்ற கனிவினோடு சொன்னாள்:

''அப்பு, நானும் கால்மை அங்கைபோனனுன்தான். அந்த இராட்சச மனுஷி எனக்கும் அதுபோலதான் செய்தது— சரிசரி இதெல்லாத்துக்கும் ஏன் வீணுய் மனம் சலிக்கிறீங் கள்?'' நன்றி பொசியும் கண்களோடு அவளையே நிமிஷத் திற்குள் விழுங்கினுர் தங்கராசு:

''ஏழைக்கு ஏழைதான் பெட்டை ஆறுதல்—! என்ரை மனத்திலை அளவு சொல்லேலாத வேதினை இருந்துது — உன் னேடை கதைச்சதிலையே அது கரைஞ்சு போச்சுது...— உன்னைக்கொண்டு போய் அந்த வீட்டிலை சேர்த்தனே எண்டு எனக்குப் பெரிய மனச்சஞ்சலமாயிருந்தது——''

தங்கராசா தன் மனதினை ஆறுதற் படுத்த ஒரு பக்கத் தால் முயற்சி செய்தபோதும், மறுபக்கத்தால் துயரின் வெம்மை மனதினை எரித்தது. பாலசிங்கம் மிக மோசமாக நையப்புடைக்கப்பட்டு அனுங்கிக்கொண்டு கிடந்த பரிதாப கரமான காட்சி கண்களிலும் நெஞ்சிலும் அடிக்கடி தோன் றிக்கொண்டிருந்தது. யாருடைய விஷயத்திலும் தலைப்போ டாது தானுண்டு, தன்தொழிலுண்டு என்றிருக்கின்ற அந்த இளைஞன் ஏன் அனுமதேயங்களினுல் தாக்கப்பட்டான் என்பதைத்தான் அவரால் விளங்கிக் கொள்ளமுடியவில்லை. தனக்கு அடித்தவர்கள் யாரென்பதை தனக்குத் தெரியாது என்று சொல்லி விட்டான் பாலசிங்கம்.

## மூன்ரும் அத்தியாயம்

இரவு முழுவதும் கண் விழித்திருந்தமையால் கமலம் அசந்து போய்த்தூங்கிக் கொண்டிருந்தாள். நேற்று அவள் சொல்லியனுப்பி நடு இரவிலே வீட்டுக்கு அருகாக இலுப்பை மரத்தடியில் காரோடு பாலசிங்கம் வந்து நின் ருன். இரவோடு இரவாக சில துணிமணிகளை மட்டும் எடுத்துக் கொண்டு அவள் அவனேடு வீட்டை விட்டு ஓடி வந்து விட்டாள்.

ஐம்பது மைல்களினைத் தாண்டி, இரவிலே அச்சத்தை யும் துணை சேர்த்துக் கொண்டு கடைசியாக அவர்கள் அங்கே வந்து விட்டனர். அந்தச் சின்னஞ்சிறிய கிராமம் நாகரிகத்தின் வசதிகளை அறியாதது என்பதனை அதன் ஒவ்வொரு மூலை முடுக்கும் உணர்த்திக் கொண்டிருந்தது.

பாலசிங்கம் அந்தக் குடிசையினை நன்ருகத் துப்பர வாக்கியிருந்தான். சாணத்தாற் பூசி பசுந்தாக இருந்தன சுவர்களும் நிலமும். புதிய கேத்தல், இரண்டு கிளாஸ், பன்பாய், பெட்சூீற், முகம் பார்க்கிற பெரிய கண்ணுடி, சிப்பு ஆகிய எல்லாமே புத்தம் புதியவை. அவற்றை எல்லாம் வாங்குவதற்காக, முந்தநாள் - இதுவரை காலமும் கையிலே பாதுகாப்பாகக் கட்டியிருந்த ரோமர் கைக்கடிகாரத்தை அவன் விற்று விட்டான். வயது போன அவனுடைய மாமி சின்னக்குட்டி இயல்பிலேயே வாய்க்காரியான அவளுக்கு அவனுடைய செய்கைகள் பிடிக்கவேயில்லை. அவள் மற்றவர் காதுக்கு கேட்டும் கேட்காமலும் சொன்ஞள். 'எங்களின்ரை அயலுகளுக்கை பொடிச்சியள் இல்லையெண்டோ இவன் புறத்தியிலை போய்ப் பொம்பிளை எடுத்துக் கொண்டு வந்திருக்கிருன்:

பாலசிங்கத்திற்கு சின்னக்குட்டியை அச்சுறுத்த முடியவில்லை. மெதுவான குரலிலே அவளை கொஞ்ச நேரம் கழித்து வீட்டுக்கு வரும்படி தந்திரமாகச் சொல்லியனுப்பி விட்டான். அவளை நிமிர்ந்து சினக்கத் துணிவே வரவில்லை பாலசிங்கத்திற்கு. சிறுவயதிலேயே தாயை இழந்து விட்ட அவனை வளர்த்து ஆளாக்கியவள் சின்னக்குட்டி. கஷ்டப்பட்டு மனஞ்சோர்ந்து பாலசிங்கம் நிற்கின்ற வேளைகளிலெல்லாம் சின்னக்குட்டியே அவனுக்கு எல்லாமாக நின்று ஆதரவளித்தவள் - சிவப்பு நிறமான, எந்த நேரத்திலும் சிடுசிடுத்தபடியிருக்கின்ற அவளை எப்பாடுபட்டாவது அங்கே வராது செய்து விடவேண்டுமென்று முடிவெடுத்திருந்தான் பாலசிங்கம்.

விடியற்காலையில் கமலத்தின் முதுகில் ஏதோ அண்டியது போல அவள் துயிலெழாத மனம் உணர்ந்தது. விழிப்பும் உறக்கமுமான உணர்வோடு கண்விழித்துச் சில கணங்கள் கழிந்து போன பின்னரே தான் தனது கதகதப்பான மென்மையான மெத்தையிலே படுத்திருக்கவில்லை என்பதனை அவள் உணர்ந்து கொண்டாள். வெள்ளைச் சுவர்கள், பளிச்சென்ற அலுமாரி, பாலமுருகனின் படம் ஒன்றுமே அவளுக்கு முன்பாக இல்லை. அவள் படுத்திருக்கும் கட்டிலில் எந்நாளும் நான்கு தலையணைகள் சிதறிக்கிடக்கும். இப்போது அவை ஒன்றுமே அவள் கண்களில், ஸ்பரிசத்தில் இல்லை. இப்போது பசுமையான வெறுந்திண்ணை, ஓலைக்கூரை மங்கிய வெளிச்சம் சிந்துகிற லாம்பு, புதிய மணம் மணக்கும் விலைகுறைந்த பெட்சூீட், திரைச்சீலையோ, கதவோ

இல்லாத வாசல் வழியாகத் தெரியும் கறுத்து வளர்ந்த பனைமரங்கள், செம்மண் சாணிக் கும்பங்கள்........ தன்னை மறந்த திகைப்பிலே கமலம் நித்திரை விட்டெழுந்தாள். அவளின் முன்னே முற்றிலுமொரு புதிய சூழல் திரை விரித்திருந்தது.

எங்கிருந்தோ அண்டங்காகம் கரையும் சத்தம் கேட்கிறது. எண்ணங்களைச் சிதறிடவைக்கும் தலைவலியைத் தோற்றுவிக்கும் இரைசல் அது.

மெல்ல அவளுக்கு எல்லாமே நினைவுக்கு வருகின்றது. தன்னுடைய சகல சுகபோகங்களையினையும் துறந்து விட்டு அவள் பாலசிங்கத்தோடு அவனுடைய வீட்டிற்கே ஓடி வந்து விட்டாள். கூழோ கஞ்சியோ குடித்தாயினும் இனி அவள் அவனோடுதான் வாழ்வாள். இனி அவளுக்கு அவன் தான் தெய்வம். அவன் தான் செல்வம். அவன் தான் எல்லாம்.

இரவு முழுவதும் தன்னை மறந்து உறங்கிப்போய் விட்டது அவளிற்கே மிகவும் வெட்கமாக இருந்தது. அவளிற்கும் அவனுக்கும் அதுதான் முதலிரவு. தன்னை மறந்து உறங்கிக் கொண்டமைக்காக அவள் தன்னையே கடிந்து கொண்டாள். அவளின் மனம் என்னவோ செய்தது. சினிமாப் படங்களிலும் நாவல்களிலும் முதலிரவைப் பற்றி இனிமையுணர்ச்சி ததும்பக் கூறப்பட்டிருக்கின்றவையையும் மிஞ்சி அவள் தன்னுடைய முதல் இரவினைக் கற்பனை செய்திருந்தாள்...... அழகான பூமாலைகளினால் அலங்கரிக்கப்பட்ட படுக்கையறை கமகமவென்று மணக்கும் ஊதுபத்தி, பால் பழத்தட்டுகள், வெளியே நிலவு பொழிகின்ற சந்திரன், அமைதியாக வீசி உடல்தன்னைத் தழுவும் தென்றல்; மோகமாகத் தவிக்கும் அவளும் அவனும்..... அவள் நெஞ்சு விம்மியவளாகத் தன்னைச் சுற்றிப் பார்த்தாள். ........ பன்பாய், திண்ணை, கரிபடிந்த லாம்பு, எதிரே தெரியும் பனைகள், சாணிக்குப்பம், செம்மண், வடலிக் கூட்டங்கள், குழந்தைகளின் வீறல்கள், கூவல்கள், மாட்டு வண்டில் கடகடப்புக்கள்.............

எரிச்சலினைக் கூட்டுகின்ற விதத்தில் கரைகிறது அண்டங்காகம். மாடொன்றின் அம்பா என்ற குரல் பனைவடலிகளை அதிர்த்துகிறது.

"பிள்ளை ......... இந்தாரும், வாயைக் கொப்புளிச்சுப் போட்டு தேத்தண்ணியைக் குடியுங்கோ... ..." ஒரு நடுத்தர வயதுப் பெண் தேத்தண்ணீர்க் கிளாசை அவளிற்கு பக்கத்தில் வைத்து விட்டு, தண்ணீர்ச் செம்பை அவளை நோக்கி நீட்டினுள், அந்தச் செம்பின் வயிற்றுப் பாகமெல்லாம் கரிபடிந்து கிடந்தது. கமலம், தன்னுடைய வீட்டு எவர்சில்வர் பாத்திரங்களையும், ஏலக்காய்வாசம் கமகமக்கும் பாற் கோப்பியையும் மனதிலே நினைத்துக்கொண்டாள்.

"அவர் எங்கை போயிட்டார்?"

அந்தப் பெண் அக்கேள்வியினை எதிர்பார்த்தவளேபோலப் பதில் சொன்னுள்.

"இப்ப வந்திடுவார். சொல்லி விட்டுத்தான் போனவர்", அவள் சொல்லி முடிக்குமுன், வேர்த்து விறுவிறுக்க வாசற்படிக்கு வந்துகொண்டிருந்தான் பாலசிங்கம். கையில் பற்பொடிப் பைக்கற்.

"அம்மணி, சுறுக்காகப் போய் வாளிக்குள்ளை தண்ணீர் அள்ளிக் கொண்டு ஓடிவா........"

சொல்லியபடியே கமலத்தைப் பார்த்தான் பாலசிங்கம்.

"நல்ல அலுப்பாய் இருக்கும். எழும்பி முகத்தை அலம்புங்கோ முகம் சரியாய் வாடியிருக்குது........"

கைகளை விரித்து அலுப்பை முறித்துக் கொண்டு பாயிலிருந்து எழுந்தாள் கமலம். உடலெல்லாம் நொந்து கெஞ்சிற்று.

"பற்பொடி இஞ்சையிருக்குது........."

கமலம் கையை நீட்டினுள். அவன் பற்பொடிப் பைக்கற்றை எடுத்து பற்பொடி காற்றிற்குப் பறக்காமல் அவளின் கையில் கொட்டினுன். அவள் மனதாரப் புழுங்கினுள். நெஞ்சினுள் அழுகை சூழ்ந்தது.

"கிட்டடியிலை உள்ள கடையிலை எஸ். ஆறும் பிரசும் வாங்கேலாதோ?" பாலசிங்கத்தின் முகம் சுருங்கிற்று. தயங்கிய குரலிற் சொன்னுன்;

"இந்த இடத்திலை பற்பொடி கிடைக்கிறதே கஸ்டம். இரண்டொரு நாளைக்குச் சமாளியும். கட்டாயம் எப்படியும் வாங்கித் தருவன்...".

கமலம் பதிலொன்றும் பேசாமலே அருவருப்போடு பற்களைத் தீட்டினாள். துவாயினால் முகத்தைத் துடைத்த வாறு அவன் கொடுத்த கண்ணாடியை ஒருகையினாற் பிடித்துக் கொண்டு முகத்தைப் பார்த்துக்கொண்டாள். லக்ரோ கலமைன் பூசாவிடில் அவளுக்கு முகம் சொரசொரக்கும். எனினும் அந்தக் குறையினைச் சமாளித்துக்கொண்டே பவுடரை முகத்திலே பூசிக்கொண்டு திண்ணையில் மௌன மாக உட்கார்ந்திருந்தாள், நெஞ்சினுள் துயரோடு.

வெளியே கதைத்துக்கொண்டு நின்ற இருவரை பால சிங்கம் அதட்டிப்போகச் சொல்வது அவளுக்கு வெகுதெளி வாகவே கேட்டது.

''போய் நல்ல சட்டை போட்டுத்தலையை இழுத்துக் கொண்டு வாருங்கோ... ... என்ன கோலமிது?''

முணுமுணுப்புக்கள் அவனது குரலின் பின்னாலே மங் கிப் போயிற்று.

அந்தப் பனையோலைக் கூரையின் கீழே மொறமொறப் பான திண்ணையில் அவள் உட்கார்ந்திருந்ததை தொலைவி லுள்ள பனைவடலிகளின் அருகே நின்று சிலர் விடுப்புப் பார்த்துக்கொண்டு நின்றதை அவள் கண்முன் காணாதவ ளேபோல இருந்தாள்.

நிமிஷங்கள் கழிய, பாலசிங்கம் புதிய ஓலைப்பெட்டி யினுள் சுடச்சுடச் தோசையினைக் கொண்டு வந்து அவளின் முன்னே வைத்தான். கமலத்தின் முகம் வாடி மங்கிக் கிடந்தது. வேதனை அரும்புங் குரலிலே அவள் கேட்டாள்:

''நான் பாத்றூமுக்குப் போகவேண்டும்.''

பாலசிங்கத்தின் மனதினுள் வெட்கம் குமிழியது ஒரு கணம் பேசாமல் திக்கித்துப்போய் நின்றான். விடிந்து, நித்திரையால் எழுந்ததும் அவனுடைய மனதை அந்த விஷயமே ஆக்கிரமித்துக் குழப்பிக் கொண்டிருந்தது. அவ ளிடம் அதை எப்படிச் சொல்வதென்று தெரியாமல் பால சிங்கம் குழம்பிக் கொண்டிருந்தான். இப்போது அவளே அதைக் கேட்கின்றாள்:

''பாத்றூம் சிலிப்பரை வீட்டிலை விட்டுவிட்டு வந்திட் டன். இதையே இப்போதைக்குப் பாவிப்பம் பிறகு புதி சாய் ஒன்று வாங்கலாம்...... ...''.

காற்சிலிப்பரை மாட்டிக் கொண்டே அவள் அவனருகே வந்தாள்.

"பாத்றூமைக் காட்டுங்கோ......"

பாலசிங்கம் செம்மணலில் கால்பதித்து நிற்கும் பனை வெளியினை உற்று நோக்கினான். பற்றைகளும் சாணிக்கும் பழும், வடலியும் வெள்ளெருக்கஞ் செடிகளும், சாம்பல் மேட்டைக் கிளறும் கோழிகளும் கண்ணெதிரே விரிந்தன. கண்களைத் திருப்பி, ஒரு முடிவிற்கு வந்தவனாய் பாலசிங்கம் கமலத்தைப் பார்த்து "வாரும்" என்று அழைத்துக் கொண்டே முன்னே நடந்தான். "கமலம் உமக்கு எப்படிச் சொல்லுறதெண்டு எனக்குத் தெரியவில்லை. இங்கே ஒருத்தரும் கக்கூஸ் கட்டிப் பாவிக்கிறதில்லை. ஒருத்தரும் காணமாட்டினை, நீர் அந்த மரத்திற்குப் பின்னாலை போயிரும்........"

"என்ன?"

அருவருப்பு தலைதூக்கும் குரலிலே பாலசிங்கத்தை ஏறிட்டாள் கமலம். அவளின் பார்வையை எதிர்கொள்ள முடியாதவனாய் எதிரே தெரிந்த பனங்கூடலையே மௌனமாகப் பார்த்தான் பாலசிங்கம். நுங்கு சுமந்த பனைகளைப் பார்த்திருந்தவன் கூசும் பார்வையோடு அவளை நோக்கினான்.

"கமலம்........"

பாலசிங்கம் தயக்கத்தோடு அவளை அழைத்தான். கமலம் அவனைப் பார்க்கவில்லை. உடல் உபாதையினைத் தாங்கமுடியாத அவள் மரமொன்றின் பின்னே தயங்கித் தயங்கி மறைந்தாள். பாலசிங்கத்தின் தங்கை முறையான, தில்லை வாளி நிறையத் தண்ணீரைக் கொண்டு வந்து அவள் போனமரத்தின் முன்னர் வைத்துவிட்டுச் சென்றாள். மரத்தின் பின்னால் இருந்து கமலம் அருவருத்து ஓங்காளிப்பது பாலசிங்கத்திற்குத் தெளிவாகக் கேட்டது. பாலசிங்கம் ஒவ்வொரு கணத்தினையும் அந்தக் காரைச் செடியினருகே நின்று கொண்டு முள்ளின் மேல் காலூன்றியதாகக் கழித்தான். அவள் வந்தாள். முகமெல்லாம் அருவருப்பு படர்ந்திருந்தது.

"தலையெல்லாம் இடிக்குது........"

அவள் முணுமுணுத்தவளாய், வாளித் தண்ணீரைத் தூக்கிக் கொண்டு மீண்டும் வேறொரு மரத்தின் பின்

புறமாகச் சென்றாள். நேரங்கழிய வெளித்த முகத்தோடு சவர்க்காரம் பூசிக் கைகளை உரஞ்சிக் கழுவிக் கொண்டே கமலம் மெல்லிய குரலிற் கேட்டாள்.

"ஏன் இங்கை உள்ள ஆட்கள் சுகாதாரக்குறைவாக இருக்கிறுங்கள்?" அந்த நேரான கேள்வியை பாலசிங்கம் எதிர்பார்த்திருக்கவில்லை. சில கணங்கள் கழிய மிகத்தணிவான குரலிலே அவன் கூறினன்:

"கமலம், வசதிக் குறைவாக இருந்தால், வாழ்க்கையிலை எல்லாமே குறைவாகத்தான் இருக்கும். இந்த அயலிலை எல்லோரும் ஏழைகள்...... ...அதுதான்......"

கமலம் அவனது பதிலைக் கவனியாமலே முன்னே நடந்தாள். மத்தியானப் பொழுது வெய்யிலில் தகித்துக் கொண்டிருந்தது. புறவசப்பட்ட வெப்பத்தைவிட அவளுடைய மனம் வேகிக்கொண்டிருந்தது. அந்த நேரத்திலேதான் பாலசிங்கத்தினுடைய தகப்பனை அவள் முதன் முதலாகக் கண்டாள். அதிர்ச்சியால் அவளின் உடலே குலுங்கியது. தளர்நார் ஏறுபட்டியோடு பாலசிங்கத்தின் தகப்பன்.

கமலத்திற்கு குலுங்கிக் குலுங்கி அழவேண்டும் போலிருந்தது. அவளுடைய தகப்பன், தாய், தம்பி, சுற்றம் எல்லாம் அவளின் கண்ணெதிரே வந்தனர். அவளுடைய தகப்பன் அவளை ஏமாற்றவில்லை. அவர் சொன்னவை பொய்யில்லை. மூளை குழம்பிற்று கமலத்திற்கு. எல்லாமே இழந்த ஏமாற்றத்தின் வசப்பட்ட அவள், அவளையே ஆறுதல்படுத்தும் நிர்ப்பந்தத்திற்கு ஆளானுள். யாருமே அவளை ஏமாற்றவில்லை. அவள் தன்னையே நொந்து கொண்டாள், பாழாய்ப்போன கார் நின்று தொலைந்ததையும், தான் பள்ளிக்கூடத்திற்குப் போனதையும் நினைத்துக்கழிவிரக்கப்பட்டாள். இனி என்ன செய்வது? அவனையே தஞ்சமென்று நம்பிவந்தாகிவிட்டது. இனி அவனே நிழல். மெதுமெதுவாகத் தன் மனக் குழப்பத்திலிருந்து விடுபட்டு ஒரு முடிவிற்கு வந்தாள் கமலம். எப்படியிருந்தாலும் அவள் கைப்பிடித்த கணவன்தான் அவளுக்கு எல்லாம். அவன் போகுமிடம், வாழுமிடம் எல்லாமே அவளின் போக்கிடம். அப்படியிருக்கையில் அவனது சுற்றத்தைப் பற்றி அவளுக்கு என்ன அக்கறை? தன் மனதை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துவிட அவள் படாதபாடு பட்டுக் கொண்டிருந்தாள். ஒவ்வொரு கணமும் மனதினுள் தன் அந்தஸ்த்தோடு இப்போதுள்ள நிலைமையை ஒப்பிட்டு நெஞ்சம் குமைந்து கொண்டிருந்தாள்.

பாலசிங்கத்தின் தகப்பன் உடம்பைக் கழுவி, வேட்டி உடுத்துக்கொண்டு, திருநீறு பூசிய முகத்துடன் அவ்விடம் வந்தார். ஆஜானுபாகுவான தோற்றம். பாலசிங்கத்தின் கூர்ந்த கண்கள், கமலத்தோடு வந்து அவர் மிகவும் வாஞ்சையோடு கதைத்தார். அந்த மனிதரின் கனிந்த முகம், வாத்சல்யமான குரல் ஆகியன எவரையும் கவரக் கூடியதாயினும், கமலத்தின் மனத்திலே அவர்மீது விருப்பமோ, வெறுப்போ தோன்றவில்லை.

அந்த மத்தியான வேளையிலும் கமலத்தைப் பார்க்க அந்தக் குடிசைக்குப் பலர் வந்தனர். ஆண்கள், பெண்கள், குழந்தைகள், எல்லோருக்குமே அவள் புதினமாக இருந்தாள். அந்த முகங்களை, பலவிதமான உணர்வுகள் தெறிக்கும் பார்வைகளைப் பார்த்துக்கொண்டிருக்கின்ற போது சிலவேளை அவளுக்கு மனதினுள் ஆத்திரம் பொங்கியது. எனினும் எல்லாவற்றையும் பாலசிங்கத்திற்காக அவள் பொறுத்துக்கொண்டாள். பார்க்க வந்தவர்களின் வரிசையில் கடைசியாக வந்தது பாலசிங்கத்தின் மாமியான சின்னக்குட்டிதான். தளர்ந்து வழுவிய குறுக்குக் கட்டினை இழுத்துக் கட்டிக்கொண்டே அங்கே வந்த சின்னக்குட்டி திண்ணையில் நின்றவாறு சொன்ன முதற்கதையே பால சிங்கத்தின் மனதினைத் தைத்தது.

''எடி பிள்ளை, இந்தக் கவுணை மாற்றிவிட்டு நல்ல சீலையாக மாறிக்கட்டு — கலியாணம் முடிக்கிற வயதிலை துடையைக் காட்டிக்கொண்டு நிக்கிறதோ?''. மனதினுள்ளே குப்பென்று ஆத்திரம் பொங்கியது கமலத்திற்கு. வெறுப்புக் கக்கும் கண்களோடு அவளை முகத்திற்கு நேராக எதிர்கொண்டாள் கமலம். சின்னக்குட்டியின் சுருக்கங்கள் விழுந்த சிவப்பு முகத்தில் அந்தப் பார்வை எந்த மாறுதலையும் ஏற்படுத்தவில்லை. அவளின் பார்வையையே காணாதவள்போலப் பதில்சொன்னாள் சின்னக்குட்டி.

''இன்றைக்கு இரவைக்கு நல்ல நாளாம். நாளுக்குச் சோறு தின்ன வேணும். நீ பொடிச்சியையும் கூட்டிக் கொண்டு பின்னேரம் வீட்டுக்கு வா—''.

மந்திர சக்திக்குட்பட்டவன்போல பாலசிங்கம் அவள் கூறியதறகுத் தலையசைத்தான்.

கமலத்திற்கு அவனது போக்கு மிகவும் ஆத்திரத்தை ஊட்டியது. தன் தாய் தன்னை அதிகாரம் பண்ணுவதைச்

சகிக்கமாட்டாதவள் கமலம். ஆனால் இன்றோ, இன்றுதான் அறிமுகமான இந்தச் சிடுசிடுத்த கிழவி அவளை அதிகாரம் பண்ணுவதா?.

கிழவி போய்விட்டாள்.

பாலசிங்கத்திற்கு முகத்தில் அறைந்தது போல கமலம் கேட்டாள்:

"ஆர் இந்தக் கிழவி— சாகிற வயதிலே இதுக்கேன் வீண் கதை?".

பாலசிங்கத்தின் இரத்தம் திடீரென்று சூடேறிற்று. ஏறிய ஆத்திரத்தை அவன் மனதினுள்ளே போட்டு நசுக்கினான். சிறு வயதிலேயே தாயை இழந்தே அவனைத் தோளிலும் மடியிலும் தூக்கி அணைத்து வளர்த்தவள் சின்னக்குட்டி இன்று அவன் இப்படி மனிதனாக இருக்கவே காரணம் அவள்தான். "எடஎடே நீங்க எப்பிடி நான் செய்தாலும் அதை நினைவிலே வைத்திருக்கவே போறியள்? ஒரு பெண்டிலைக் கண்டவுடனே அவளுக்குப் பின்னாலே போறநீங்கள் தானே— அவளவையின்ரை ருசியைக் கண்டவுடனே அவளவையோடையே போய்விடுவீங்கள் நாங்கள் கிட்டவந்தால் அவளவை சொல்லுவாளவை, இந்தக் கிழவியைக் கலையுங்கோ என்று. நீங்க உடனே கலைச்சு விட்டிடுவியள். என்னவோ எனக்கு கடவுள் துணையிருந்தால் போதும்—". சின்னக்குட்டி கரகரத்த குரலில் கூறும் போது அவளின் இடுங்கிய கண்களிலே நீர் துளிர்க்கும். யாருடைய ஆதரவுமற்ற நடுவீதியில் நிற்கும் பிச்சைக்காரியைப்போல அவள் முகம் அப்போது அவனுக்குத் தோற்றும். அவள் தொடர்வாள்— "டே பாலசிங்கம் என்ன இருந்தாலும், எப்படித்தான் நீ பிரபுவாக மாறினாலும் என்ரை பிரேதத்திற்கு நீதான்ரா கொள்ளிவைக்க வேணும். எனக்கு ஒரே பிள்ளை நீ தான்— அதைமட்டும் செய்ய மறந்திடாதை மோனை " அவள் தளுதளுப்பாள். அந்த வேளையில் பாலசிங்கம் நிலைதலைந்து போய்விடுவான். அர்த்தமற்றதாயினும் குலுங்கிக்குலுங்கி அழவேண்டும் போலிருக்கும் அவனுக்கு. உணர்ச்சிமயமான குரலிலே அவன் அவளிற்குத் தேறுதலளிப்பான். "ஏன் இப்பிடியெல்லாம் கதைக்கிறியள் என்ரை சீவன் உள்ளவரை அப்பிடி நடவாது— இப்பிடி யோசிக்காதையுங்கோ...". கிழவி மௌனமாகிவிடுவாள். வழமையான அறளை மீண்டும்

தொடங்கிவிடும். சளசளப்பாள். ''எனக்குத் தெரியுமடா நீ ஒரு அறிவான பிள்ளை— நீ என்னை ஒருபோதும் மீறிப் போகமாட்டாய். சரி போய் ஆகவேண்டியதுகளைப் பார்...''.

கமலம் இறுக்கிச் செருமினாள்.

''என்ன பேசாமல் நிக்கிறியள்?''

பாலசிங்கம் நினைவுகளிலிருந்து விடுபட்டான்.

''என்ன—?''.

கமலம் வெடுக்கென்று கேட்டாள்.

''ஆர் அந்தக் கிழடு?''

''கமலம் ஒருபோதும் அப்படிச் சொல்லாதேயும் ..''

பாலசிங்கத்தினுடைய குரல் கெஞ்சிப் பணிந்தது.

''ஏன்?''

ஆங்காரம் தலையெடுத்தது கமலத்தின் குரலில்.

பாலசிங்கத்திற்கு அவளின் சிடுசிடுப்புப் பிடிக்கவில்லை.

''அப்பிடிச் சொல்லவேணும்...''

''ஏன் அவ அவ்வளவு பெரிய மனிசியோ?''

பாலசிங்கம் வெகு அமைதியாகச் சொன்னான்.

''என்னை வளர்த்ததும் அந்த மனிசிதான். இந்த நிலைமைக்கு ஆளாக்கினதும் மனிசிதான். மனிசி தெரிஞ்சு தெரியாமல் என்ன சொன்னாலும் எனக்காக அதைப் பொறுத்துக்கொள்ளும்.''

கமலம் அந்த உருவத்தை நினைவு கூர்ந்தாள். தடித்த, சிவப்பான, குறுக்குக்கட்டிய, முகமெல்லாம் சுருக்கம் விழுந்த அந்தக் கிழவியைப் பார்த்த கணத்திலிருந்தே பிடிக்கவில்லை கமலத்திற்கு.

''எல்லாஞ் சரிதான்... ஆனால் அந்த மனிசி வீட்டுக்கு மட்டும் சாப்பிட வரமாட்டன்...''

''கமலம்... கமலம்...''

அவன் ஆண்மை கெஞ்சிப் பணிந்தது. அவள் அதனை மனங்கொள்ளாதவளாக எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''எங்களின்ரை திருமணத்தைப்பற்றி நான் எத்தனையோ கனவுகள் கண்டன். அது ஒன்றுமே நடக்கவில்லை. அது தான் போகட்டும். அதெல்லாவற்றையுமே நான் தியாகம் செய்திட்டன். ஆனால் எனக்கு அறவே

விருப்பமில்லாத வீட்டிலை எங்களின்ரை வாழ்க்கை ஆரம்பிக்கிறதை நான் விரும்பவில்லை. எங்கையாவது ஒரு கோயிலுக்குக் கூட்டிக்கொண்டுபோய் மஞ்சள் கயிறொன்றை என்ரை கழுத்திலை கட்டிவிடுங்கோ...''

பாலசிங்கம் மௌனமாக இருந்தான்.

''உங்களுக்காக நான் எல்லாவற்றையும் உதறித் தள்ளி விட்டு வந்திருக்கிறன். நீங்களும் எனக்காக அப்பிடிச் செய்தாலென்ன?''

''கமலம்...''

''ஓம், நான் இதை முடிவாகத்தான் சொல்லிறன்.''

பாலசிங்கம் சில நிமிஷங்களிற்கு மௌனமாகி நின்றான். மனதினுள்ளே அவனுடைய உறவினர்களுடைய விருப்பங்களும், வாழ்க்கையைப் பற்றிய கனவுகளும் குரல்களாய், காட்சிகளாய் ஒலித்துத் தோன்றி மறைந்தன. தயக்கத்தினுள் தோய்ந்த குரலிலே அவன் கூறினான்:

''ஊருக்குள்ளை என்னைப்பற்றி என்ன சொல்லுவாங்கள்''

கமலம் வெறுமையாகச் சிரித்தாள்.

''நீங்கள் உங்களைப்பற்றித்தான் யோசிக்கிறியள். என்னைப் பற்றிக் கொஞ்சம் யோசித்தீர்களா? நான் மடுவிற்கு மலையிலிருந்து...........வந்திருக்கிறன்''

கடகடவென்று சொல்லிக் கொண்டுபோனவள் நின்றாள். சுருக்கென்றது பாலசிங்கத்திற்கு.

''நானும் என்னுடைய எல்லா நிலமைகளையும் வேண்டாமென்று தூக்கியெறிந்துவிட்டு, உங்கள் ஒருத்தரையே நம்பி ஒன்றைப் பற்றியும் அக்கறைப்படாமல் வந்திருக்கிறனே நல்ல ஆசையோடை என்னை வளர்த்த, என்ரை தாய்தகப்பன்ரை நிலமையையும் யோசிக்காமல் உங்களுக்குப்பின்னாலை வந்திருக்கின்றேனே... ...'' அவள் உதடுகள் துடித்தன. கண்கள் பனித்தன.

''என்னைவிட உங்களுக்கு ஆரும் தேவையில்லை -...''

''கமலம் வெடுக்கென்று கதையை முறித்தாள். பாலசிங்கம் எதையுமே பேசவிரும்பவில்லை, முகம் வாட்டமுற்று சோர்ந்துபோய் நின்றான். கமலம் திண்ணையில் உட்கார்ந்து யோசித்து விட்டு மீண்டும் பாலசிங்கத்திற்கு பக்கத்திலே போனாள். அவனது முகத்தைப் பார்த்ததும் அவளிற்கு மனம் இரங்கிவிட்டது. மெதுவாக பாலசிங்கத்தின் தோளைத் தொட்டாள்.

''என்னிலை கோபமா?............''

பாலசிங்கம் கமலத்தைப் பார்த்தான். கபடமறியாத வாஞ்சையான முகம் என எத்தனைதரம் அவளுக்கு அவன் எழுதியிருக்கின்றான். இப்போதுமென்ன, அவளின் முகத்தில் கனியும் வாஞ்சையில் அவன் மனம் குளிர்கிறான்.

''என்னைக்கோபிக்கிறீங்களா......சொல்லுங்கோ......''

பாலசிங்கம் தலையை அசைத்தான்.

''இல்லைக் கமலம். ஒருநாளும் உம்மைக் கோபிக்க மாட்டேன். நீர் என்னைநம்பி எனக்குப்பின்னாலே வந்தனீர். உமக்கு மேலே நான் ஒரு சின்னத்தூசிகூட விழவிட மாட்டன் இது சத்தியம்..............''

கமலம் பாலசிங்கத்தையே விழுங்குவதுபோலப் பார்த்தாள். உணர்ச்சிமயமான அவன் வார்த்தை யிலே தன் இதயத்தையே பறிகொடுத்த மயக்கநிலையில் அவள் தன் வசமிழந்து முணுமுணுத்தாள்:

'நான் நீங்க சொல்லுற எதையும் தட்டி நடக்கமாட்டன்.' அந்தச் சொற்களோடு இருவரும் ஒருவரையொருவர் இறுகத் தழுவிக் கொண்டனர்.

அவர்கள் தலைமறைவாகி வந்த அரை நாளினுள் கமலத்திற்கு அங்கே மிகவும் பிடித்துவிட்ட சீவன் சின்னத்தங்கம் ஒருத்திதான், பதினைந்தேவயதுக்குக் கிட்டிய எப்போதும் புன்னகை நிறைந்த அவள் முகமும், பேசுங் கண்களும் கமலத்திற்கு முதற் பார்வையிலேயே பிடித்துப் போய்விட்டன. எவ்வித கூச்சமும் இல்லாமல் சின்னத்தங்கம் கமலத்தை வாய்க்குவாய் 'நல்ல வடிவான அக்கா' என்று சொல்லிக் கொண்டிருந்தாள். கமலத்திற்கு அங்கே எல்லா உறவுகளுமாக அவளே சிலமணி நேரங்களில் மாறி விட்டாள். வெளியே பெரிய கொக்கு வடிவமான பட்டம் ஏற்றிப் பனைமரத்தில் கட்டப்பட்டிருந்தது, அந்தப் பட்டத்தின் 'விண் ஓசை' கேட்பதற்கு மிகவும் இனிமையாகவிருந்தது. பனைகளில் கிளிகள் வளையம் வளையமாகப் பறந்து திரிந்தன.

பின்னேரம் கமலத்திற்கு சுகமில்லையென்று கூறி நாட்சோறு வைபவத்தை பாலசிங்கம் வேறொரு நாளைக்குத் தள்ளிவைத்தான். உள்ளூர அது அவனுக்கு மிகவும் கவலையாக இருந்தது. அவனுக்கு மட்டுமல்ல. அந்தச் சிற்றூருக்கே கவலையாக இருந்தது.

அந்தக்கிராமமே கமலத்திற்கு மிகவும் அந்நியப்பட்டிருந்தது. தாங்கள் வெளியிலே நிறுத்திவைத்து, தண்ணீர் வார்த்து கீழ்ப்படுத்தி வைத்திருக்கிறவர்களிடமே இன்று கைநீட்டி தண்ணீர் வாங்கிக் குடிக்கவும், சாப்பிடவும் ஆகிவிட்டதை நினைத்து இடையிடையே அவள் மனம் குமைந்து கொண்டிருந்தாள். இந்தநிலையில் தன்னுடைய பெற்றோர் தன்னைக்கண்டால் எந்தவிதமான அதிர்ச்சியை அடைவார்கள் என்பதையும் அவள் கற்பனை செய்து கொண்டாள்.

**II**

இரைக்க இரைக்க சின்னவன் ஓடிவந்து சொன்ன செய்தியைக் கேட்டதும் பாலசிங்கத்தின் முகம் கறுத்துப்போய் விட்டது. மாலை மங்கிய அவ்வேளையிலே கோழிக்குஞ்சுகளைப் பிடித்துக் கரப்பால் அடைத்து மூடிக்கொண்டு நின்ற சின்னத்தங்கத்தைப் பார்த்திருந்த கமலம் பாலசிங்கத்தின் முகமாற்றத்தினை அவதானிக்கவில்லை.

சின்னவன் சொன்ன சொற்கள் பாலசிங்கத்தின் காதுகளிலே ராட்சதக் குரலில் ஒலித்துக் கொண்டிருந்தன. அந்த வார்த்தைகள் நெஞ்சில் இரும்புக்குண்டாகி விழுந்து தங்கின. 'கணபதிப்பிள்ளை பாலசிங்கம் தன்னுடைய மகள் கமலத்தை ஏமாற்றி இரண்டாயிரம் ரூபாவையும் ஐயாயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும் எடுத்துக் கொண்டு அவளைக் கடத்திப் போனதாக பொலிசில் முறைப்பாடு கொடுத்திருப்பதாகவும், பொலிஸ் பாலசிங்கத்தைத் தேடுவதாகவும் ... அந்தப் பொலிஸ் கணுச்சில் அவனது வீட்டைப்பற்றிக் கேட்டதாகவும், இன்று சிலவேளை பொலிஸ் வந்துவிடுமென்றும் ...... பொலிஸ்காரர் அங்குவந்தால்?' கணபதிப்பிள்ளை பணக்காரர். அவரால் எதுவும் செய்ய முடியும். பணம் பாதாளம் மட்டும் பாய்கின்றபோது ஒரு ஏழை மனிதனை என்னென்னவெல்லாம் செய்து வதைக்குமோ? இதிலிருந்து தப்ப வழி என்ன?

''என்னடா தம்பி யோசனை?''

சின்னக்குட்டியின் குரல் தான். அந்தக்குரல்தான் அவன் கவலையால் துவண்டுபோய் நிற்கின்றபோதெல்லாம் அவனைத் தாங்குவது. இப்போதும் அதேகுரல். அதே வாஞ்சை. பாலசிங்கம் முகம் மலர்ந்து சின்னக்குட்டியை நோக்கினன். குரலைக் கேட்டதும், கமலம்குடிசையோரமாக நின்ற கிழுவமரத்துக்குப்பின்னால் மறைந்து கொண்டாள்.

''எங்கையடா தங்கச்சி?''

பாலசிங்கம் சுற்றும் முற்றும் பார்த்தான்.

கிழவியின் குரலில் காரம் ஏறியது.

''என்னடா அங்கையும் இங்கையும், பார்க்கிறாய் மடையா அந்தப் பிள்ளையைத் தெரியாத இடத்திலை கொண்டுவந்து இந்த மைம்மல் நேரத்திலை எங்கை போகவிட்டனி? பாவம், ராசாத்தி மாதிரி. நாலு காசு உழைச்சு நல்ல வசதியோடை அந்தப் பிள்ளையைக் கூட்டிக் கொண்டு வந்திருக்க வேணும் நீ .........''

''என்ன இது?''

பாலசிங்கத்தின் குரல் ஆச்சரியத்தோடு வந்தது.

''ஒரு சீலை..., துவாய்...புசல்மாப்பேணி''

பாலசிங்கம் நன்றி பொங்க அவளைப்பார்த்தான்.

''இந்தா அந்தப் பெடிச்சியிட்டைக் குடு, கவனமாய்ப் பிடி. டேட, நீ ஒரு திரவியத்தைக் கொண்டுவந்திருக்கிறாய். இப்ப நான் போறன்.........''

சின்னக்குட்டி அங்கிருந்து நடந்தாள்.

பாலசிங்கம் திண்ணைக்குப் போய் அந்தம் பார்சலை வைக்க, பின்புறமிருந்து வருபவள் போலக் கமலம் அங்கே வந்தாள்.

பாலசிங்கம் பார்சலை பின்புறமாக மறைத்தான்..

''கமலம்... ...இதிலை வந்து இரும்... ...''

கமலம் மெதுவாக நடந்துபோய் அவனுக்குப் பக்கத்தில் இருந்தாள்.

''உமக்கு ஒரு சாமான் இருக்குது ...பார்க்கப்போகிறீரோ? வேணுமெண்டு சொல்லப்படாது ...''

வெளிச்சமொன்று அங்கு பரவியது சின்னத்தங்கம் சிம்னி விளக்கொன்றை அங்கே மாட்டிவிட்டுச் சென்றாள்.

''காட்டுங்கோ.........''

கமலம் மெல்லக் கேட்டாள்.

பாலசிங்கம் அந்தப் பார்சலை எடுத்து அவளிடம் கொடுத்தான். பச்சை நிறமான வொயில்சாறி, துவாய், பொன்ட்ஸ் பவுடர், அவளின் கைகளில் அந்த வொயில் சாறியை எடுத்தபோது வீட்டில் அலுமாரிக்குள் உள்ள அவளுடைய எண்ணிக்கையில்லாத நைலெக்ஸ்' காஞ்சிபுரம் காஷ்மீர், மணிப்புரிச் சாறிகள் நினைவுக்கு வந்தன. எந்தச் சாறியும் ஐம்பது அறுபது ரூபாவிலிருந்து அறுநூறு ரூபா வரை விலையுள்ளது. இது இந்த வொயில் சாறி .. முப்பது ரூபா இருக்குமோ?

''பிடிச்சுதோ?''

கமலம் தெரியாதவள் போலப் பாவனை செய்தாள்,

''பிடிச்சுது. ஆனால் இது எங்காலை?''

பாலசிங்கம் அவளின் கைகளைப் பற்றினன்.

''சொன்னால் கோவிக்கமாட்டீரோ?''

மனம் இளக கமலம் தலையசைத்தாள்.

''மாமி.... அப்போதை வந்த அந்தச் சிவப்பு மனுசிதான் ஆசையோடை வாங்கித் தந்தது......''

கமலம் சிறிது நேரம் பேசாது இருந்தாள்.

''பாவம் ஏன் இதை வாங்கினீங்கள்.......''

''விருப்பமாகத் தரேக்குள்ளை எப்படி வேணுமெண்டு சொல்லுறது மனுஷி மனம் நோகும்''

பாலசிங்கம் அவளைப்பார்த்தான்.

''என்னவோ எனக்கு அந்த மனுஷியைப் பிடிக்கவில்லை'' கமலம் அடங்கிய குரலிற் சொன்னபோதிலும், அந்தவேளை யில் சின்னக்குட்டியின் மீது அவளுக்கு அனுதாபம் ஏற்பட்டது. பாலசிங்கம் அதற்குப் பதில்சொல்லவில்லை. வெளியே திடும் திடும் என்று சத்தம் கேட்டது. சின்னவனும், அவனுடைய தகப்பனும், சின்னக்குட்டியும் அந்தச்சத்தத் தின் பின்னே பரபரப்போடு வந்தனர்.

பாலசிங்கத்தின் குரல் திடுக்கிட்டது.

''என்ன?''

சின்னக்குட்டியின் குரலே முன்னுக்கு வந்தது.

''பிள்ளைக்குச் சுறுக்காகச் சாப்பாட்டைக் குடுத்திட்டு வெளிக்கிடுத்து......''

பாலசிங்கம் அந்த நிமிஷத்திலே ஒரு முடிவுக்கு வந்து விட்டான். இரவோடு இரவாக இங்கிருந்து போய்விட வேண்டும். இங்கிருந்து கிழக்குப்புறமாக உள்ள மக்கி ரோட்டால் நடந்து போனால் அவனுடைய சின்னையா வீட்டிற்குப் போய்விடலாம். தான் கமலத்திற்குக் கடிதம் எழுதியது தெரிந்த கணபதிப்பிள்ளை தனக்கு ஆட்களை வைத்து அடிப்பித்ததை இன்னமும் பாலசிங்கம் மறந்து போய்விடவில்லை, அந்த அடியின் ஊமைக்காய வேதனையே அவன் உடலிலே மாறிப் போய் விடவில்லை. இன்னும் அவன் முழங்கரல் மூட்டுக்கள் விண் விண் என்று தெறித் கொண்டிருக்கின்றன.

கமலத்திடம் அவன் விஷயத்தைச் சொன்னதும் அவள் முகம் கறுத்துப்போய்விட்டது. உடலெங்கும் நடுங்கி வேர்த்தது. வார்த்தைகள் குளறின;

''எப்படியோ இங்கை இருக்காமல் போய்விடுவம். பப்பாவின்ரை கையிலை சிக்குப்பட்டால்...... என்ரை தெய்வமே .... பிறகு மீட்சியில்லை''

இரவோடிரவாகத் திருக்கல் வண்டியொன்றில் அங்கிருந்து பயணம் தொடங்கியது. வண்டிலில் கமலமும், சின்னத்தங்கமும் இருந்தனர். பின்னால் ஆறுபேர் நடந்து சென்றனர். திருக்கல் வண்டி புறப்பட்டபோது சின்னக்குட்டி அவ்விடத்தில் நின்றாள். அவளின் முகம் வாடியிருந்தது. கமலத்தின் அருகே சென்றாள்,

''என்ரை செல்வம்......கவனமாய் போயிட்டுவா....'' வெகு ஆதரவாகக் கமலத்தின் நாடியை வருடிவிட்டு அவளது கையை எடுத்துத் தன்கைக்குள் இருந்த சிறு பொட்டலமொன்றைக் கொடுத்து விட்டு தன்னுடைய கொட்டப்பெட்டிக்குள் வில்வ மிலையினுள் மடித்திருந்த திருநீற்றை சிறங்கையாக அள்ளி அவள் நெற்றியிலே பூசினாள். கைகள் நடுங்கின.

''ஒரு விக்கினமும் வராது.... நீ போயிட்டு வா—.... நான் நாளைக்கு அங்கை வருவன் பிள்ளை'' திருக்கல் வண்டியின் மாடு தலையைச் சிலிர்க்க மணி கிலுங்கிற்று சின்னக்குட்டி விசும்பிக்கொண்டு பாலசிங்கத்திற்குச் சொன்னாள். அவளின் குரல் கம்மிற்று:

''தம்பி, பிள்ளை கவனம். நெற்றியி விரலாலை கொஞ்சம் எச்சிலைத் தொட்டுவை.. ... அதுஇது உலாவுற இடம்.....'' வானில் நாலாம் பிறையின் கீறு தங்கமாய் மினுங்கிற்று. கையில் கனத்த சின்னக்குட்டி தந்த பொட்டலத்தை விரல்களால் நெருடினாள் கமலம். சங்கிலி. திகைப்போடு எடுத்து அதனைப்பார்த்தாள். மெல்லிய தங்கச் சங்கிலி. சின்னத் தங்கம் குசுகுசுத்தாள்.

''ஆச்சிக்கு அக்காவிலை நல்ல விருப்பம்.........''

திருக்கல் வண்டியின் சலங்கை கிலுகிலுத்துக் கொண்டிருந்தது. மண்ணின் புழுதிமணமும், காட்டுச் செடிகளின் வாசனையும், சருகுகளின் அழுகல் நாற்றமும் சேர்ந்து புதியதொரு மணமாக அங்கே கமழ்ந்தது. கமலம் உலகத்திலே தான் தனித்தவள் போலவும், அபாயப்புயலினுள் சிக்கினவளாகவும் மனம்குமைந்து கொண்டிருந்தாள்.

சின்னையாவின் வீட்டில் பாய், தலைகணி, இருக்குமோ என்ற தவிப்பே பாலசிங்கத்தின் மனதைக் குடைந்து கொண்டிருந்தது.

சின்னையாவின் வீட்டை அவர்கள் அழைகுதபோது பத்துமணியாகியிருக்கும். நாய்களெல்லாம் வடள்ந் வாள், என்று ஊழையிட்டன. வந்தவர்களில் ஒருவர் நாய்களை அதட்டிவிட்டு 'கணவதி' என்று உரத்துக் குரலிட்டார். பாலசிங்கத்தின் சின்னையாவான கணபதி வாய் ா,விறியபடி பறட்டைத் தலையைச் சொறிந்து கொண்டே வெளியே வந்தான்.

குப்பி விளக்கின் துணையோடு திண்ணையைச் சரிப்படுத்திஞர்கள். கமலத்தின் உடம்பு புண்ணுய் வலித்தது. பனிக் காற்றுள் வந்ததால் அச்சூ அச்சூ என்று தும்மிக்கொண்டிருந்தாள். களைத்துப்போய் பாயிலே கிடந்த கமலம் வைகறைப்பொழுதிலே கனவிலே விக்கினேஸ்வரனைக் கண்டாள். அவளை அறியாத பாசத்தோடு 'தம்பி' என்று அழைத்தவள் திடுக்கிட்டு நித்திரை விட்டெழுந்தாள் குப்பிவிளக்கு மினுமினுத்துக்கொண்டிருந்தது. விளக்கின் வெளிச்சத்திலே திண்ணையைப் பார்த்தாள். திண்ணையின் ஓரத்திலுள்ள பாயில் சின்னத்தங்கம் படுத்துக்கிடந்தாள்.

பாலசிங்கம்! பாலசிங்கத்தைக் காணவில்லை.

கமலத்தின் மனம் திடுக்கிட்டது. எழுந்தவள் பயந்த நெஞ்சத்தோடு அப்படியே பாயில் இருந்து விட்டாள். அவளின் மனதிலே சிந்தனைகள் அலைஅலையாய் எழுந்தன. அவள் எத்தகையதோர் வாழ்வினைக் கற்பனை செய்திருந்தாள்? அதிலே ஆயிரத்தில் ஒரு பங்கு கூட அவளுக்குக் கிட்டவில்லை. இதென்ன அவலம், அச்சம். வசதியான வாழ்வுதான் இல்லை. நிம்மதிகூடவா இருக்கக்கூடாது என அலுத்துக்கொண்டது அவள்ன் மனம்,

''அக்கா'' என்ற குரல் கமலத்தின் யோசனையைக் குலைத்தது. அவளின் முன்னே சின்னத்தங்கம் வாத்சல்யமான முகத்தோடு நின்ருள்.

''அக்கா பயமாயிருக்குதோ?''

கமலம் அந்த வேளையிலும் மனதினுள்ளே சிரித்துக் கொண்டாள்.

''ஏன் உனக்குப் பயமில்லையோ?''

சின்னத்தங்கம் உறுதி தொனிக்கும் குரலில் சொன்ஞள்

''நான் ஒரு நாளும் ஒண்டுக்கும் பயப்பட்டதில்லை.''

சின்னத்தங்கத்தின் குரல் அசாதாரணமான், வயதினைமீறிய குரலாக அந்த வேளையிலே கமலத்துக்கு மனதிலே தொனித்தது.

"என்னை நம்பித்தான் அண்ணன் என்னை உங்களுக்கு காவலாக விட்டுவிட்டுப் போனவர்" அந்தச் சிறுமியின் சொற்களைக்கேட்ட கமலம் திடுக்கிட்டாள். சின்னத்தங்கம் உருவத்திலே மட்டுமல்லாது அறிவிலும் அங்குள்ளவர்களை விட வேறுபட்டுத் தனித்திருப்பதுபோலக் கமலத்தின் மன திலே அவ்வேளையில் உணர்வு தட்டியது.

"ஏன், அவர் எங்கே போய்விட்டார்?"

கமலம் பதிலே பேசாது யோசனையில் ஆழ்ந்தாள். சின்னத்தங்கம் நாடிக்குக் கையை ஊன்றியபடியே சொன்னாள்.

"அக்கா ஒன்றும் நடவாது பயப்படாதீங்கோ... ..."

முன்பிருந்த இடத்தைவிட இருக்கிற இடம் மிகவும் மோசமாகக் கமலத்திற்கு தோற்றிற்று. வெடித்த சுவர் கள், மறைப்பில்லாத திண்ணை, பார்க்குமிடமெல்லாம் அன்னமுன்னா மரங்கள், அந்த வீட்டினுள்ளேயே வளைய வளைய வரும் ஏழு ஜீவன்கள், சோகைபிடித்த முகத்தோடு அங்குமிங்குமாகத் திரிந்துகொண்டிருக்கும் கணபதியின் மனைவி தெய்வி, கமலத்தின் முகத்தைப் பார்த்து நிலைமை யைப் புரிந்து கொண்டாள் சின்னத்தங்கம்.

"அக்கா அந்த இலந்தை மரத்தடியிலை போயிருந்து கதைப்பம் வாருங்க —..."

கமலத்திற்கு அவளது யோசனை மிகவும் பிடித்துவிட்டது இருவருமாக அந்த இலந்தை மரத்தடிக்குப் போய், ஒரு மரக்குற்றியில் அமர்ந்து கொண்டார்கள்,

அந்தப்பகுதியில் தென்னைமரங்கள் பரவி நின்றன, புழுதிபடிந்த தலையோடு, அரைகுறை உடுப்போடு குழந் தைகள் குரும்பெட்டி பொறுக்கிக்கொண்டும், வளையம் உருட்டிக்கொண்டும் திரிந்தார்கள். பெண்கள் மேற்சட்டை அணியாது குறுக்குக் கட்டியிருந்தனர். ஆண்களை மிகக் குறைவாகவே அங்கே கண்டாள் கமலம்.

"என்னத்துக்கு இப்படி எல்லோரும் சுத்தமில்லாமல் இங்கை சீவிக்கிருங்கள் ....பார்க்க அசிங்கமாயிருக்குது ..." கமலமே கதையைத் தொடங்கினாள்.

அவளின் முகத்தைப் பார்த்தபடி கேட்டாள் சின்னத்தங்கம்,

"ஏன் உங்களுக்கு இந்த ஊர் பிடிக்கவில்லையோ?"

"உனக்குப் பிடித்திருக்குதா?"

திருப்பிக் கேட்ட கமலத்தின் கேள்விக்கு சின்னத்தங்கம் புன்னகை செய்தாள். ஆழ்ந்த குரலிலே வந்தது அவளின் பதில்.

''பிடிக்கத்தானே வேணும். என்னுடைய சொந்தக்காரர் எல்லாம் இந்த ஊரிலேதானே அக்கா இருக்கினம் ...''
''அது சரி ஏன் இந்தக் குழந்தைகள், பெரிய பெண்பிள்ளைகளெல்லாம் குளித்து நல்ல துப்பரவாய் இருந்தாலென்ன?''
க்ளுக் என்று சிரித்தாள் சின்னத்தங்கம்
''ஏன் அக்கா......... ஒருத்தரும் இங்கை குளிக்கிறதில்லையென்று நினைக்கிறியள்.........''
கமலம் ஏளனமாகச் சின்னத்தங்கத்தைப் பார்த்தாள்.
''குளிக்கிறவைதான். ஆனால் நல்ல உடுப்புத்தான் இல்லை. ஏன் இப்ப என்னையே பாருங்க அக்கா......என்னட்டை ஆக மூன்றேமூன்று உடுப்புத்தான் இருக்குது. மூன்று!'' சின்னத்தங்கம் எதையோ நினைத்துக் கொண்டு குனிந்திருந்தாள்.

''எனக்கென்றால் ஒரு நாளைக்கு ஒரு உடுப்பு அணிய வேணும், ஒரு கிழமைக்கொருக்கால் டோபி வராவிடில் தலை வெடித்து விடும்...''

சின்னத்தங்கம் குனிந்த தலையை நிமிர்த்தினாள் கண்களில் ஒளி துலங்கிற்று: ''ஆனால் உங்களைப்போல எங்களுக்கில்லை. எங்களுக்கு வெளுக்கிறவனும் இல்லை.....நாங்கள் வெளுக்கப் போடுறதும் இல்லை......''

பின்புறமாக ஏதோ சலசலத்தது. கமலம் திரும்பினாள். ஒரு குமரி துரவு ஒன்றில் பட்டையால் தண்ணீர் அள்ளிக் குளித்துக் கொண்டிருந்தாள். அது மறைவற்ற இடம்.
''ஏன் இந்தப் பிள்ளைக்கு கிணற்றில் குளித்தால் என்ன?''
சின்னத்தங்கம் அந்தத் துரவையே பார்த்தாள்.
''இங்கையும் துரவுகள் தான் அதிகம்......''

நெடிய தென்னை மரங்களிற்கு அருகே மண்ணை வெட்டி அகழ்ந்த இந்தக் கிடங்குகளில்தானா இவர்கள் எல்லோரும் தண்ணீர் அள்ளுகிறார்கள். குடிக்கிறார்கள். கமலத்திற்கு வயிற்றைக் குமட்டியது. இந்தத் தண்ணீரைத்தானா நானும் குடிக்க வேண்டும்? விறுக்கென்று எழுந்தாள் கமலம். ''வா வீட்டுக்குப் போவம்......'' சின்னத்தங்கம் அதிசயத்தோடு எழுந்தாள். ''இந்தத் துரவுகளிலை உள்ள தண்ணீரைக் குடித்தால் வயிற்றுக்குள்ளை ஒண்டும் செய்யாதா?'' பரிதாபமாகக் கேட்டாள் கமலம், ''இல்லையக்கா.....நாங்கள் இதைத்தான் நெடுகக் குடிக்கிறம். இது துப்பரவான தண்ணீர். இந்தத் தண்ணீரைக் குடித்து இங்கை யாருக்குமே ஒன்றும் நடக்கவில்லை. ஏன் வீணாகப் பயப்படுகிறீயள்?''

''ஏன் இப்படி தண்ணீர் குடிக்கிறநேரம் கிணறு கட்டினால் என்ன?''

''கிணறு?''

கேள்வியோடு அவள் குரல் வந்தது. வாய்க்குள்ளே சிரித்தாள் சின்னத்தங்கம். ''அவ்வளவுக்கு ஆரக்கா இங்கை காசுக்காரர்?''

வசதியான இரண்டு பாத்ரூம், ஷவர், தனிக்கிணறு, வீட்டுக்கு எல்லா இடத்திலும் வசதியான குழாய்நீர்வசதி இவையெல்லாவற்றுக்கும் சொந்தமான தான் இப்போது கிணறுகளே கட்ட வசதியில்லாத இந்த இடத்தில் நிற்ப தனை எண்ண அவளுக்கே வெட்கமாக இருந்தது.

''இந்த இடம் நெடுக இப்படித்தான் இருக்குமோ?'' அவளை மீறியே கேட்டாள் கமலம். சின்னத்தங்கம் அந்தக் கேள்விக்குப் பதில் சொன்னுள்.

''ஆருக்குத் தெரியும்?''

அவளை இப்போது பார்க்க இரக்கமாக இருந்தது கமலத்திற்கு. ''ஏன், நான் கேட்டது உனக்குக் கவலையாய் இருக்குதோ ......,''சின்னத்தங்கம் தலையசைத்தாள். மனம் கனத்தது அவளுக்கு.

''இங்கே நெடுக குடியிருக்கிற நீங்கள் நல்லாப் படித் தால் முன்னேறலாம்... அப்பதான் இந்த ஊரெல்லாம் திருந் தும்...... .. அப்பிடி நீ நினைக்கவில்லையா?''

சின்னத்தங்கம் கவலையோடு சிரித்தாள்.

''அக்கா படிக்கிறதுக்கும் வசதி வேணுமே? நாங்கள் தெண்டித்துப் படித்தாலும் எங்களுக்குப் படிக்கப் பள்ளிக் கூடம் இல்லை..... நாங்கள் கோயிலுக்குள்ளை கூடப் போகே லாதே உங்களைக் கலியாணம் முடிக்க நினைத்ததுக்கே அண் ணனுக்கு உங்கடை சொந்தக்காரர் எத்தினை அடி அடிச்சி ருக்கினம் தெரியுமோ ...... நாங்கள் ஒண்டுக்கும் சுதந்திர மில்லாமை இருக்கிறம் ......''

அவளின் வார்த்தைகள் தெறித்தன. தன்னை மீறிய வேகத்தில் அவள் கதைத்துக்கொண்டு நிற்கையில் பொலிஸ் ஜீப் ஒன்று உறுமிக் கொண்டு அங்கே வந்து நின்றது. விறைத்துப்போய் அசையாது நின்முள் கமலம். அவள் உணர் வுகள் அச்சத்தில் பதைபதைத்தன.

## நான்காம் அத்தியாயம்

இனிமையாகக் கிணுகிணுத்துக் கொண்டிருக்கும் வாத் தியங்களின் ஓசை மங்கிமறைய அறிவிப்பு ஒன்று ஆங்கிலத் தில் பரபரத்தது. மீண்டும் வெறியூட்டும் வாத்தியம். பெண்குரல் ஒன்று கணீரிட்டது. மண்டப வெளிச்சம் மெது

வாக அணைய எதிரேயுள்ள அழகிய மேடையில் மெல்லிய வெளிச்சமொன்று வட்டமிட்டு விழுந்தது, மெதுவாக பதுங்கிப்பதுங்கி.

மங்கிய ஒளியில் மகேஸ்வரன் கமலத்தின் தோளிலே கையைப் போட்டுத் தனக்கு அருகாக இழுத்துக்கொண்டான். காதிற்குள் மெல்ல ரகசியம் சொல்லிவிட்டு கன்னத்திலும் முத்தங் கொடுத்தான். மேடையின் வட்ட வெளிச்சத்தில் மினுமினுக்கும் உடையிலே கண்களில் வெறி பொங்க ஒரு பெண் கால்தரிக்காது நின்முள். திமிறும் உடலைத் திறிமிக் கொண்டிருந்தாள். வாத்தியமும் பெண் குரலும் மெல்ல மெல்ல வெறிகொள்ள அவளின் உடலும் குலுங்கி ஆடியது. குலுங்கித்தழும்பியது. கமலத்திற்கு அதைப்பார்க்கவே கண்கள் கூசின. அவனுடைய கைகளைத் தன்னுடலில் இருந்து மெதுவாக எடுத்து விட்டு தள்ளியிருக்க முயன்றவளை அவனின் வலிய கரங்கள் மேலும் இறுக்கி அருகாக இழுத்துக் கொண்டன. அவளின் உடலெல்லாம் புல்லரித்தது. அவனது கைகள் அவளின் சம்மதத்தை வேண்டி நிற்காது அவளை அளைந்தன.

மேடையிலே நின்றவள் ஒவ்வொரு உடுப்பாகக் கழற்றி எறிந்துவிட்டாள். இன்னும் இரண்டு சிறிய துண்டுகளே அவளின் உடலினைக் கௌவி இருந்தன. அதனையும் கழற்றி யெறியத் துடித்துக்கொண்டிருந்தாள் அவள். ''கமோன்-டார்லிங்'' என்று ஒரு குரல் மெதுவாய் ஒலியிட, பெண் குரல் ஒன்றின் நகைப்பு மௌன இருளினுள் சிந்தி அழிந்தது. கடைசியிலே அந்தப் பெண் தன் மார்புக் கச்சிலும் கைவைத்து அதை அவிழ்த்தெறிந்து விட்டு மேடையின் முன்புறத்திற்கு முதுகைக்காட்டித் துள்ளி மறைய மண்டபமெங்கும் வெளிச்சம் சிணுங்கிற்று. மனிதக்குரல்களிலும் காமம் பொருமியது. கமலம் அவனைப் பார்த்துவிட்டு தன் மினிஸ்கேட்டை கைகளால் கீழே இழுத்துவிட்டாள். அவன், அவளைத் தோளோடு அணைத்துக்கொண்டு எழுந்தான். அவனது நெடிய உருவத்தோடு அவள் ஒட்டிக் கொண்டு நின்முள்.

''சுவிற்றி, டிறிங்ஸ்?.. ......''

அவளுடைய சம்மதம் கேட்காமலே, அவளுடைய கையிலே குமிழ்க்கிளாஸ் ஒன்றினைக் கொடுத்து அதற்குள் போத்திலொன்றினைச் சரித்தான் அவன். கிளாசினுள் நுரை பொங்கிற்று. அவள் தயங்கினுள். அவன் அவளின் தயக்கத்தைக் கவனிக்கவில்லை. தன் கிளாசை அவள் கிளாசோடு முட்டி

விட்டு ஷியர்ஸ் என்றான். கிளாசினுள் நுரை ஸ்சிட்டது. ''கமோன்......'' அவன் அவளின் வாயிலே கிளாசைப் பதித்தான். அவள் சுற்றுமுற்றும் பார்த்தாள். அவர்களைப் போலவே எல்லோரும் தங்களையே மறந்திருந்தனர். அவள் எதையுமே பேசவில்லை மெல்ல மெல்ல அவளும் அவனைப்போலவே பருகிப்பருகிக் குடித்தாள். என்ன வெட்கம்......அவனோடு அவள் அமெரிக்காவுக்குப் போகிறாள். அவனையே தன் கணவனாக்கி விட்டாள். மெல்ல மெல்ல மனதைத் தழுவி, உடலை வருடும் மயக்கத்தினிடையே அவள் தன் இளமைக் கனவுகள் நனவாக உணர்ந்தாள். வேறொரு உலகில் சஞ்சரிக்கும் உணர்வுகளிலே தன்னையே இழந்துவிட்டாள் கமலம். விடிந்த நேரம் கதகதப்பான மெத்தையில், பெட் ஷீட் மூடுகைக்குள் அவனின் அணைப்பினுள் நிர்வாணமாகக் கிடக்கிறதை உணர்ந்த போது அவளிற்கு வெட்கமாக இருந்தது. மெல்ல எழுந்து உடையை அணிந்து கொண்டவளின் மனதிலே அந்தத் திண்ணை, பன்பாய், பனைக்கூட்டங்கள், துரவு, பாலசிங்கம், ......... தலையைக் குலுக்கிக் கொண்டாள் அவள். இந்தப் பத்து நாட்களையும் அவள் எவ்வளவு வேகமாக இரவு பகலென்றுபாராத நிகழ்ச்சிகளுக்குள்ளே தன்னை ஆழ்த்தியதன் மூலம் போக்கிக்கொண்டாள். இன்று, இது என்ன? கண்ணுடியில் போய்த் தன்னைப்பார்த்தாள் கமலம்.

சுருளான தலைமயிர் நெற்றியில் புரளும் நிலையில் புன்னகையோடு பாலசிங்கம் அவளின்முன் நின்றாற்போல, மெல்ல அவளின் தோள்களிலே கைவைத்தாற்போல, தன்னை வாஞ்சையோடு கெஞ்சினாற்போல..... அவனுடைய பராக்கிரமமான உடல், கெஞ்சும் கண்கள்......சுறுசுறுப்பு ''என்னைப் போகவா சொல்லுறீர் —'' பாலசிங்கம் இப்படித்தானே அவளைக்கேட்பான்......

பசுமையான வெறுந்திண்ணை, செம்மண், சாணிக்கும்பங்கள், பனைமரங்கள், துரவுகள், மலத்துணுக்குகள் சிதறிய பற்றைகள், மூக்குச்சளியும், அரைநிர்வாணமான குழந்தைகள் தெய்வி......

''கிஸ்மீ டார்லிங் ....'' காமந்துளும்ப அவன் கட்டிலிலிருந்து கூப்பிட்டது அவளுக்குக் கேட்காமையால் அவன் எழுந்து வந்து அவளை இறுக்கித் தழுவினான்.

''ஹோம் சிக் என்ன ...... வீட்டு யோசினையா?'' அவனது பரந்த உடலினுள் கமலமும், அவளது யோசனைகளும் புதைந்து அமுந்திப்போயின. அவன் தழுவலுள் அவள்

குழைந்து போனாள். அவளுக்குத் தேவையானவற்றில் எதையுமே மீதியாக வைக்கவில்லை மகேஸ்வரன். அனுபவங்களோடு பரிமாறினான்.

* *

அவன் அமெரிக்காவைப் பற்றிச் சொன்ன ஒவ்வொரு விஷயமும் கமலத்திற்குப் பிரமிப்பை ஊட்டின. எப்போதடா அமெரிக்காவுக்குப் போகப்போகிறேன் என்றிருந்தது அவளுக்கு. இலங்கை, அமெரிக்காவின் முன்னேற்றத்தோடு ஒப்பிடுகின்றபோது ஆயிரம் வருஷங்கள் பின்தங்கியிருப்பதாக அவன் சொன்னான். சிலிங்கோ கட்டிடம், கோல் பேஸ்ஹோட்டல் ஆகியனவெல்லாம் அங்கே பட்டிக்காட்டில்கூடக் கவனிக்கப்படமாட்டாது என்று கூறினான் அவன்.

ஐந்து ஆண்டுகளாக அமெரிக்காவில் வாழும் அவனை, மகேஸ்வரன் என்ற தன் அத்தானை தான் அடைவதற்கு தவம் செய்திருக்கவேண்டுமென்ற முடிவிற்குப் பதினோராம் நாளாகிய இன்று கமலம் வந்துவிட்டாள். நெடிய, சிவந்த குறுந்தாடி வைத்த தன் அத்தானின் சொற்களிலே அவள் கிறங்கிப் போய்விட்டாள்.

மகேஸ்வரன் தன்னுடைய பெயரை வெகு நாகரிகமாக ''கேஷ்'' என்று மாற்றி வைத்துவிட்டான். கமலத்திற்கும் அந்தப் பெயரே மிகவும் பிடித்துப்போய் விட்டது. அவனை அப்படியே அழைத்தாள் கமலம். கமலத்தை அந்தப்பதினொரு நாட்களிலும் ஓய்வாக இருக்கவிடவில்லை கேஷ். ஒவ்வொரு நாளும் சினிமா, கிளப், பார்ட்டி, கடற்கரை. கவலையற்ற பறவைகளென அவர்கள் உல்லாசங்களில் திளைத்துப் பறந்து திரிந்தனர்.

அவனோடு செல்கின்ற வேளையில், மனம் தனியனுகிற போதிலே பாலசிங்கம் அவளின் மனத்தோடு வந்தான் ... அந்தக் கனிவான முகம்... அவனது வாஞ்சையான குரல் வாழ்வானது காதலினாலேதான் இன்பக் காவியமாகிறது. அந்த இனிய காவியத்திற்காக எந்த வித்தியாசங்களையும் வேறுபாடுகளையும் உதறித்தள்ளிவிடுவோம் என்ற அவனது எழுத்து......ஆனால் பாலசிங்கம் அவளிற்கு எதைக்கொடுத்தான்? சாணிக்கும்பம், திண்ணை, பன்பாய், பற்றைகள், ஒரு நாள் தன்னும் நிம்மதியில்லாத வாழ்வு ...... பாலசிங்கத்தை இனியும் நினைக்கக்கூடாது எனக்கமலம் நினைத்தாள். தன் அத்தான் கேஷுடன் இருக்கிறபோது அவள் ஒரு உண்மையைத் தான் அறிந்ததாக நினைத்தாள். அவளின் ஆசைகள், கனவுகளையெல்லாம் நிறைவேற்றச் சகல தகு

திகளுமே கேஷிடம் உண்டென்பதுதான் அது. ஏதோ ஒரு மயக்கத்திலேதான் பாலசிங்கத்தை அவள் விரும்பி விட்டாள். அவன் குறைந்த சாதி, ஏழை, அவளோடு எவ்விதத்திலும் சமமாகமுடியாதவன். அவனும் அவளும் இணைவது சரியேயில்லை என்ற முடிவு அவள் நெஞ்சிலே அரும்பிவிட்டது. அந்த இரண்டு நாட்களை அவள் நினைவு கூர்ந்தாள். உறக்கமும் நிம்மதியும் இல்லாத அந்த நாட்களை இன்று ஒரு கெட்ட கனவாக நினைக்கிறாள் கமலம். எவ்வளவு தொந்தரவுகளோடும், அருவருப்போடும் பாலசிங்கத்தோடு கமலம் அந்த நேரங்களைக் கழித்தாள்!

பதினொரு நாட்களுக்கு முன்னிருந்த தன்மனநிலையை எண்ணித் தன்னைத்தானே கடிந்து கொண்டாள் கமலம். இலந்தை மரத்தினருகே சின்னத்தங்கத்தோடு கதைத்துக் கொண்டிருந்த போதிலே உறுமி வந்து நின்ற ஜீப்பிலிருந்து இறங்கிய பொலிஸ்காரர்கள் பிடரியில் பிடித்து இழுத்து பாலசிங்கத்தை வெளியே தள்ளினர். தொடர்ந்து அவனை கைகளாலும் பூட்ஸ் கால்களாலும் அடிஅடியென்று அடித்தனர். தலைமயிரைக் கையினால் பற்றி முகத்தில் ஓங்கிக் குத்தினர். சின்னத்தங்கம் வீரிட்டு அலறினாள்,

கணபதிப்பிள்ளை பாய்ந்து வந்து கமலத்தைப் பிடித்துக்கொண்டார். கமலம் என்ன செய்வதென்றே தெரியாது நிலைகுலைந்துபோய் நின்றாள். பாலசிங்கம் நிலத்திலிருந்து மெதுவாக எழுந்தான். அவனது வேட்டியும் சேர்ட்டும் தும்புதும்பாக கிழிந்திருந்தன. முகமெல்லாம் கீறல்களும் இரத்தக்காயங்களும், நெற்றி புடைத்து வீங்கியிருந்தது. கீழ் உதடு வெடித்து இரத்தம் கசிந்து வடிந்தது. கண்கள் கறுத்து மங்கிப்போய் அவன் உருவமே சோர்ந்துபோய் நின்றது. அந்தச் சத்தங்களைக் கிழித்தது ஒரு குரல்.

''என்ரை ராசா பாலசிங்கம்... '' சின்னக்குட்டி அலறி அடித்துக்கொண்டு பாலசிங்கத்தை வாரி நிமிர்த்தினாள். அவனது இரத்தக்கசிவுகளை சீலைமுனையால் ஒற்றினாள். ஆவேசத்தினால் அந்த முதிய உடல் ஆடிற்று, கண்களில் நெருப்புப் பொங்கிற்று. வார்த்தைகள் சீறின:

''என்னத்துக்கு என்ரை பிள்ளையை அடிச்சனீங்கள் ......'' கிழவி பொலிஸ்காரரை நோக்கித் திரும்பினாள். ''என்ரை பிள்ளை என்ன கொலையா செய்தது?'' கிழவி உரத்துக் கேட்டாள். ''நீங்களும் ஒரு மனிசரா?'' சின்னக்குட்டி காறித்துப்பினாள். பொலிஸ்காரருக்கு அவளின் செய்கைகள் எரிச்சலை மூட்டின. ''கிழவி அங்காலை போ........''

''நான் ஏன் போகவேணும்: என்ரை பிள்ளையைக் கொல்லுறதுக்குத்தான் என்னைக் கலைக்கிறியளா? என்ன காரணத்துக்கு நீங்கள் இப்படிச் செய்யிறியள்?''

அவளை ஏளனமாகப் பார்த்தபடியே பொலிஸ்காரன் ஒருவன் கடகடவென்று சிரித்தான். ''இவன் ஆர் உனக்கு? இவன் என்ன செய்தவன் தெரியுமா? இந்தப் பெரிய முதலாளியின்ரை மகளை ஏமாற்றிக் காசோடும் நகையோடும் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறான். உனக்குத் தெரியுமா? ... பிறகு பெரிய பிரபுமாதிரி அவனைப் பற்றிக் கதைக்கிறாய் -'' தான் நின்ற நிலையையும் மறந்து ஏளனமாகச் சிரித்தாள் சின்னக்குட்டி. ''என்னமாதிரியடா பொய் சொல்லுறீங்கள்... நல்ல கதைதரான்... அந்தப் பொடிச்சியைக் கேளுங்க அவள் மனச் சம்மதத்தோடைதான் பாலசிங்கத்தோடை வந்தவள் .....'' சின்னக்குட்டியின் கண்கள் கமலத்தைத் தேடின. கணபதிப்பிள்ளை விலங்குபோட்டது போல கமலத்தின் கையை முறுக்கியிருந்தார். கண்களில் பயங்கரமே ஒளியிட்டது.

சின்னக்குட்டி சீறினாள்: ''எங்கை அந்தப் பிள்ளை?''

பொலிஸ்காரருக்கு சின்னக்குட்டியில் வேடிக்கைபார்ப்பதற்கு மனம் வந்துவிட்டதுபோலும். பக்கத்தில் நின்ற ஒருவனைப் பார்த்து கொஞ்ச இளநீர் பிடுங்கிவாடா என்றான் இன்னொரு பொலிஸ்காரன். ''ஏன் உனக்கு பிள்ளை?'' பொலிஸ்காரனே கேட்டான். ''பின்னையென்ன அந்தப் பிள்ளையைக்கொண்டோ போகப் போறியள்?'' கணபதிப்பிள்ளை பற்களை நறும்பினார். ''அந்தப் பொடிச்சி பாலசிங்கத்தின்ரை கையைப் பிடிச்சிட்டாள். இரண்டு நாளாக அவனோடைதான் வாழ்ந்திட்டாள்... பிறகு .. பிறகு என்ன துணிவிலை அவளைக் கூட்டிக்கொண்டு போவீங்கள்?''

கமலத்திற்கு மனம் என்னவோ செய்தது. கணபதிப்பிள்ளை தடித்த குரலில் பொலிஸ்காரருக்கு கட்டளையிடுவது போலச் சொன்னார். ''எஸ். ஐ. நேரத்தோடை வரச் சொன்னவர். வாருங்க .....'' சப் இன்ஸ்பெக்டரை நினைவூட்டியதும் பொலிஸ்காரர் இளநீரை மறந்தனர். சப் இன்ஸ்பெக்டரோடு கணபதிப்பிள்ளை நெருங்கிய சினேகிதம். பிறகு அவர் போய் ஏதாவது சொன்னால் தேவையில்லாத கரைச்சல் ஏற்படும் எனப் பொலிஸ்காரர் நினைத்தனர். ஜீப் உறுமியது. எல்லோரும் ஏறிக்கொண்டனர். ஒரு பொலிஸ்காரன் கையை முறுக்கி இழுத்து பாலசிங்கத்தை ஜீப்பினுள் தள்ளினான்.

சின்னக்குட்டியின் குரலோடு வேறுகுரல்களும் வீரிட்டன. பொலிஸ் நிலையத்தில் பாலசிங்கம் தடுத்து நிறுத்தப்பட்டான். கமலத்தைக் கணபதிப்பிள்ளை வீட்டுக்கு அழைத்துச் சென்ருர். பயந்து பயந்து வீட்டினுள் கமலம் சென்ருள். கமலத்தைக் கண்டதும் அவளின் தாய் செல்லம்மா கண்ணீர் பொங்க ஓடிவந்து கட்டிக்கொண்டாள்: ''என்ரை கிளி, திரும்பி வந்திட்டீரோ?" தாய் விசித்தாள். தழுவினுள். முகத்தைத் தடவினுள். ஒன்றுமே பேசாமல் நின்ற கணபதிப்பிள்ளை கட்டளையிட்டார். ''முதலிலே கமலத்தை நல்லாக முழுகவார்த்துவிடு......''

செல்லம்மா மகளுக்கு ஏலக்காய் கமகமக்கும் முட்டைக் கோப்பியைக் குடிக்கக் கொடுத்து விட்டு முழுகுவதற்காக பாத்றூமிற்கு அழைத்துச் சென்ருள். தலைக்குச் சீயாக்காய் அப்பிக்கொண்டே அங்குமிங்கும் பார்த்துவிட்டு மகளிடம் மெல்லிய குரலில் கேட்டாள். ''பிள்ளை ஒழிக்காமல் சொல்லம்மா ...- வித்தியாசமாக ஏதாவது பிழை பாடு நடந்ததா?'' கமலத்திற்குத் தாய் கேட்டது விளங்கவேயில்லை. மௌனமாக இருந்தாள். பிறகு தலைக்கு நீர் வார்க்கின்றவேளையிலும் கேட்டாள் செல்லம்மா. ''தங்கச்சி அம்மாவுக்குத்தானே, சொல்லு கிளி —அவன் உனக்கு ஏதாவது செய்தவனே?'' தலை உச்சியில் சுடுதண்ணீர் வார்த்ததுபோலிருந்தது கமலத்திற்கு. தாயைப் பார்த்தாள். மௌனமாக நின்று விட்டுப் பின்னர் சொன்னுள்: ''அப்படி ஒன்றுமில்லை ..'' வெடுக்கென்று சொல்லிவிட்டு ஷவரைத் திறந்தாள் கமலம் பூமழை பெய்தது. அவள் மனம் நினைவுகளிலே நனைந்தது. இரண்டு நாட்கள் கடந்துபோன அந்த இரண்டு நாட்களும் அவளுக்குப் பயன்தரும் கனவுகளாய் இருந்தன. இரண்டு நாட்கள் அவள் குளிக்கவில்லை. சுதந்திரமாக முகம் அலம்பவில்லை. துரவு, சாணிக்கும்பங்கள், திண்ணை, அரிக்கன் லாம்பு, அண்டங்காகம், அவளிற்கு ஒவ்வொன்ருக நினைவிற்கு வந்தன. என்ன துன்பங்கள் தொடர்ந்த நாட்கள்......

பாலசிங்கம்? அவனுக்கு விழுந்த அடிகளை நினைக்கிற போது கமலத்தின் மனம் வருந்திவாடியது. திருந்தாத மக்களாயினும் அவர்களிடையே பாலசிங்கம் வேறுபட்டவனுக தோன்றினுன் அவளிற்கு. சின்னக்குட்டி சின்னத்தங்கம் ஆகிய இருவருமே அவளின் நினைவிற்கு அன்று வந்தனர். ஆனுலும் தானும் அவர்களும் பலவிதங்களிலும் வித்தியாசமானவர்கள் என்பதைமட்டும் அவளது மனம் வலியுறுத்திக் கூறிக்கொண்டிருந்தது.

செல்லம்மா கூறினுள். ''மகளே, நன்ருக யோசித்துப் பார்......நாங்களும் அவங்களும் சமமாக இருக்கமுடியுமா? அப்பாவின்ரை பணம், எங்களின்ரை சாதி இரண்டுக்கும் அவமானத்தைத் தேடித்தரவா நீ விரும்புகிருய்?'' 'இந்த மாளிகையளவுள்ள வீடு யாருக்கு? அப்பா தேடிய பணமெல்லாம் யாருக்கு? அளவேயில்லாமல் ஈசுவரன் எங்களுக்கு தந்திருக்கின்ற காணி பூமியெல்லாம் யாருக்கு? நீ பிறந்து பட்டு மெத்தையில் வளர்ந்தது இந்தப் பெரிய வீட்டில். உனக்காகவே ஒருத்தன் அமெரிக்காவில காத்திருக்கிறன்; இவ்வளவையும் அனுபவிக்காமல் நீ பரதேசி யோடையா சீவிக்கப்போருய். நல்லாக யோசித்துப் பாரம்மா..........''

தன்னுடைய கட்டிலில் இருந்து எதிரே தெரியும் நிலைக்கண்ணுடியைப் பார்த்துக் கொண்டிருந்தாள் கமலம். திரைச்சீலைகள் காற்றிற்கு எவ்வி ஆடின. மெதுவாக எழுந்து திறப்பை எடுத்துத் தன்னுடைய அலுமாரியைத் திறந்தாள்; நைலக்ஸ், காஞ்சிபுரம், மணிப்புரி, காஷ்மீர் நைற்றீஸ், சுவுண இவற்ருேடு பச்சை நிறமான வொயில் சாறி!

தலையைக் குடைந்தது கமலத்திற்கு அந்த வொயில் சாறியையும் பாலசிங்கத்தின் சின்னையா வீட்டிலேயே விட்டுவிட்டு வந்திருக்கிருள் கமலம். அவனே அடிக்கடி எழுதியிருக்கிருன் ... ... நாங்கள் மலையும் மடுவும். எத்தனையோ பேதங்கள் எங்களிடையே உள்ளன. அவள் அதற்குப் பதிலாக அடிக்கடி எழுதுவாள்..... கூழோ கஞ்சியோ எதுவாயினும் குடித்து குடிசையிலும் வாழ நான் தயாராக இருக்கின்றேன். பாலசிங்கம் என்னைப்பற்றி இப்போதுஎன்ன நினைத்துக் கொண்டிருப்பாரோ...: பாவம். அவள் பெருமூச்சு விட்டாள். அன்றிரவும் அவளிற்கு உறக்கம் வரவில்லை. என்ன செய்வதென்றே அவளுக்குத் தெரியவில்லை. மீண்டும் பாலசிங்கத்தோடு அவனுடைய கிராமத்திற்கு ஓடிப்போக அவளின் மனம் எண்ணவில்லை. அந்தக் கிராமம் வாழும் வாழ்விற்காக அவளின் நெஞ்சம் இரக்கப்படவில்லை. அருவருத்தாள். இந்தச் சனங்களுக்குள்ளே பாலசிங்கம் ஏன் பிறந்தார்? யோசித்துக்கொண்டிருந்த அவளையே விக்கினேஸ்வரன் விழுங்குவது போலப் பார்த்தான். ''அக்கா இரண்டு நாள் நீ இல்லாததிலை நான் சாப்பிடவேயில்லை ..'' கமலம் அவனைக்கட்டிக் கொண்டாள். அன்று பின்னேரம்தான் கணபதிப்பிள்ளை மகளோடு

கதைத்தார். "கமலம்...... உனக்கு நான் ஒரு விஷயம் சொல்ல வேணும்,......" கமலம் ஏறிட்டாள்.

"உனக்கு நான் இதுவரை ஏதாவது குறைவைத்தனு? சொல்லு மகளே......" கமலம் தலையை அசைத்தாள். "அப்படியென்ருல் இனி நீ நாங்கள் சொல்வதைக் கேட்கவேணும்......" மௌனமாகத் தலை குனிந்தாள் கமலம். "பச்சைமண்ணும் சுட்ட மண்ணும் ஒரு போதுமே ஒட்டிறதில்லை மகளே... எங்களின்ரை பரம்பரையை யோசித்துப்பார். எங்களின்ரை சாதியையும் ஒழுக்கத்தையும் நீதியையும் யோசித்துப்பார்... நீ உனக்கு யார் விருப்பமென்று போனியோ அவனுடைய ஊரைப் பார்த்தியா? எங்களின்ரை முன்னோர் சொன்னதை நீ நினைக்கிறதில்லையா எல்லாத்துக்கும் ஒரு தகுதியிருக்கவேணும்......"

கணபதிப்பிள்ளை சுவரைப் பார்த்தார். சிவலிங்கம் ஒன்று அழகிய பெட்டியிலே இருந்தது. சிறிது நேரம் யோசித்தார். "சாதி என்றது இன்றைக்கு நேற்றைக்கு வந்ததில்லை மகளே நந்தனுரின் சரித்திரத்தையே பார். நந்தன் கோயிலுக்கு வெளியிலை நின்றுதான் நடராசதரிசனம் கேட்டான். கடவுளும் நந்தியை விலகச்செய்தாரே தவிர நந்தனைக் கோயிலுக்குள்ளை வந்து கும்பிடு என்று சொல்லவில்லை......" மின்னல் போலொரு நினைவு அவ்வேளையிலே கமலத்தின் மூளையிலே வேர்விட்டது. சின்னத்தங்கம் தாங்கள் கோயிலுக்கோ, பள்ளிக்கூடத்துக்கோ போகச் சுதந்திரமற்றிருப்பதாகச் சொன்னது நினைவில் வந்தது.

"தங்களை எல்லாம் நாங்கள் அடக்கி மிதித்து வைத்திருக்கிறம் என்று கீழ்சாதிக்காரர் சொல்லிக் கொண்டு கலகங்கள் செய்கிறுங்கள். இந்த நேரத்திலை நாங்கள் அவங்களோடை சமனுகப் போகலாமா?"

கமலம் ஒன்றுக்குமே பதில் சொல்லாமல் இருந்தாள். "நாளைக்குப் பின்னேரம் நாங்கள் கொழும்புக்குப் போக வேணும். அவங்கள் பாலைக்கத்திகளோடை புளங்கிறவங்கள். இரக்க சிந்தனை இல்லாதவங்கள். தற்சமயம் ஏதாவது அடிபிடிக்கு வருவாங்கள்...... அதற்கு முந்தி ஒரு அலுவல் இருக்குது......"

கண்களாலேயே என்ன என்பதுபோல அவரைப் பார்த்தாள் கமலம். "நாளைக்குக் காலையிலை பொலிஸ் ஸ்ரேசனுக்குப் போகவேணும். அங்கை விசாரணை நடக்கும். எனக்குப்பாலசிங்கத்தோடை போக விருப்பமில்லையென்று

நீ சொல்லவேணும்.'' அவர் அவ்வளவு நேரமாக ஏன் வெகு ஆறுதலாகக் கதைத்தார் என்பதை அவள் அப்போது தான் விளங்கிக் கொண்டாள். எனினும் அதற்கும் அவள் ஒரு பதிலும் சொல்லவில்லை. மீண்டும் கணபதிப்பிள்ளை அழுத்தமாகக் கூறினர்:

''நான் சொல்லித்தந்தது மாதிரியே சொல்லவேணும். பிறகு வீண் கஷ்டங்கள் வரும்......''

குழப்பங்கள் நிறைந்த மனதிைேடு அடுத்தநாள் காலை கமலம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்ருள். பாலசிங்கமும் சிலரோடு வந்திருந்தான். அவனைப் பார்க்கவே கூச்சமாக இருந்தது கமலத்திற்கு. ஓரக்கண்களால் பார்த்தாள். மெலிந்து கறுத்து நெற்றியில் ஒட்டிய பிளாஸ்திரியோடு நின்ருன் பாலசிங்கம். அவளையே கூர்ந்து பார்த்தபடி நின்ற பாலசிங்கத்தின் மனம் அவளின் வார்த்தைகளையே எதிர்நோக்கியிருந்தது. அவளின் சொற்களிலேதான் எல்லாமே இருக்கிறது. அவனின் சந்தோஷம், நிம்மதி, எதிர்காலம் எல்லாம்.

சின்னக்குட்டியும் சின்னத்தங்கமும் அவன் காலையிலே புறப்பட்டபோது அவனது வீட்டிலேயே நின்று வழி அனுப்பினர். அப்போது அவர்கள் கமலத்தின் மீது சொரிந்த பரிவும், அவளைக் கட்டாயம் கூட்டிவர வேண்டுமென்று சொன்ன ஆர்வமும் அவனது மனதையே நெகிழ்த்தின. பாலசிங்கம் நகர நாகரிகங்களைச் சிறிதளவாயினும் அறிந்தவன். தன்னுடைய சிறிய கிராமம் தனக்காகப் படும் துயரங்களை நினைக்கையில் அந்தத் துயரின் நடுவேயும் அவன் பரவசமடைந்தான். செம்மண், பனைக்கூடல், நாகதாளி, ஒடுங்கிய குடிசைகள்... இவைதான் அந்தக்கிராமமாயினும் அங்கே நிலவும் மனித நேசம், இரக்கம், நேர்மை, ஆகியவை யாரால்தான் வெறுக்கப்படத்தக்கவை. ஒவ்வொருவனும் உழைத்தான். அவனது வாழ்வினை எத்தனையோ விஷயங்கள் அமுக்கினுலும் தலைநிமிர்ந்து நின்று உழைத்தான். அவனது சில கூட்டாளிகள் இன்று அவனேடுகூட வந்திருக்கிருர்கள், கமலத்தைப் பாலசிங்கம் கூட்டிவருவதனை யாராவது தடுத்தால் அவர்களுக்கு நல்ல பாடம் படிப்பிக்க அவர்கள் தயாராக வந்திருக்கிருர்கள்.

அத்தோடு அவனுடைய மனதினை இன்னெரு சம்பவமும் நெகிழ்த்திக் கொண்டிருந்தது. தான் ஆஸ்பத்திரியிலே கிடந்தபோது தன்னை ஒரு தகப்பனுக்குரிய பாசத்தோடு

வந்து பார்த்துச் சென்ற தங்கராசா இன்று காலையிலே தன்னைக் கண்டு, தன்னுடைய கையிலே ஏதாவது தேவைக்கு உதவக்கூடும் என்று கையினுள் என்வலப்பொன்றினுள் வைத்துப் பணங் கொடுத்தது அடிக்கடி கண்களிலே வந்து கொண்டிருந்தது. தங்கராசாவோடு ஆஸ்பத்திரிக்கு வந்து பார்த்த பளபளக்கும் கண்களையுடைய வள்ளிப் பெட்டையையும் அவன் மனம் அடிக்கடி கூர்வதுண்டு. கமலத்திடம் தன் தூதாக அவளை அனுப்பக் கேட்டு ஏச்சு வாங்கினதை அவனால் மறக்க முடியவில்லை.

அவன் எதிர்பார்த்திருந்த அந்த நிமிஷங்கள் வந்தன கமலம் மெல்ல நடந்துபோய் பொலிஸ் இன்ஸ்பெக்டருக்கு எதிரே நின்ருள்.

"நீர் யாரோடு போகப்போகின்றீர்? ...

இன்ஸ்பெக்டரின் குரல் ஓயமுன் அவளின் பதில் வந்தது. "நான் என்னுடைய அம்மா பப்பாவோடையே போகப் போகிறேன் ---"

இன்ஸ்பெக்டர் புன்னகை செய்தார்.

பாலசிங்கம் ஒன்றுமே பேசவில்லை அவனுக்கு எதுவுமே தெரியவில்லை. வாயைத் திறந்து ஓலமிடவேண்டும் போலிருந்தது. மிகப் பரிதாபகரமாகத் தன் கூட்டாளிகளைப் பார்த்தான். தலைகுனிந்து நின்றனர் அவர்கள் மறுநாட் காலை அவள் கொழும்பிற்குப் போனுள். சொல்லிவைத்தது போல அன்று மத்தியானம் அவளின் அத்தானும் கொழும்பிற்கு அமெரிக்காவிலிருந்து வந்துவிட்டான். இன்றோடு பதின்மூன்று நாட்கள். இன்னும் இரண்டு தினங்களில் அவர்கள் அமெரிக்காவுக்கு விமானத்தில் பறக்க இருக்கிருர்கள்.

அந்தக் கிழுவமரத்தடியில் கவலையோடு நின்ருன் பாலசிங்கம் ஆட்டுக்குட்டிக்கு கிளுவமிலை பறிக்கவந்த சின்னத்தங்கம் பாலசிங்கத்தையே இரக்கமாக பார்த்துக் கொண்டு நின்ருள். தொலைவில் மாடுகளின் அம்மா ஒலி கேட்கிறது. மங்கிய மாலையில் பனைகளைச் சுற்றிக் கிளிகள் பறந்து கொண்டிருந்தன. பனைக் கூட்டங்கள், சாணிக்கும்பங்கள், கோழிகள், குடிசைகள் யாவையும் இருள் மூடிக் கொண்டிருக்கின்றது. சின்னத்தங்கம் பாலசிங்கத்திற்கு அருகாகப்போய் மெதுவாகக்கூறிஞள்! "அண்ணை ஒண்டுக்கும் யோசிக்காமல் வீட்டை போங்கோ. ஆச்சி தேடிக் கொண்டிருக்கிரு."

# சிறுபொறி, பெருந்தீ

அவன், யாருடனும் ஒன்றிரண்டு சொற்களுக்கு மேலாகக் கதைத்ததை அந்தக் கடைத்தெருவில் யாருமே கண்டதில்லை. மௌனமே சொற்களாய் வழியும் அவனது முகத்தில் புன்னகையோ, கவலையோ, எந்த உணர்ச்சியோ கூட ரேகையிட்டதில்லையென்று கடைத்தெருவிலே பேசிக் கொண்டார்கள். ஆனாலும் அவன் அந்தக் கடைத்தெருவுக்கு அறிமுகமாகி நாலைந்து வருடங்கள் கழிந்தோடிப் போய்விட்டன.

கிராமம் என்ற நிலையை மீறிப் பட்டணமாகிவிட்ட, அந்த இடத்திலுள்ள பலராலும் புகழ்ந்து பேசப்படுகின்ற ''காமாட்சி விலாஸ்'' என்ற பெரிய சாப்பாட்டுக்கடையிலே அவன் சமையற்காரனாகி, அங்கேதான் தங்கியிருக்கின்றான். அவனுடைய பூர்வோத்திரம் அங்குள்ள யாருக்குமே தெரியாது. அதைப்பற்றிக் கேட்பதற்கு யாருமே அக்கறைப் பட்டதுமில்லை. அப்படிச் சொல்வதற்கு இவன் யாருடனாவது இதுவரையிலும் மனம் விட்டுப் பழகியதுமில்லை.

காட்டுப் பாதையில் எரிந்து சரிந்திருக்கும் புடைத்த தேக்கமரம்போல அவனது வைரம் பாய்ந்த உடம்பு; வாரப்படாமையினால் எந்நேரமும் அலைந்து பறந்து கொண்டிருக்கும் நீண்ட பரட்டைத் தலைமயிர்: விழித்திருக்கின்ற நேரமெல்லாம் கண்கள் நித்திரை கொள்வதுபோல அரை குறையாகச் சோர்ந்து களைத்திருக்கும். நெஞ்சின் வலது புறமார்பில், கத்தி தாளவெட்டி ஆறிப்போன பெரியதோர் தழும்பு. அவனது இடதுகையில் சீறிக்காலைத் தூக்கி நிற்கும் சிங்கத்தின் உருவம் பச்சை குத்தப்பட்டிருந்தது.

கால்களை நிலத்தில் அழுந்தி அவன் நடக்கும்போதும், புருவம் அடர்ந்த கூசும் கண்களால் உற்றுப் பார்க்கின்ற வேளையிலும், அவனுக்குப் பக்கத்திலுள்ளவர்களுக்கு ஒதுங்கிப் போகும் அச்சம் தோன்றுவதோடு மட்டுமல்லாது, பயங்கலந்த மரியாதையும். ஒதுக்க மனுேபாவமும் நெஞ்சினுள்ளே குடிகொள்ளும்.

அந்தப் பட்டணத்தில் ஒரு உபதபாற் கந்தோர், டி. ஆர். ஓ. காரியாலயம், நீதிமன்றம், பொதுவேலைப் பகுதி ஆகியன இருந்தமையினுல் அங்கு உத்தியோகம் பார்க்கின்ற குடும்பமே இல்லாத பிரமச்சாரிகளுக்கும் மனைவி குழந்தைகளை ஊரிலே விட்டுவிட்டு வந்த குடும்பஸ்தர்களுக்கும் ஏற்ற ஒரு நல்ல கடையாகவும், அவசியமான இடமாகவும் ''காமாட்சி விலாஸ்'' விளங்கியது. எந்நேரமும் கலகலப்பான வியாபாரம் நடந்துகொண்டிருக்கும் காமாட்சி விலாசில் இரண்டு சமையற்காரர்களும், நான்கு பரிசாரகர்களும் கடமையாற்றுகின்றனர்.

''காமாட்சி விலா'' சின் அதிபர் ஆரோக்கியநாதன், புசல்லாவையில் பெரிய ஹோட்டல் ஒன்றின் உரிமையாளராக இருந்து, வகுப்புக் கலவரங் காரணமாக ஹோட்டல் உடைத்துச் சூறையாக்கப் பட்டதின் பின்பு இங்கு நூறு ரூபாப் பணத்தோடு மட்டுமே வந்து தேனீர்க் கடையொன்றைத் தொடங்கி, தானே தேனீர் போடுபவனுயும், முதலாளியாயும் நின்று, இன்று இந்த நிலைக்கு உயர்ந்திருக்கிறுர். ''காமாட்சி விலா'' சில் இருந்து கூப்பிடு தூரம் தள்ளி அவரது அமெரிக்கன் மொடலில் கட்டப்பட்ட வீடு உள்ளது. அந்த வீடு சென்ற ஆண்டு தைமாதத்தின் போது தான் கட்டிமுடிக்கப்பட்டது. அதற்கு ஆரோக்கியநாதன் ''காமாட்சி மகால்'' என்ற பெயர் சூட்டியிருக்கின்றுர்.

அவர் கடை தொடங்கிய ஆறு வருஷ காலத்திற்குள் குறைந்தது நாற்பது பேராவது அவரின் கடையிலே வேலை செய்திருப்பார்கள். பதினெட்டுப் பத்தொன்பது மணித்தியாலங்களுக்குமேல் கடுமையாக வேலை செய்து உழைத்தாலும், அவர் நாலைந்து மாதங்களுக்கு மேல் ஒருவனை வேலைக்கு வைத்திருந்ததில்லை. ஏதாவது குருட்டுக் காரணங்களைச் சொல்லி ஒரு சதங்கூடச் சம்பளங் கொடாது பலரை அவர் கடையிலிருந்து விரட்டிக் கலைத்திருக்கின்றுர்.

''கனநாளைக்கு ஒரேயிடத்திலை நின்ருல் இடம்பிடிபடுகிறதோடை, உரிமைகளும் வேணுமெண்டு இவங்கள் கேட்கத் தொடங்கி விடுவாங்கள் பாவம் பழியெண்டுவேலை

கொடுக்கிறது மில்லாமல் பிறகு நாங்கள் இவங்களாலே கஷ்டப்பட வேண்டி வரும்'' என்று தனது கடையிலேவேலே செய்பவர்களேப் பார்த்து அடிக்கடி முணுமுணுத்துக் கொள்வார். ஆனுல் அங்குள்ள இரண்டு சமையற்கரரரையும் அவர்மிகவும் கவனமாக நடத்துகிறுர். இவையெல்லாம் அவரின் தொழில்ரகசியங்கள்.

* *

மழை சோணுவாரியாகப் பெய்து கொண்டிருந்த மாரி கால நாளொன்றின் போது கடைக்கதவுகளேப் பூட்டிக் கொண்டிருக்கையில் கடையின் ஓரக்கதவோடு அந்தக் கறுத்துத் தடித்த உருவத்தை ஆரோக்கியநாதன் கண்ணுற்ருர். ''யார் அது? என்ற ஆங்காரக்குரலோடு லேயிற் வெளிச்சத்தை அந்த முகத்தின் மேலே பாய்ச்சிப்பார்த்து சதைக்குள் மடங்கிய அந்தக் கூசிய கண்களேயும், நனேந்து சளியும் பரட்டைத் தலேமயிரையும் கண்டபோது, அவரின் சினம் மண்ணெண்ணே ஊற்றிய அடுப்பாய்க் குப்பென்று பற்றியெரிந்தது ''யாரடா அது?'' என்றது அவரின் அகங்காரக்குரல். அவருக்குக் கோபம் வருகின்றபோது தனக்கே உரிய முகச் சுழிப்போடு சொற்களே அழுத்திப்பேசுவது தான் அவரின் வழக்கம். அவரின் அந்தக்கேள்விக்கு அவரே எதிர்பாராத விதமாகப் பதில் வந்தது. ''இது உன்ரை கொப்பன் வீட்டுக் காணியில்லே. பேசாமல் கதவைப் பூட்டு.''

கரகரத்த குரலின் பங்கரம், அந்தக் குரலிற்குரிய உருவத்தை ஆரோக்கியநாதனின் கண்களில் மானசீகமாகக் கொண்டு வந்து நிறுத்திற்று. பேசாமல், கதவை உள்ளாகப் பூட்டிக் கொண்டு பின் புறமாக நின்ற சுகுமாரனேயும், கந்தையாவையும் வெளியே பாயை விரித்துப் போட்டுக் கொண்டு படுக்கும்படி சொல்லிவிட்டு, அவர்கள் படுத்த பின்பு அங்கிருந்து தமது வீட்டை நோக்கி நடந்தார், நல்ல நிலவு காலம்.

நிலவு, குளிர்ந்ததோர் பிரகாசமான பகலெனப் பெய்துகொண்டிருந்தது. மீன்களேப் பிடிக்க எறியும் நைலோன் வெண்ணிற வலேயென ஒரு முகிற் துண்டு நிலவிற்கு மேல் அரை குறைச் சதுரமாய்ச் சொரிந்து ஆடிக் கொண்டிருந்தது; ஆடிக் கொண்டே அசைந்தது.

ஆரோக்கியநாதன் வழமையாக வீட்டிற்குப் போகும் போது ஏதாவது பாட்டை வாய்க்குள் முணு முணுத்துக் கொண்டு போவது வழக்கம். இன்று மௌனமாக சுற்று முற்றும் பார்த்தபடி மடியை இறுக்கிக் கொண்டு அவர் வேகமாக நடந்தார்.

ஊர் உறக்கத்தின் மௌனத்தில் ஆழ்ந்துவிடத் தொடங்கிய அவ்வேளையில், எங்கிருந்தோ ஒலி பெருக்கி பாடும் பாடல் காற்றோடு மிதந்து வந்து வெகு துல்லியமாகவே கேட்டது. ''மானிடவாழ்வு பெரும் ஆனந்தம்'' என்ற எம். கே. தியாகராஜா பாகவதர் பாட்டு. அவருக்கு அப்பாட்டில் மிகவும் விருப்பம். பின்னால் திரும்பிப் பார்த்தார். அவன், அந்தக் கடைவாசலில் கண்ட முரடன் இல்லை. ஒருவருமே கண்ணுக்கு வெகுதூரம் வரை தட்டுப்படவில்லை. ஆரோக்கியநாதன், அந்தப் பாட்டை வெகு திருப்தியுடன் வாய்க்குள் முணுமுணுத்துக்கொண்டார்.

பொழுது விடிந்து கடைக் கதவைத் திறக்கும்போது கடைக்கு நேரே, வீதியின் எதிராக உள்ள சடைத்து வளர்ந்த ஆலமரத்தினடியில் கவலையேதுமின்றி அந்தக் கறுத்துத்தடித்த உருவம் படுத்துக் கிடந்ததைக் கண்ட பின்னர்தான் ஆரோக்கியநாதனுக்கு மனத்தெம்பு ஏற்பட்டது. அவருக்கு அதிகாலையில் துயிலெழும் போது, மனதினுள்ளே மின்வெட்டுப் போலோர் யோசனை தோன்றியது. எல்லாம் அந்தக் கறுத்துத் தடித்த உருவத்தைச் சுற்றித்தான்.

கடையில் வியாபாரம் பரபரப்பாக நடந்து ஓய்ந்து, கடைப் பையன்கள் அவசர அவசரமாக மத்தியானச் சாப்பாட்டை அள்ளி விழுங்கிக் கொண்டிருக்கும் நேரமான மூன்றரை மணிக்கு வெற்றிலையை நீரில்போட்டுக் கழுவித் தெளித்து அடுக்கிவிட்டு மேசையின் முன்பு வந்த ஆரோக்கியநாதன், தன் எதிரே அந்தக் கறுத்துத் தடித்த உருவம் வந்து நின்றதைக் கண்டார். நேற்றுக் கடை பூட்டும் நேரத்தில் நடந்த சம்பவமும், அதிகாலையில் துயிலெழுகையில் தன் மனதில் அந்தக் கறுத்த உருவம்பற்றி எழுந்த நினைவும் அவரின் நெஞ்சினுள்ளே குறுகுறுத்துக் கொண்டு கிடந்தது. அந்தஉருவமோ அப்படியோர் சம்பவமே நேற்று நடந்ததாய்க் காட்டிக் கொள்ளாது மௌனத்தைக் குலைத்துக்கொண்டு கரகரத்த குரலிற் கேட்டது:

''எனக்கொரு வேலை தரமுடியுமா?''

ஆரோக்கியநாதன் அக்குரலையே கேளாதவர் போலக் கண்களை நீண்ட கணக்குக் கொப்பியின் பக்கங்களுக்குள் புதைத்துக் கொண்டு சிக்கலான கணக்கொன்றைக் கூட்டுபவர் போலப் பாவனை செய்து கொண்டிருந்தார்.

'மடையா நான் சொல்வது உன் காதிலே விழவில்லையா' என்ற தோரணையில் மீண்டும் அவன் கேட்டான்:

''எனக்கு ஒரு வேலை தரமுடியுமா?'' அந்த நெஞ்சைத் தொடும் கரகரத்த குரலை மீறி அலட்சியம் செய்து தொடர்ந்து பாவனை பண்ண முடியவில்லை ஆரோக்கியநாதனால். தன் எதிரே விறைத்த தேக்கமரமென நின்ற அவனைத் தலையிலிருந்து கால்வரை ஏறஇறங்கப் பார்த்து விட்டு,

''வேலை ஒன்றும் இங்கையில்லை'' என்றார்

அவன் விடுவதாயில்லை. முகத்தைக் கோணினான்,

''சமயல் வேலை திறமாய்ச் செய்வன்'' அவனே சொன்னான். ஆரோக்கியநாதன் கண் புருவங்களைச் சுழித்து, மனதினுள்ளே பொங்கிய உற்சாகத்தை வெளிக்காட்டாது சலித்தவர் போல முகபாவத்தை மாற்றிக்கொண்டார்.

நிமிர்ந்து உட்கார்ந்தபடியே அவர் கேட்டார். முந்தி எங்கையாவது செய்ததுண்டா?''

''ஓம்''

''எங்கையெங்கை?''

''கனஇடத்திலை''

அவன் பறட்டைத் தலைமயிரை அழுத்தி இடதுகையைப் பிடரியில் தேய்த்துக் கொண்டான். இனிக் கேள்விகேளாதே என்பது போலப் பதில் வந்த பிறகு ஆரோக்கியநாதன் தொடர்ந்தும் அவனைக் கேள்வி கேட்க விரும்பவில்லை. அவ் வேளையில், உள்ளேயிருந்து வந்த பையன் விசுவலிங்கம் அவரிடம் காய்கறி வாங்கக் காசைக் கேட்டுப்பெற்றுக் கொண்டு அவர்களிருவரையும் அதிசயமாகப் பார்த்து விட்டுக் கூடையோடு வெளியே போனான்.

''சரி அப்படியெண்டால் எவ்வளவு சம்பளம்?''

''சாப்பாட்டோடை ஐம்பது ரூபா'' ஆரோக்கியநாதன் மனதினுள் பிதுங்கிய ஆச்சரியத்தோடு அவனைப்பார்த்தார். எல்லாவற்றையுமே ஏற்கனவே யோசித்து வைத்துப் பதில் சொல்வது போல இந்தத் தடியன் மறுமொழிகள் சொல்கிறானே என்று ஆரோக்கியநாதன் தனக்குள்ளேயே நினைத்துக் கொண்டார். எனினும் தன்னைச் சமாளித்த படியே, அந்த நீண்ட கணக்குப் புத்தகத்தைக் கைகளால் இழுத்து, ஏதோ அவசரக்கணக்கு பார்ப்பது போலப் பக்கங்களைப் புரட்டிக்கொண்டு ''நீ கேக்கிறது கூடிப்போச்சுது முப்பது ரூபா தரலாம், வேறை பேச்சில்லை'' என்றார். அவன் அவரைக் கூர்ந்து கூசிப்பார்த்து விட்டு இடதுகையில் பச்சை குத்தியிருந்த சிங்கத்தைத் தடவி வருடியபடி கனைத்தான்.

"வேறை கதையில்லை நாற்பது ரூபா தந்தால் சரி" அவனுடைய பேச்சு, கம்பீரம் முரட்டுத்தனம் ஆகியவை தனது கடையின் பாதுகாப்பிற்கும் தனக்கும் தேவை என்று அவர் நேற்றிரவு முடிவு செய்திருந்தாராகையினுல், இந்தத் தொகையோடேயே அவனிடமிருந்து கூடிய உழைப்பினைக் கறக்கலாம் என்ற நம்பிக்கையோடு மன மின்றி ஒப்புதல் சொல்பவர் போல அவர் கேட்டார்!
"என்ன பேர்? என்ன ஆள்?" ஆள் என்ற சொல்லை வெகு வாய் அழுத்தி ஆரோக்கியநாதன் கேட்ட கேள்விக்கு அவன் மீண்டும் கத்திவெட்டி ஆறிப்போன தழும்பை நெருடியபடி மிடுக்காகச் சொன்னுன்!
"பேர் சிங்கம் - வீரசிங்கம் நல்லாள்தான்" அவனுடைய சாதியை வெகு நசுக்காக அறிய விரும்பிய அவரின் முகத்தை ஏளனமாகப் பார்த்து அவன் சொன்ன பதிலின் காரத்தை உணர்ந்து கொண்டவர்போல ஆரோக்கியநாதன் கதிரையைப் பின்னே தள்ளி எழுந்து, அவனைப்பின் பக்க மாகக் கூட்டிச் சென்ற போது, பெரிய விறுக்கியின் மூலை யிலிருந்த சுவர் மணிக்கூடு ஒன்பது தரம் அடித்து ஓய்ந்தது.

II

சிங்கம் அங்கே சமையற்காரனுக வந்து நாலரை வரு டங்கள் கழிந்து விட்டன. அவன் இதுவரை வீணுக யாரு டனும் அலட்டிக் கொண்டதில்லை. தானுண்டு தன்பாடுண்டு என்றிருக்கும் அவன் ஒரே ஒரு நாள் காற்சட்டைபோட்ட ஒருவனுக்கு உழுந்து அரைத்துக் கொண்டிருந்தகையினுல் மளார் மளாரென்று ஓங்கியடித்திருக்கின்றுன். அது ஒரு மின்னல் வேகச் சம்பவம்; நடந்த சுவடே தெரியாது நடந்தொழிந்தது அந்த முரட்டுத் தாக்குதல்.

சிங்கம், சடையன் என்ற நாய்க்குட்டியை வளர்த்து வந்தான். கடையின் பின்புறத்தில் எச்சில் இலைகளைக் கொட் டிக்குவிக்கும் பெரிய தகரத்தின் ஆவென்ற வாய்ப்புறத்தில் முன் கால்கள் இரண்டிலும் நிற்பதே சடையனின் பிர தான தொழில். அப்படி உணவுக்காகச் சடையன் காத்து நிற்கையில் அதன் தலையில் வாய் கொப்பளித்து துப்பு வதை உழுந்து அரைத்துக் கொண்டிருந்த சிங்கம் கண்டு விட்டு, வெகு அலட்சியமாகக் காறித்துப்பியபடியே கை துடைத்துக் கொண்டு நின்ற காற் சட்டைக்காரனுக்குக் கன்னத்தில் பளார் பளாரென்று ஓங்கி அறைந்து விட்டு செருமியபடியே ஒன்றும் நடவாதவன் போல மீண்டும் போய் உழுந்தரைத்துக் கொண்டிருந்தான். முகத்தில் அப்பி

வழியும் உழுத்தம்மாவை கன்னத்தில் அழுத்திக் கைலேஞ்சியினுல் துடைத்துக்கொண்டுபோன அந்தக்காற் சட்டை, அன்று அப்போதே அக்கடையோடு தனக்குள்ள கணக்கை முடித்துக் கொண்டது.

சிங்கம் நாலாம் வகுப்பு வரையில்தான் படித்தான். படித்தானென்று கூறுவதை விடப் பள்ளிக்குப் போய்வந் தான் என்று கூறுவதே மிகப்பொருத்தமானது. இவ்வளவு ஆண்டுகள் கழித்துங்கூட அவனுக்குப் படிப்பித்த கறுப்புச் சோமரை அவன் மறக்கவில்லை. அவர் புளியமிலறினுல் அவனை வாங்குவாங்கென்று வாங்கியிருக்கின்ருர். ஒரு காரணமுமில்லாமல் அவனை அடித்து நொருக்கியிருக்கின் ருர் சோமர். அப்போதெல்லாம் அவனது ஒரே நண்பன் சீசர் என்ற நாய்க்குட்டி தான். சீசர் நாய்க்குட்டியை அவன் உயிருக்குயிராகவே நேசித்தான். அவனைப் பின் தொடர்ந்து எங்காயினும் தொடர்ந்து செல்லும் சீசர். தேவையில்லாமலே தன்னை விரோதிக்கும் சோமரிடம் சென்று அவன் படிக்க விரும்பவில்லை. நிம்மதியற்ற வீடு, இருக்கும் நிம்மதியையும் குலைக்கும் பள்ளிக்கூடம்; இவை யிரண்டிலுமிருந்து வீடுதலை பெற்று எங்காவது ஓடித் தொலைய விரும்பினுன் வீரசிங்கம்.

குழந்தைப் பருவத்தின் ஆசைகள் எப்படியெல்லாம் கருகிப்போயின. வம்சத்தையே மறந்து விட்டான் அவன். அவனது பெற்ருேர்களும், சகோதரர்களும் எங்கெங்கே இருக்கிருர்களோ, புதைகுளிக்குள் மக்கிப்போயினரோ......

அவனை என்றுமே மறவாது நேசித்தவை நாய்கள்தான். அவனுக்கு நாய்க்குட்டிகள் மேலே மிகப்பிரியம். சீசர் என்ற பெயரிலேயே ஏழுவற்றல் நாய்க் குட்டிகளை அவன் வளர்த் திருப்பான். இப்போதோ அவனுக்குப் புதிய நண்பனுகச் சடையன் நாய்.

அவன் ஒரு காலத்தில் நண்பர்களுக்காகத் தவமிருந்தான். அவன் தனியனுயிருக்க விரும்பவில்லை. ஆனுல் நடேசனின் சிநேகிதம் முறிந்தபின் இனி வாய் பேசுகிற சிநேகிதமே வேண்டாமென்ற முடிவுக்கு வந்துவிட்டான். மனிதரையே நயவஞ்சகர்களாயும், கழுத்தறுப்பவர்களாயும் கண்ட அவன் தனக்கு வயிறு இருப்பதால் மனிதர்களோடு சேர்ந்து வாழவேண்டியிருக்கிறதே என மனக் கசப்படைந்தான்; கூடிய வரை தனித்து ஒதுங்கி வாழ்ந்தான்.

காமாட்சி விலாசிற்குச் சமையற்காரனாக வேலை செய்ய வந்ததின் பின் ஓரளவு சிங்கத்தைக் கண்டு புன்னகை புரிபவன் மாணிக்கம் ஏதோ தற்செயலாக ஒருநாள் அவனைப் பார்த்த மாணிக்கம் புன்னகை புரிந்தான். பழைய நண்பர்களைச் சிங்கம் மனதினுள் நினைத்துத்துருவினான். ஆறேழுபேர் நினைவில் அரைகுறையாக மிதந்தனர். ஆயினும் கறுத்து உருண்ட புன்னகை ததும்பும் மாணிக்கம் என்றும் அவனது கழிந்தொழிந்த வாழ்விலே வந்து போனதில்லை, மாணிக்கத்தின் நேச பூர்வமான புன்னகையைச் சிங்கம் மனந்திறந்து வரவேற்றானாயினும் மாணிக்கத்தோடு கதைக்கச் சந்தர்ப்பம் வரவில்லை.

சமையல் செய்து கொண்டு வெளியே வீதியைப் பார்த்திருக்கும் போது மாணிக்கம் அடிக்கடி கண்ணில் தட்டுப்படுவதுண்டு. அவனும் வேறு சிலரும் ஏதாவது துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டோ அல்லது பத்திகைகள் விற்பனை செய்தபடியோ நிற்பதுண்டு மாணிக்கத்தைப் பற்றி அறியும் ஆவல் தன்னையறியாமலே சிங்கத்திற்கு ஏற்பட்டது.

ஒருநாள் அவன் சிதம்பரத்திடம் மாணிக்கத்தைப்பற்றி விசாரித்தான். அதற்குச் சிதம்பரம் சொன்ன பதில் சிங்கத்திற்கு மிகவும் அதிர்ச்சியளித்தது.

''மாணிக்கமா? அவன் மிச்சம் கெட்டவன், இவங்களெல்லாம் கடவுளுக்கு மாறானவங்கள். கலகக்காரர். பணக்காறரை கொல்லவேணுமெண்டு சொல்லிறவங்கள்''

சிங்கம் ஆச்சரியத்தோடு கேட்டான்; ''இப்படிச் செய்கிறதாலை இவங்களுக்கு என்ன லாபம்?'' கரகரத்த அவனது குரலின் கேள்விக்குப் பதில் சொல்லுவதற்காகச் சிதம்பரம் சிறிது நேரம் யோசித்தான்.

''என்ன லாபமோ நட்டமோ எனக்குத் தெரியாது. ஆனால் கொம்யூனிஸ்காறங்கள், மாணிக்கம் போலை ஆக்கள் சாதி சமயம் பார்க்காதவங்கள் பணக்காரனுக்கு எதிரானவங்கள். என்ன இருந்தாலும் சாதி சமயமும், பணக்காரனும் இல்லாமல் நாங்க சீவிக்கேலுமே?''

''அப்ப மாணிக்கம் என்ன கொம்யூனிஸ் கட்சியோ?''

''ஓம் அவனோடை நீங்க ஒருநாளும் கதைக்காதேங்க. எங்கடை முதலாளிக்கும் அவனைத் துண்டாய்ப் பிடிக்காது''

அடுத்த நாளும் தற்செயலாக மாணிக்கத்தைச் சிங்கம் கண்டான் எனினும் அவசர வேலையில் நின்றதால் அவன்

சிரித்தானு என்பதைக் கூடப் பார்க்காமல் சமயலறைப் பக்கம் வந்து விட்டான். சமையல் வேலைகள் சிங்கத்திற்குக் காலை ஐந்து மணிக்கே தொடங்கிவிடும். இடையிலே ஏழு மணி முதல் ஒன்பது மணி வரைக்கும் சிற்றுண்டி வேலைகள். ஆறு மணிக்கு இரவுச் சமையல், சிங்கம் சொல்லாமலே சிங்கம் சமையல் செய்வதற்கு வேண்டிய எல்லா உதவிகளையும் மற்றச் சமையல்காரனான சிதம்பரம் உடனுக்குடன் செய்து கொடுப்பான். குறிப்பறிந்து உதவும் நோக்கம் சிதம்பரத்திற்குச் சிங்கத்தின் மேலுள்ள பயத்தாலேதான் ஏற்பட்டிருந்த போதும் எந்த நாளிலாயினும் சிங்கம், சிதம்பரத்தை அதட்டியதோ பயமுறுத்தியதோ அச்சுறுத்தியதோகூடக் கிடையாது.

அவர்கள் இருவரிடையேயும் உள்ள உறவு மௌனமானதாகவே இருந்தது. அலுவல் நேரங்களில் தவிர அவர்கள் இருவரும் பேசிக்கொண்ட சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவு, இருவரும் ஏதாவது யோசிப்பது போல ஒருவருக்கொருவர் பாவனை செய்து கொண்டிருப்பார்கள்.

சிங்கம் ஒருநாளும் சுருட்டோ, வெற்றிலையோ பாவித்ததில்லை. சிதம்பரத்திற்குச் சிங்கம் பெரும்புதிராக இருந்தான். மனித உணர்வுகளே செத்துப் போனவன் போலச் சிங்கத்தின் நடமாட்டங்கள் அமைந்திருந்தன. அவனிடம் ஏதாவது கேட்டால் பளீரென்று கன்னத்தில் அடிவிழுந்து விடுமோ என்ற அச்சம் சிதம்பரத்திற்கு மனதினுள் வியாபித்திருந்தது.

படுக்கப் போகும் போது சிதம்பரம் பெரிய சுருட்டொன்றைச் சுற்றிப் புகைத்து இன்ப சுகம் அனுபவிப்பதனைச் சிறு வயது முதலே பழக்கமாக்கிக் கொண்டிருந்த படியால் சிங்கம் வந்த புதிதில் சிங்கத்தின் மீதிருந்த பயத்தினுல் அந்தப்பழக்கத்தைத் தொடர்ந்து நடத்துவது சிரமமாயிருந்தது. ஓரிரு நாட்கள் கக்கூசிற்குள்ளிருந்து சுருட்டுப் புகைக்க முயன்று, வயிற்றைக் குமட்டும் நாற்றத்தினைச் சகிக்க முடியாது வெளியே வந்து கவலையோடு அங்கலாய்த்திருக்கின்றான் சிதம்பரம். குப்பை மேட்டின் அருகேயமைந்துள்ள அந்த வாளிக் கக்கூஸ் ஏழு ஜீவன்களின் பாவனைக்குரியது. வயிற்றைக் குமட்டுவிக்கும் நாற்றத்தாலும், அருவருப்பாலும் நிறைந்த அந்த மலசல கூடத்தினுள் தன் மனம் நிறைவிக்கும் சுகத்தினை ஆழ்ந்து அனுபவிக்க விரும்பவில்லை சிதம்பரம்.

வாழ்வோடு பழகிவிட்ட அந்த சுகானுபவத்தை இழக்க விரும்பாத சிதம்பரம் தான் சுருட்டுப் பிடிப்பது சிங்கத்திற்குப் பிடிக்குமோ, பிடிக்காதோ என்ற அச்சத்தில், சமையற் கட்டுக்கு வெளியே சுவரோடுள்ள ஒதுக்குப் புறத்தில் கிடந்த பக்கீசுப் பெட்டியை நிமிர்த்திவைத்து அதில் கம்பீரமாக அமர்ந்து புகைமண்டலத்தினை எழுப்பி மனம் லயித்த பேரின்பத்தில் ஆழ்ந்திருந்தான்.

இப்படிச் சில நாட்கள் கழிந்து போயின. சிங்கத்திற்கு மனத்திற்குள்ளேயே சிரிப்பு வரும் சிதம்பரத்தை நினைவு கூர்ந்தால். நாற்பத்தைந்து வயதைத் தாண்டிய சிதம்பரத்திற்கு தலை அரைவாசிக்கு மேல் நரைத்து, முகத்தில் சுருக்கங்கள் கோடுகளெனக் கீறிவிட்ட போதும் தான் ஒரு மைனர் என்ற உணர்வு அவனது சொல்லிலும் செயலிலும் தொனித்தன.

ஒரு பிரபல கதாநாயகனின் தமிழ்ப் படமொன்றைப் பார்த்த பின்பு தன் முகத்தில் சிதம்பரம் 'பொயின்ற்கட்' மீசை விட்டுக் கொண்டான். நெஞ்சு தோயச் சட்டையைத் திறந்து கொண்டு அந்தக் கதாநாயகன் போலவே தன்னையும் பாவனை செய்த வண்ணம் மனதிற்குள்ளே சினிமாப் பாட்டொன்றை முணுமுணுத்துக் கொண்டிருந்தான் சிதம்பரம். அத்தகையதோர் கோலத்தினை வரித்துக் கொண்ட இயல்பாகவே மெலிந்த சிதம்பரம், சிங்கத்தைக் கூனிக் குறுகியபடியே பார்த்தான். சிங்கம் எதையாவது கேட்டு விடுமோ என்ற அச்சம் மனதிலிருந்தமையினால் கூடிய வரையில் சிங்கம் தன்னுடைய மீசையைப் பார்க்காத சந்தர்ப்பங்களினை ஏற்படுத்தி, சிங்கத்திற்கு வேண்டிய உதவிகள் யாவையும் சிங்கம் கேட்கமுன்னரே சிதம்பரம் விழுந்தடித்துச் செய்து கொண்டிருந்தான். சிங்கத்திற்கோ சுறுசுறுப்பான கண்கள். சிதம்பரத்தின் மிகவலிந்த ஒத்தாசையினைக் கவனித்த சிங்கத்திற்கு அந்தத் துருதுருப்பின் மறைமுகமான அர்த்தத்தைக் கண்டபின்னர் ஒரே சிரிப்பாயிருந்தது; தனக்குள்ளே சிரித்துக்கொண்டு அவனைக் கவனியாதது போலப் பாவனை செய்தான் சிங்கம்.

மழை ஓய்ந்த தூவானம் அடங்காத மழை நாளொன்றின்போது, வெளியேயுள்ள பக்கீஸ் பெட்டியில் நிமிர்ந்து உட்கார்ந்திருந்தது மிகச் சிரமப்பட்டு வாங்கிய சிறிதளவு கஞ்சாவைப் பெரிய சுருட்டினுள்ளே வைத்து அதனைப்பற்ற வைத்து நன்கு புகையிழுத்துக் கொண்டிருந்து சுகானுபவத்தில் சிதம்பரம் லயித்திருந்த போது தான் சிதம்பரம்

வெளியே இருந்து புகைபிடிப்பதின் அர்த்தத்தை உணர்ந்த சிங்கம், நெஞ்சில் ஈரமூற வெளியே வந்து நின்று கோபத்தோடு அவனைப் பார்த்துக் கனைத்தான்:

"'உள்ளே போயிருந்து குடியன்'' கஞ்சா அளித்த போதை மயக்கத்தில் எங்கோ அந்நரத்தில் நினைவிழந்து பறந்து கொண்டிருந்த சிதம்பரம் அந்தக் கரகரத்த குரல் தன்னைப் பற்றி இழுத்த திடுக்காட்டத்தில் பக்கீஸ் பெட்டியிலிருந்து எழுந்தான். மெல்ல மெல்லச் சுயப்பிரக்ஞையுற்ற அவனை மீண்டும் சிங்கத்தின் குரல் அதட்டவே, அதட்டலின் அர்த்தத்தைப் புரிந்தபடி அவன் வளைந்து நெளிந்து உள்ளே போனான். கையிலிருந்த சுருட்டை அணைத்து கடுதாசியில் சுருட்டி நெருப்புப் பெட்டிக்குள் திணித்து அடுப்பு முகட்டில் வைத்துவிட்டுப் பாயை எடுத்துத் தட்டி விரித்தான். பெரிய இராச்சிய மொன்றையே பெற்ற மனக்களிப்பில் அவன் நீட்டி நிமிர்ந்து படுத்தபடியே மனதினுள்ளே சினிமாப் பாட்டொன்றைப் பாடிக்கொண்டிருந்தான்.

இன்னொர் நாள் சிங்கம் நேரத்தோடு உறங்கிவிட்டானென்ற நினைப்பில், சிதம்பரம் தான் மிகவும் கவனமாகப் பத்திரிகைகளில் வெட்டிச் சேர்த்து வைத்திருந்த சினிமா நடிகைகளின் கவர்ச்சிப் படங்களையும், சிற்றின்ப இச்சையைத் தூண்டும் படங்களையும் வெகு சந்தோஷமாகவும், சுவாரஸ்யமாகவும், குதுகுதுப் புணர்ச்சியோடும் பார்த்து அனுபவித்துக் கொண்டிருந்தான். சிறுவயதிலிருந்து அவன் அப்படித்தான் பழக்கமான வழக்கம்.

ஏதோ கனவினைக் கண்டு திடுக்கென்று விழித்தெழுந்த சிங்கம், மங்கிய குப்பி வெளிச்சத்தின் அருகே குப்புறப் படுத்து, முகத்தை நிரப்பிப் பரப்பிய படங்களையே பார்த்துக் கொண்டு கிடக்கும் சிதம்பரத்தைக் கண்டதும் இலேசாக எழுந்த சந்தேகத்தோடு அவனருகே மெல்ல எழுந்து சென்றான்.

சிதம்பரம், சிங்கம் இப்படித் திடீரென எழுந்து வருவான் என எதிர்பார்க்காமையினால் வாரிச்சுருட்டிக் கொண்டு எம்பி எழுந்தான். அவனுக்கு மனம் படக்கென்று அடித்துக் கொண்டிருக்கையில் எண்ணெய் படிந்த தலையணையில் கிடந்த படங்களைச் சிங்கம் கையிலே எடுத்துக் கொண்டான்.

ஒரு சினிமா நடிகையின் அரைநிர்வாண, முக்கால் நிர்வாணப் படங்களை, படமொன்று இரண்டு ரூபா வீதம் சிதம்பரம் காற்சட்டை போட்ட ஒருவனிடம் ரகசியமாக

வாங்கியிருந்தான். சென்ற ஆண்டு 'உத்தம புத்திரி' என்ற படத்தில் கதாநாயகியாக நடித்துச் சிறந்த நடிகையென்ற பரிசைப் பெற்ற அவளின் நிர்வாணப் படங்களை வாங்குவதற்காக ஒரு ஷேர்ட் வாங்க வைத்திருந்த பணத்தினையே வெகு ஆவலோடு சிதம்பரம் செலவழித்தான். தன் மனத்திற்கு இன்பக் கிளுகிளுப்பை மூட்டிய அந்தப் படங்களுக்கு அந்திய காலம் வந்ததோ என்ற அச்சமும், தனக்குச் சிங்கம் அடிக்குமோ என்ற பயமும் சிதம்பரத்தின் நடுக்கத்திலே கலந்திருந்தன.

அந்தப் படங்களை மனதில் நெளியும் தயக்க உணர்வுகளோடு நோக்கிய சிங்கம் மெலிந்து முகமெல்லாம் சுருங்கி நெற்றி வேர்வை பொங்கக் கள்ளன் போல முழிசிக் கொண்டிருக்கும் சிதம்பரத்தைக் கூசிப் பார்த்துக் கொண்டு தணிந்த குரலிலே கரகரக்கக் கேட்டான்:

''சிதம்பரம் நீ கலியாணம் முடிச்சனியா?''

சிதம்பரம் பரிதாபமாகச் சிங்கத்தைப் பார்த்து விட்டு ''இல்லை அண்ணை......'' என்று சொல்லிப் பெருமூச்சோடு வார்த்தைகளை முடித்தான். தனது பதினைந்தாவது வயது தொடங்கி நேற்றைவரை தான் கலியாணம் செய்து வாழ்க்கை நடத்த விரும்பிய பெண்கள் அவனது மனமேடையிலே தோற்றங் காட்டி மறைந்தார்கள். அவன் இளவயது முதல் இன்றுவரை அனாதை. வீடும் வாசலும் சொத்தும் சொந்தமுமற்ற தனியன்; வெறும் நீர்க்குமிழி ஆசைகள். கோணலாய் வாழ்ந்த வாழ்வுகூட அவனுக்கு இதுவரையில்லாமற் போனதற்கு அவன் கோழைத்தனமானவன் என்பதே ஒரேயொரு காரணம், ஒரே ஒருத்தியோடு சரஸமாட முயன்று அவளிடம் வாங்கிய அடியின் பின் அவனது வாழ்வு அலுத்து மானசீகக் கற்பனையிலே மட்டும் சுகங்காணத் தலைப்பட்டது.

மங்கிய குப்பி விளக்கின் சுடர் மெல்ல வீசிய காற்றின் எற்றுதலில் வளைந்து நெளிந்து ஆடிற்று. அதைப்பார்த்துக் கொண்டே, வலதுபுற மார்பிலிருந்த தழும்பைச் சொறிந்து கொண்டான் சிங்கம்: ''ஏன் முடிக்காமல் இருக்கிறாய்? முடிக்க ஆசையில்லையாடா?''

சிலகணங்கள் யோசித்துக் கொண்டிருந்து விட்டுச் சிதம்பரம் பதில் சொன்னான்: ''ஆசைதான் ஆனால் வசதியில்லையே...'' சிதம்பரத்தின் குரல் கூசிற்று. சிங்கம் குழந்தையொன்றின் அனுதாபத்தோடு சிதம்பரத்தைக் கேட்டான்;

''என்ன வசதி''?

''என்ன வசதியோ?'' சிதம்பரம் தன்னை மறந்து சிரித்தான்: சிங்கத்தின் கையிலிருந்த திமிறும், உடற்சதைகளை நெளித்துக் காமப்பார்வை பார்த்துக் கொண்டிருந்த அரை நிர்வாண சுந்தரியைக் கண்களிலுலே தடவியபடியே ஏறிட்டான்.

''அண்ணை ...: கலியாணம் முடிக்கிறதெண்டால் சோறு கறி காச்சிறது போலை சுகமான வேலையில்லை. கலியாணம் முடிச்சால் பெண் சாதியை வைச்சிருக்க வீடு வேணும், துணிமணி வாங்கிக் குடுக்க வேணும். எனக்குக் கிடைக்கிற முப்பது ரூபாயோடை கலியாணம் செய்து சீவிக்கேலுமே...? நீங்களே சொல்லுங்க? ...''

சிங்கம் அக்கேள்விக்குப் பதில் சொல்லாது மௌனமாகி, மங்கிய குப்பி விளக்கின் துடித்து நடுங்கும் வெளிச்சத்தின் பூச்சினிலே கரைந்து அழிந்து கொண்டிருக்கும் சித்திரமாகத் தெரிகின்ற அந்த அறையினைச் சுற்றும் முற்றும் பார்த்தான்.

வடபக்கத்தில் பெரிய அண்டாக்கள், பேணிகள், இடியப்பத்தட்டுகள் நாளைக்கு வடையின் உருக்கொள்ளவிருக்கும் இன்றைய மிச்சத் தோசைகள் நிறைந்த கடகப்பெட்டி, கிழக்குப் புறச் சுவரடியில் அழுகியதும் அழுகாததுமான உருளைக்கிழங்குகள், வெங்காயம், மிளகாய், புடங்காய், பூசணிக்காய், பூசணிக்காயினருகே குறண்டிக் கிடக்கும் சடையன் மேற்கிலே மா மூட்டையும் சிம்னி கரிமண்டிக் கிடக்கும் அரிக்கன் லாம்பும், பெரிய சாம்பல் பூத்த அடுப்புகள், அடுப்பு மேட்டில் சிதம்பரத்தின் குறைச் சுருட்டுகளும், வெற்று நெருப்புப் பெட்டிகளும் அவ்வறையிலே கட்டப்பட்டிருந்த பறணியிலேயே அவர்கள் இருவரினதும் ஒரே உடமையான பூட்டுப்போட்ட இரு பக்கீஸ் பெட்டிகள் வைக்கப்பட்டிருந்தன.

சிங்கம் சிறிது நேரம் பழைய நினைவுகளில் மூழ்கிப் போனுன். அவனின் வாழ்க்கை எப்படியெல்லாம் கழிந்து போய்விட்டது? வயிற்றுக்கான தேவையை அரைகுறையாகக்கூடப் பூர்த்தி செய்ய முடியாத போராட்டம் நிறைந்த ஜீவனுயிருந்தான் அவன்! அவன் உணர்ச்சிகளோடு ஒத்துப்போன சில சிநேகிதர்களது வாழ்வும் அப்படித்ததான். புன்னகையால் அவனை அணைத்துக் கொண்டவர்களிருவர் கண்ணம்மாவும், நடேசனும்! பசிய நினைவான அவர்கள் இப்போது எங்கெங்கே இருப்பார்களோ?

சிங்கத்திற்குத் திடீரென்று மாணிக்கத்தின் புன்னகை கண்களில் வந்தது. அவனுடைய சிநேகபூர்வமான பார்வை போல சிங்கம் முன்பு யாரிடமும் கண்டதில்லை. அவ்வளவு குளிர்ந்த பார்வை.

சிங்கம் மீண்டும் நிகழ்காலத்திற்கு வந்தான்.

"காசில்லாதவன் கலியாணம் முடிக்கேலாதோ?" சிங்கமே கேட்டான் ஏக்கக் கரகரப்புடன்.

"காசிருக்கிறவன்தான் வாழுகிறான். அவனாலை என்னவும் செய்ய முடியும், எங்களாலை என்னதான் செய்ய முடியும்?" அனுபவஸ்தன் போல சிதம்பரம் தொடர்ந்தான்: "எங்கடை முதலாளியைப் பாருங்கண்ணை. கையிலை காசிருக்கு. எம். பி. முதல் பொலிஸ்காரன்வரை எல்லோரும் அவரோடை சிநேகிதம். நினைச்சசுகம் அனுபவிக்கலாம்."

சிதம்பரம் சொன்னதைத் தனது வாழ்வின் அனுபவங்களோடு தேய்த்துப்பார்த்து அவன் கூறிய வார்த்தைகள் உண்மையென்ற முடிவுக்கு வந்து தன்னை மறந்து சிங்கம் தன்னையே மீறியவனாகக் கேட்டான்:

"சிதம்பரம் அப்ப நாங்க கலியாணம் முடிக்கேலாதோ?"

சிதம்பரம், சிங்கத்தை அதிசயத்தோடு பார்த்தான். பயங்கரமான சிங்கம் நின்ற இடத்திலே, வஞ்சிக்கப்பட்ட மனிதன் ஒருவன் நிற்பதை அவன் உணர்ந்தான். அவன் மனதிலே பெரும் ஆறுதல். தன்னைப்போல குறையுள்ள இன்னொரு மனிதனைக் கண்டதும் ஏற்படுகின்ற மனிதப் பலவீனமான ஆறுதல் அது!

## இரண்டாம் அத்தியாயம்

இரவு முழுவதும் சிங்கமும், சிதம்பரமும் அமைதியற்று உழன்றதின் பின்னரே உறங்கிப் போனார்கள்.

சிதம்பரத்தின் கனவிலே, அவன் வழக்கமாகக் காணும் எல்லாமே மறந்துபோய், அதிசய மனிதனான சிதம்பரத்தைப் போன்ற சிங்கமே தோன்றி மறைந்து கொண்டிருந்தான். எரிந்து சரிந்த தேக்கமரம் அன்று கனவிலே தோன்றாது. நைந்து போன குரலிலே திருமணமாகாதா நமக்கு என்ற ஏக்கத்தோரணையில் தன்னைப் பார்த்துக் கேட்டு ஏங்கிய சிங்கத்தையே அன்று கனவிலே தோன்றக் கண்டு அடிமனதில் ஆறுதல் கொண்டு நித்திரையாகிவிட்டான். சிதம்பரம், நித்திரையிலும் சிரித்துக் கொண்ட முகத்தோடு உறங்கிப்போய் விட்டான் அவன்;

இருளைத் துளாவிக் கண்சோர உறங்கி விட்ட சிங்கத்தின் கனவிலே எத்தனையோ காட்சிகள் தோன்றித் தொடர்பற்று மறைந்தன. அடிக்கடி காணும் அர்த்தமற்ற கனவுகளோடு, மனதினுள்ளே சேமித்து ஏகாந்தத் தனிமையில் நெஞ்சம் இன்புறும் கனவுகளையும் முன்பு அவன் கண்டு வருவான். இன்றேவெனில் ஒரு தொடர்பற்ற போதும், ஏதோ ஒரு தொடர்பு அவன் கனவிலே தெரிந்தது....... ஒரு பெரிய தோணியில் தண்டு வலிக்கும் ஏராளமானோரில் சிங்கமும் ஒருவனாய் நின்றான். இந்தத்தோணி பிறகு பெரிய கப்பலாகவும் தோற்றியது. அந்தக்கப்பலின் நடுவே ஒல்லியான ஒருவன் முடிதரித்து அரசனைப் போல நின்று சவுக்கால் அவர்களை அடித்துக் கொண்டிருந்தான். அவன் தனது மற்றக் கையிலே ஒரு நீண்ட கணக்குப் புத்தகத்தை வைத்திருந்தான். அந்த அரசனைச் சுற்றி ஏராளம் கொழுத்த அழகிகள். அவர்களுக்கு நடுவே அந்த நிர்வாண நடிகையும் நின்றாள். சிங்கம் சவுக்கோடு நிற்கும் அந்த அரசனை உற்று நோக்கினான். உற்று, உற்றுப்பார்த்தான். அரசனின் முகம் கலங்கிய தண்ணீரினுள் பிம்பமாக மங்கித் தெரிந்தது. அந்தக் குரலின் கனைப்பு ஆரோக்கியநாதனின் சத்தமோவெனச் சிங்கம் ஐயுற்றான். சிங்கம் பற்களை நரும்பிக் கொண்டான். அவன் முன்னே சுதந்திர மனிதனாக மாணிக்கம் தோன்றிச் சிரித்தாற்போல இருந்தது. அதே புன்னகை. கையில் பத்திரிகை. அரிவாள் சம்மட்டி. சிங்கம் ஆச்சரியத்தை விழுங்கிக் கொண்டு மாணிக்கத்தைப் பார்த்துச் சிரிக்க முன் மாணிக்கம் உருக்கரைந்து போனான். சிங்கம் தன் பக்கத்தில் தன்னோடு பிணைக்கப் பட்டிருந்த சிதம்பரத்தைப் பார்த்தபோது அவன் அழுதான். முகத்தைத் தனது இடது புறத் தோளினுள் புதைத்து விசும்பி நெகிழ்வாக அழுது கொண்டிருந்தான். அவனுக்குச் சற்று முன்னேயும் ஒரு நிர்வாணம் நின்றது. அந்த அம்மணத்தினை இடையிடையே வெட்கத்தோடு சிதம்பரம் நோக்கிக் கொண்டிருந்ததனைச் சிங்கம் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அந்தக் கப்பல் மறைந்தது. ஒரு கடை வீதி தோன்றிற்று. கடை வீதியின் மூலையில், தலைமுழுகி நிலத்தில் விழுது படர்த்திய ஆலமரம். இருப்பதற்கென்றே துருத்திக் கொண்டு நிற்கும் ஆலமர வேரில், சிங்கம் தலையை முழங்காற் சில்லுகளில் பொருத்திக் குந்தியபடியிருக்கும் போது ஏராளம் பெண்கள் நிர்வாணமாகப் போய்க் கொண்டிருக்கிறார்கள். வீதி கூட்டும் அந்தத் தளுதளுப்பானவள். கடையில் சாப்பாடு எடுத்துச் சாப்பிடும் நெசவுரீச்சர்.

குறுக்குக் கட்டுடன் மீன் விற்பவள். பள்ளிக்கூடத்திற்குப் போகும் மாணவிகள் ஆகிய யாவருமே அம்மணம். நன்ருகக் கூர்ந்து பார்த்தால் முகந்தான் அவர்களுக்குரியது. உடல், நிர்வாணமான அவர்களின் உடலோ அந்தச் சினிமா நடிகையின் காமந்துளும்பும் அதே உடல் தான்! பிறகு ஒரே கிணறுகள். அழுது விசும்பும் சிதம்பரம். ஓட்டை படிந்த கூரைகள். சிங்கத்தின் இடுங்கிய கண்களுள் கோபம் ஜ்வாலை பரப்புகின்றது ஓடமுயல்கிருன், ஆனுல் கால்களோ அசைய மறுக்கின்றன. ஓட முடியவில்லையே என்று சினம். ஓட்டடைபடர்ந்த சமையலறைக்குள் அந்த மெலிந்த அரசன் காசு எண்ணிக்கொண்டிருப்பதைக் கண்டு அவனை உதை உதையென்று உதைக்கின்ருன் சிங்கம்! ஒரே மழை! சீறிச்சீறி எழும் காற்று ......

சிங்கத்தின் காற்பெருவிரலை ஏதோ நக்கிக் கடித்தாற் போலிருந்தது. சிங்கம் சினந்து பொங்கிய ஆத்திரத்தோடு தன்னிச்சையாக எட்டி உதைத்து நித்திரை கலைந்து ஆவென்று வாயைப் பிளந்து இருகைகளையும் பின்ஞல் விறைப்பாக உயர்த்திச் சோம்பலை முறித்துக் கொண்டு கண்களைத் திறந்தான். ஐந்து மணிபோல, வழமையாகவே அவன் கால்களை நக்கி நித்திரையினின்றெழுப்பும் சடையன், எதிர்பாராது கிடைத்த கனமான உதையினுல் சுருண்டு, பந்தென எகிறி வாசலடியில் 'வாள்வாள்' என ஈனஸ்வரமாய்க் கத்திக் கொண்டு போய் தலைக்குப்புறவாய் விழுந்து உடல் ஆறி ஆட்டுக் கல்லின் அருகாக அனுங்கியபடியே முன்னங் கால்களினுள் முகத்தைப் புதைத்துக் கொண்டு கிடந்தது. முற்ருகவே நித்திரையிலிருந்து விழிப்புற்ற சிங்கம் மனவருத்தத்தோடு எழுந்து, தன் மனதினையே கடிந்து கொண்டு "இங்கை வாடா, சடையா என்னோடை கோவமா?" என்று ஆதுரமாகக் கேட்டபடி ஆட்டுக்கல்லின் அருகே கோணியபடி கிடந்த சடையனைத் தூக்கி ஆதரவோடு கைகளினுற் தடவினுன். சடையன் நிலையுணர்ந்து செல்லமாய் அனுங்கிக் கொண்டு தலையினைக்குறுவி அவனின் அணைத்த கைகளினுள்ளே முகத்தை உரோஞ்சியது. சிங்கம் சடையனின் சிலிர்த்த தலையினை ஆதரவோடு வருடித்தடவிக் கொண்டே எதிரே நோக்கினுன்.

கடையின் பின்புறத்திலே ஐந்தடி வரை தள்ளியுள்ள சமையலறையின் முன்புறத் திண்ணையோரமாக நின்று பார்த்தால் காமாட்சி விலாசின் நடுப்பகுதி தெளிவாகவே தெரியும்.

கடையின் பின்பக்கமாய் இலை எறிவதற்கான பெரிய பீப்பாத் தகரமும், அதன் நேர்மேலே வாளி ஒன்றினுள்ளே சாப்பிட்ட பின்னர் கைகழுவத் தண்ணீரும், பேணியும் வைக்கப்பட்டிருந்தன. கடையின் நடுப்பகுதியில் நாலுபுறமும் நீண்ட நான்கு மேசைகளும், எட்டு வாங்குகளும் வைக்கப்பட்டிருந்ன. அவைகடை திறந்திருக்கின்றநேரமெல்லாம் ஆட்களாலும் இலையான்களாலும் நிறைந்திருக்கும். வடபக்கமாயிருந்த நீண்டமேசையொன்றின் அருகேயிருந்த காலுடைந்த ஸ்டூலின் மீதிருந்துதான் சிங்கம் சாப்பிடுவது வழக்கம். அதற்கடுத்த பெரிய மேசையில் சாப்பாடுகள், பொரித்த மீன் தகரம், குழம்புப் பாத்திரத்தின் அருகே நொண்டிக் கதிரையில் வாழையிலைகள். கடையின் முன்புற இடப்பக்கத்தில் தேனீர் பொயிலர்; பெரிய கிடாரத்தில் தண்ணீர். அரைப்பழமாயுள்ள வாழைக்குலைகள், அவற்றின் அருகேயுள்ள பெரியதொரு பெட்டியின் மேலுள்ள கண்ணாடி அலுமாரியுள் 'தயவு செய்து கைபோடாதீர்கள்' என்ற அறிவிப்போடு வடை, சூசியம், வாய்ப்பன் வகையறுக்கள், முன்புறத்தின் வலது பகுதியில் சொக்கிளேற், இனிப்பு சுருட்டுப் போத்தல்கள், பத்திரிகைகள், சினிமாப் பாட்டுப் புத்தகங்கள் நிறைந்த ஆரோக்கியநாதனின் மேசையும், தலையணைபோட்ட கதிரையும், அவர் அமர்ந்திருக்கும் கதிரையின் பின்னுலுள்ள பிறுக்கியில் சோடாப் போத்தல்களும், வேறு சில்லறைச் சாமான்களும் அடுக்கப் பட்டிருந்தன. அதன் மேலே, லிங்கன், காந்தி, கென்னடி அண்ணாத்துரை, எம். ஜி. ஆர், சடாமுடிச் சிவபெருமானின் நிஷ்டை கோலப்படம் ஆகியன மாட்டப்பட்டிருந்தன. அந்த வரிசைப் படங்களுக்கு மிக உயரே பெரிய பிறேமிடப் பட்ட விநாயகர் லட்சுமிதேவியின் படங்கள் பூச்சரங்களால் அழகுறுத்தப்பட்டு பார்ப்பவருக்கு மனத்திருப்தியைக் கொடுக்கும் விதத்திலமைந்திருந்தன, என்றும் அந்தத் தெய்வங்களின் படத்திற்கு தீபமும் ஊதுவத்திக் குச்சியும் எரிக்கப்படுவதுண்டு. இதுதான் 'காமாட்சி விலாஸ்'

சிங்கம் முற்றிலும் தீராத சோம்பலை முறிப்பதற்காகச் சடையனைக் கீழே இறக்கி விட்டு, உடலைச் சரித்து நெளிந்து கைகளைப் பின்னே மடக்கி ஆவென்று வாயைப் பிளந்து கொட்டாவி விட்டுக் கொண்டு, இடது கைப்பின்புறத்தால் கடவாயைத் துடைத்தான். அவ்வேளை இலை நிறைந்த குப்பைத் தகரத்தை ஒரு சிவப்பு நிறமான பையன் கவிழ்த்துக் கொண்டிருப்பதைக் கண்ணுற்றுன் சிங்கம்.

மெலிந்த அச்சிறுவனின் முதுகைப் பார்த்த சிங்கத்திற்கு, அவன் அந்தக் கடைக்குப் புதிதாக வந்தவன் என்று மனம் சொல்லிற்று. குப்பைத் தகரத்தை நிமிர்த்திவிட்டு, கைகளைத்துடைத்த அந்தப் பையன் நீலக் காற்சட்டை அணிந்திருந்தான். முன்புறம் மட்டும் ஒரு மயிர்க்கற்றை. மிகுதித்தலைமயிர் ஒட்டக் கத்தரிக்கப்பட்டு அவனது உருண்ட முகத்தை மேலும் உருட்டிக் காட்டிற்று. பெரிய முழிக் கண்கள். களைமிதக்கும் முகத்திலே எதையோ இழந்த ஏக்கமும் கலந்து தெரிந்தது. அவனுக்கு பன்னிரண்டு வயது மதிக்கலாம்.

தான் நிரந்தரமாகவே படுத்துவரும் ஒதுக்கிடத்தினை சுத்திகரிக்கும் அவனைப் பார்த்து எவ்விக் கொண்டு குரைத்தது சடையன். பயந்த சுபாவமுள்ள சிறுவன் போலும் அவன், குனிந்து கொண்டு கடையினுள் நுழைவதற்கு அவன் விரைந்த போதினில் சிங்கம் சற்றுத்தணிவான குரலிலே 'இங்கை வாடா பொடியா' என்று அழைத்தான்.

புருவமடர்ந்து கூசிப்பார்க்கும் சிங்கத்தின் கண்களையே தயங்குகின்ற தன்விழிகளினால் முதலிலே பார்த்துவிட்டு, எஜமானின் அதட்டலுக்குட்பட்டு அவனின் கால்களின் கீழே வந்து குருவி முடங்குகின்ற நாய்க்குட்டியினைப் போல அந்தச் சிறுவன் சிங்கத்தின் எதிரே வந்தான். ஒருபக்கத்துக்கு இழுத்து நடப்பது போலிருந்தது அவனது கெந்தல் நடை. ஏன். என்னைக் கூப்பிடுகிறாய்? என்ற பாவனை உருண்ட முகத்தின் தயக்கத்தில் மௌனமாகத் தொனித்தது.

இடது கையிலுள்ள பச்சை குத்தப்பட்ட சிங்கத்தினைத் தடவியபடியே அப்பையனைச் சிங்கம் கேட்டான்; ''என்ன பேர்? நேற்றுத்தான் இஞ்சை வந்தனியோ?'' சிறுவன் முதலிலே தலையை ஆட்டினான். ''அருணசலம் ...... முந்த நாள் ராத்திரி போலைதான் இஞ்சை வந்தனான்.....''

இருகைகளையும் முன்புறமாகக் கோர்த்து நின்ற அருணசலத்தின் வலதுகை மோதிர விரலில் வெள்ளி மோதிரம் மினுங்கிற்று ''எந்த ஊர்? ஐயா அம்மா இருக்கினையோ? பள்ளிக்குடத்துக்குப் போனனியோ?''

சிறிது தாமதித்துத் தளும்பிய குரலினிற் பதில் வந்தது. ''கொழும்புத்துறையிலைதான் இருக்கிறனான். அம்மா இருக்கிறா. ஐயா மூண்டாம் வருஷந்தான் செத்துப் போனவர். அம்மாவும் நானும் தங்கச்சியுந்தான் வீட்டிலை இருக்கிறம்......''

சிறுவனின் கண்கள் கலங்கின, வீட்டு நினைவுகள் வந்ததன போலும். பிறகு அவனே நினைத்துக் கொண்டவன் போலப்

பதில் சொன்னான்; "ஐஞ்சாம் வகுப்பு மட்டும் படிச்சனான் நான் நல்லாகப் படிப்பன், ஆனால் வீட்டுக்கஷ்டத்திலே படிப்பை நிப்பாட்டிக் கொண்டு ஏதாவேன் வேலை செய்ய வேண்டியதாகப் போச்சுது"

பெருமூச்சுப் பிதுங்கிய சிறுவனின் குரலில் வயதினை மீறிய பொறுப்புணர்வும் வேதனையும் குழைந்திருந்தன, பார்வைக்கு கதைக்கவே மாட்டான் போலத் தோன்றிய அவன் வாயைத் திறந்ததும் வயதை மீறியவனாய்க் கதைத்தது மனதினுள்ளே அவன் மீது சிங்கத்திற்கு பரிவினை ஏற்ப் படுத்தியது. பால்மணம் மாறாத அந்த முகத்தையே சில கணங்கள் உறுத்துப் பார்த்தவன் எதிரே தெரிந்த வளையில் பின்னியிருந்த சிலந்தி வலையில் பார்வையினை வைத்தான். அவனது இளமைக் காலம் நினைவிலே, வெள்ளம் உருட்டி வருகின்ற குப்பை கஞ்சல்களினைப் போல அள்ளுண்டு வந்தது.

"என்னவோ வந்திட்டாய், நீ சின்னப் பொடியன், கவனமாக வேலையைச் செய்து ஒழுங்காயிருக்க வேணும் ... தெரிஞ்சுதா?"

சிறுவன் பயபக்தியோடு தலையசைத்தான், அருணாசலத்தோடு சிங்கம் கதைத்துக் கொண்டிருக்கும் போது, அப் போதுதான் இறைச்சிக் கடைக்குப் போய்விட்டுத் திரும்பிய சிதம்பரம் கலைத்தபடியே அருணாசலத்தைப் பார்த்துக் சொன்னான்; 'என்ன ... எங்கடை ஒனாய் வெள்ளாடு ஒண்டைப் பிடிச்சுக் கொண்டு வந்திட்டுது போலை ... ...' சிதம்பரம் சொன்னது கிங்கத்தின் மனத்தினிற்கு சரியாகவே தெரிந்தது. அந்தக் கடையிலே அவனைப் போலவே இரு சிறுவர்கள் வேலை செய்வதைச் சிங்கம் அறிவான்.

ஓய்வொழிச்சலோடு அவர்கள் நின்றதில்லை. முதலாளியிடமும், அங்கு வரும் சண்டியர்களிடமும் குட்டுப்பட்டே அவர்களுக்குத் தலை விறைத்துப் பெருத்திருக்கும். ஐந்து வருஷங்களிற்கு முன் அங்கிருந்து களவாகத் தப்பியோட முயன்ற பூபாலன் என்ற பதின்மூன்று வயதுப் பையனை எப்படியோ தேடிக் கண்டு பிடித்து வந்த ஆரோக்கியநாதன் பூபாலனைக் கடையின் பின்புறத்திலுள்ள சோகை பிடித்துக் காய்ந்த வேப்ப மரத்தில் பகல் முழுவதும் கட்டி வைத்து அடித்தார். அன்று பகல் முழுவதும் அவனை யாருமே அவிழ்த்து விடவில்லை. பூபாலனை எக்காரணங் கொண்டும் அவிழ்த்து விடக்கூடாதென்று அருந்தவநாதன் கட்டளை இட்டிருந்தார்.

கால்களின் கீழே ஊர்ந்த எறும்புகள் முழங்கால் வரை ஏறிக் கடிகடியென்று கடித்தபோது தன் சூம்பிய கால்களினை எற்றிக்கொண்டு பூபாலன் ஊளையிட்டான். அன்று அவனை வேப்பமரத்தில் கட்டி வைத்து ஆரோக்கியநாதன் கன்னங் கன்னமாக அடித்ததின் பிறகு அவனுக்கு வலது காது புலனிழந்து செவிடாகி விட்டது அனாதையான அவனிற் காக எல்லோரும் மறைமுகமாகப் பரிந்து கொண்டார்கள். இரவின் நடுவேளையில், சுவர்க் கோழிகளின் இரைச்சலுள் தங்கள் குரலைப் பதித்துக் கொண்டு அவனுக்கு ஒத்தடங் கொடுத்து அவனை அங்குள்ள சகசிப்பந்திகள் தேற்றினார்கள். மறுநாள் விடியற்புறமாகப் பூபாலனின் முகத்தைப் பார்த் எல்லோருக்குமே மனம் திக்கித்தது அசட்டுச் சிரிப்போடு வளவளத்துக் கொண்டு திரியும் அவனது களையான முகம், கல்லின் அசையாத் தன்மையாய் இறுகிப்போயிருந்தது, ஊமைக்கும் பாஷையுண்டு. அவனுக்கோ பாஷையின் பாதைகளே இறுகி மூடினாற் போல நடமாடினான் அதே மாற்றத்தின் பரிணமத்தினோடு இப்போதும் பூபாலன் அங் கேயேதான் வேலை செய்கின்றான். வலது கையின் சின்னி விரலின் நகங்களைக் கடித்தலே இப்போது கோபத்தின் பாஷையாக்கியதொன்றே அவனது மாற்றம். யாரரவது கடையிலே குழப்படி செய்தாலோ, கீழ்ப்படிய மறுத்தாலோ ஆரோக்கியநாதன் பூபாலனையே உதாரணங் காட்டுவது வழக்கம்.

அவ்வேளைகளிலேதான் பூபாலனின் முகத்திலே கருமை படர்ந்து கண்களிலே ஆவேசமான வெறி பிறக்கும். கைக ளின் முஷ்டிகளைப் பிசைந்து தொடைகளோடு குத்திக் கொள்வான். பற்களை நரும்பிவிட்டுக் காறித்துப்புவான்; எதிரேயுள்ள தன் எதிரியின் முகந்தனிலே எரிச்சலோடு துப்புகிறாற்போல.

ஒருநாள் பூபாலனின் பழைய வரலாற்றினை எக்காளக் குரலிலே சிதம்பரத்திற்கும் சிங்கத்திற்கும் பூபாலன் அங் கேயே நிற்கின்ற போதிலே ஆரோக்கியநாதன் சொல்லிக் கொண்டிருக்கையில் பூபாலனின் முகம் வெஞ்சினத்தினால் உப்பி, நெருப்புத் தணலின் சிவப்பாகிக் கண்கள் எரிந்தத னைச் சிங்கம் நன்றாகவே கவனித்தான் தன் வீரப்பிரதாபத் தினைச் சொல்லி விட்டு ஆரோக்கியநாதன் அங்கிருந்து போனதின் பின்னர் பூபாலன் மெதுவாக வஞ்சம்தீர்க்கின்ற குரலிலே முணுமுணுத்தான்; ''புலி பதுங்கியிருக்குது ஒரு நாள் பாய்ஞ்சு கடிக்கேக்குள்ளே விஷயம் விளங்கும் உன் னைநான் பழிக்குப்பழி வாங்காமல் விடுவேனோ ருஸ்கல்?''

அவனுடைய இலேசான முணுமுணுப்பு பாம்புச் செவியஞன சிங்கத்திற்குத் தெளிவாகவே கேட்டது. அவன் தனக்கு நன்கு தெரிந்த 'வினை விதைத்தவன் வினையறுப்பான்' என்ற பழமொழியினைத் தன்னுள்ளே முணுமுணுத்துக் கொண்டான். எனினும் நோஞ்சானான பூபாலன் மேல் சிங்கத்திற்கு இனந்தெரியாததோர் மதிப்பிருந்தது:

பூபாலனின் தோற்றம் சிங்கத்திற்கு வளைந்த புடலங்காயையே நினைவூட்டும். நோஞ்சான் உடலுக்கேற்ற நீள முகம். குத்திட்டு நிற்கும் தலைமயிர். கண்கள் மட்டும் உருண்டை. பளபளப்போடிருக்கும். அவனுக்குக் 'கோழி முட்டைக் கண்ணன்' என்ற செல்லப் பெயரும் அங்கே உலவிற்று. அந்தப் பட்டப் பெயரை அங்கே வேலை செய்கின்ற பூபாலனின் வயதினஞன சுகுமாரனே அவனுக்குச் சூட்டியிருந்தான். பூபாலனின் மேல்சுகுமாரன் மட்டுமேநிறைந்த வாஞ்சை கொண்டிருந்தாஞகையினுல் அவன் கூறும் எதையுமே கண்களைப் பரக்க விரித்து ஏற்றுக் கொண்டு விடுவான் பூபாலன்.

மத்தியானச் சாப்பாட்டினை மூன்றரை மணிக்குச் சாப்பிட்டுவிட்டு, சமையலறைப் பக்கத் திண்ணையடியில் வந்திருந்து, சிங்கத்திடம் நெருப்புக் கொள்ளி வாங்கி பீடி பற்ற வைத்துக் கொண்டு தன்பார்வையினை கிழடுதட்டிக்காய்ந்து, பாதிப்பக்கத்துக் குழைகளின் இலைகள் சமையலறை நெருப்பு வெம்மையினுல் கருகியிருக்கும் வேப்பமரத்தையே கூர்ந்து பார்த்து பூபாலன் யோசித்திருப்பதனை அடிக்கடி சிங்கம் கண்டிருக்கிறுன்.

கணப்பொழுதிலே மனதிலே தோன்றிய பழைய நினைவுகளிலிருந்து விடுபட்டுக் கொண்டே, சிங்கம் தனனெதிரே இன்னும் தயங்கியபடி நிற்கும் அருணுசலத்தைப் பார்த்து ''அருணுயலம் நீ உள்ளை போ உனக்கு காலமையிலை நாலு இடியப்பம் மட்டுந்தான் கந்தையா தருவான். உனக்கு அது போதாட்டில் களவு எடுத்து தின்னுதை..... உனக்கு நாலு போதாதுதான்......பசிச்சால் என்னட்டை வந்து சொல்லு ......'' என்றுன். அருணுசலம் தலையை அசைத்தான்.

அருணுசலம் நடையைச் சரித்து பின்புறப் படிகளுக்கு நடந்து போனுன். சிங்கம் அவன் நடந்து போவதனையே இரக்கத்துடன் பார்த்தபடி நின்றுன். அவனது எண்ணங்கள் அருணுசலத்தின் காலடிகளில் சிக்குண்டு தன்னுடைய பழைய வாழ்வின் நினைவுகளிலே போய்த் தரித்து நின்றன. ''பாவம், பச்சைப் பொடியன்........''

பீடியைக் கடைசித் 'தம்' இழுத்து முடித்து விட்டுத் தூர வீசியெறிந்த சிதம்பரம் இறைச்சி வெட்டுகிற கத்தியைத் தேடிக் கொண்டிருந்தான். சடையன் அவனது காலடியிலே வாலை ஆட்டிக் கொண்டு நின்றது.

## மூன்றும் அத்தியாயம்

அதற்குள் தன் வாழ்வின் பூர்வீகத்தில் சில பகுதிகளை சிங்கம் மறந்து விட்டான். அவற்றினை ஆழ்ந்து துருவி நெஞ்சிலிருந்து மீட்டெடுத்து நினைக்கவும் அவன் விரும்பியதில்லை. இளவயதில், நினைவு தெரியாப் பருவத்திலே தாயைப் பறிகொடுத்ததின் பின், தந்தை எங்கிருந்தோ கூட்டி வந்த பெண்ணை தன்னுடைய சிறிய தாயாக ஏற்றுக் கொண்டு, உலக வழமைக்கு மாருக அவளது கருணை பொலிந்த பராமரிப்பிலே வாழ்ந்து, அவளின் பராமரிப்பையும் தன் தகப்பன் இறந்ததின் பின்பு இழந்து, பிறகு தங்குமிடமின்றி மனம் உழன்று ஒரு கடையிலே போய் நின்றதிலிருந்து - அந்தப் பதினைந்து வயதிலிருந்துதான், அவன் வாழ்வில் கழிந்த வருடங்களெல்லாம் அவனுக்குத் தெளிவாக நினைவில் வேரருது நிற்கின்றன. அவையெல்லாம் முள் நிலத்திலே நடந்து களைத்த கதைதான்.

சிறுவயதிலிருந்து அவன் தான் வாழுகின்ற சமுதாயத்தின் தாறுமாருன ஒழுங்கீனங்களையும் ஆபாசங்களையுங் கண்டு, அவற்றின் நடுவே நடந்து உலாவியிருக்கிற போதிலும், அவன் அந்தத் தாறுமாறுகளுக்குள் சிக்காது, ஆத்மா நச்சுத் தனமடையாது வாழ முயன்றிருக்கிருன். நல்ல மனிதனுய் வாழவேண்டும் என்ற ஆசையை அவனது நெஞ்சிலே, அவனது சிறியதாய் தன் வாஞ்சையினுலும், அன்பு கனிந்த சொற்களினுலும் விதைத்திருந்தாளாயினும் அதை நடைமுறையாக உலகில் மாற்றச் சிங்கம் இளவயதில் களையாது முயன்று, ''இவன் ஒரு சாமிப் போக்கானவன். பாவத்தார்'' என்ற பெயரினைப் பெற்றிருக்கின்ருன். அவன் உருவில், சிரிப்பின் கரகரப்பில், பேச்சின் தொனியில், நடையின் துச்சமான ஓசையில் அவன் ஒரு மாதிரியான ஆள் என்று பார்ப்பவர் மனம் கற்பிதம் செய்து கொண்டாலும் அவனது மனம் மற்றவரின் மனமுடிவுகளுக்கு எதிரிடையாகவே இருந்தது என்பதை உணர்ந்த ஒரே மனிதன் நடேசன் என்ற அவனது நண்பன்தான். மற்றவர்களைத் தன்னேடு நெருங்கவிடாத ஆகிருதியும், மௌனமென்ற சுவரும் அவனைப் பிறரிடமிருந்து பிரித்து வைத்து

விட்டன. அந்த மென்ன குணம் பால்ய காலத்தின் மன வளர்ச்சிக் குறைவாலும், அன்பே கிடையாத தோல்வியடைந்த எதிர்பார்ப்பின் விளைவாலும் அவனுக்குக் கிட்டியிருக்கலாம்.

பதினேழாவது வயதிலே, பலசரக்குக் கடையில் எடுபிடியாளாகச் சிங்கம் நின்ற நாட்களிலேதான் அடுத்த கடையிலே வேலைக்கு நின்ற நடேசனின் தொடர்பு அவனுக்குக் கிடைத்தது. அதற்கு முன்னர் நான்போய் வேலைக்கு நின்ற கடைகளிலெல்லாம் அடியையும் உதையையும் அவற்றைவிடக் கொடுமையான திட்டுக்களையும் வாங்கி அவை கொடுத்த வேதனையினுல் நெஞ்சம் வெதும்பி அதுவே தலைவிதியென வரித்துக் கொண்ட அவனது மனம் புதுத் தெம்பும், புத்தூக்கமும் பெற்றது. நடேசனின் தொடர்பிற்குப் பிறகுதான் நடேசனின் நட்புத்தான் சிறுமைகண்டு சிறுங்குணத்தினை, ஆண்மையின் கம்பீரத்தை ஊட்டிச் சிங்கத்தின் வாழ்வினை நச்சுப்படாது காத்தது. என்ருலும் நடேசனின் நட்பையும் அவன் இழந்துபோனுன். அது சிங்கத்திற்கு மிகவும் துரதிருஷ்டம்! அந்தப் பலசரக்குக் கடையின் பின் புறத்தில் பெரியதோர் கிணறிருந்தது.

ஆழமான, வயதான அக்கிணறு அந்தக் கடைக்கு மட்டுமல்லாது, கடையின் பின்புறமிருந்த மூன்று குடும்பங்களுக்கும் தண்ணீர் கொடுத்து வந்தது. அந்தக் கிணற்றடியிலேதான் வீரசிங்கத்திற்கும் நடேசனுக்கும் பகைமை தோன்றக் காரணமாயிருந்த தங்கம்மா தண்ணீர் அள்ள வருவது வழக்கம். வாலிபத்தின் வசந்த வயது தங்கம்மாவுக்கு. அவளது தகப்பன் மூட்டை தூக்கிப் பிழைப்பவன் தங்கம்மாவின் மிரண்ட கண்களில் முதலில் விழுந்த இளைஞன் நடேசன்தான் பார்வைக்கு வசீகரமான அவனையே அடிக்கடி பார்த்து நகைப்பதையும், இளமைக்கேயுரிய சிருங்கார சேஷ்டைகள் செய்வதனையும் அங்கேயிருந்த வீரசிங்கம் அறியமாட்டான். தங்கம்மாவின் அழகு எவரையும் கிறங்கடிக்கக் கூடியதல்ல ஆனுல் அவளின் படபடவென்ற வார்த்தைகள், துடிப்பு, அரைகுறையாய் மூடியிருக்கும் மோகனமான கண்கள், அழகிய மூக்கினில் மினுங்குகின்ற ஒற்றைக்கல்லு மூக்குத்தி ஆகியனதான் அவளின் யௌவனத்திற்கு அணிகலன்களாயமைந்திருந்தன அவள் மூன்று வொயில் சாறிகளைத்தான் மாற்றி மாற்றிக் கட்டுகின்ருள். முந்தானையை வரிந்து இடுப்பிலே கட்டியிருக்கும் அவள். வீரசிங்கமும் நடேசனும் நல்ல சிநேகிதர்

மன் என்பதனை அறிந்திருந்தாள். அதனாலேயே சிங்கத்தைக் கண்டதும் தங்கம்மா மரியாதையாக கிணற்றடியில் வாளியை வைத்து விட்டு ஒதுக்கமாய்ச் செல்வதனையும், புன்னகை புரிவதையும் பழக்கமாகக் கொண்டு விட்டாள்.

ஒதுக்கமும் புன்னகையும் ஒன்றுமறியாத வீரசிங்கத்தின் மனதிலே நெருப்பை ஆசையென்னும் மோகமயக்கத்தினை மூட்டி விட்டன. தனிமையிலே இரவின் உறக்க வேளையில் கண்ணுறங்காத இருளினிடையே கண்மலர்ந்த அவளையே நினைத்து அந்த அறைக்குள் இரு பெருமூச்சுகள் தகித்துத் தடுமாறின. ஒருவரும் ஒருவர்க்கொருவர் திரையிட்டிருந்ததே, பகை தோன்ற மூலகாரணமாயிற்று.

வீரசிங்கத்தின் வாழ்வு அந்தப் பலசரக்குக் கடையோடையே பிணைக்கப்பட்டிருந்தது. காலை ஆறு மணி முதல் இரவு பதினொரு மணி வரைக்கும் அவன் நெருப்பு வெம்மையேறித் தகிக்கும் தண்ணீர் பொயிலரைப் போலவே இயங்கிக் கொண்டிருப்பான் பன்னிரண்டு மணிக்குக் கடையிலேயே பழைய சாக்குக் கட்டிலொன்றிலே உறக்கம். அதுவும் படுத்தவுடன் திடுக்கிட்டெழுகின்றாற் போன்ற அவல நித்திரை. அவனது முதலாளி தன்னுடைய கடையிலே சிப்பந்திகள் ஓய்வாகியிருப்பதனைக் காணவே பிடிக்காதவர் சவுக்கின் சுளீரென்ற அடிகளினைக் கூடத்தோற்கடிக்கும் அவருடைய சுடுமொழிகளை வந்த புதிதிலே தாங்கமுடியாது மனங்குமுறி அமுங்கிய வீரசிங்கத்தை நடேசன்தான் உற்சாகப்படுத்தி மனம் நிமிர வைத்தான். துணிவையும், துக்கத்தினை விரட்டும் தன்னம்பிக்கையையும் நடேசனிடமிருந்துதான் வீரசிங்கம் கற்றுக் கொண்டான். வாலிபத்தின் வைகறை நாட்களெல்லாம் வீரசிங்கத்திற்கு துயரின் நிழல் படிந்த நிகழ்ச்சிகளாலேயே கறைபடிந்திருந்தன. அவனது இன்பதுன்பம், சுகதுக்கம் யாவுமே பிறர் அறியாத சிறு காற்றின் அசைவோடு அவன் வாழ்வில் புகுந்து தடந்தெரியாது அழிந்து போயின. அவன் அழுவதற்கு வெறுத்தும் சிரிப்பதற்கு பயந்ததுமான மனோநிலை உருவான காலப் பகுதி அவ்வயதிலேதான் என்பதனை அவன் நன்றாகவே நினைவில் கொண்டிக்கின்றான்.

"ஆருக்கும் பயப்பிடாதை. பயந்து நடக்கிறவன் பல தடவை சாகிறான். அடிக்க வாறவனுக்கு தலைகுனியாதை நீ திருப்பி அடிக்கக் கூடியவன் என்று மற்றவன் உன்னைப் பற்றித் தெரிஞ்சிருந்தால் உனக்கு அடிக்கிறதுக்கு அவன்

கனவிலும் யோசிக்க மாட்டான். ஏழைகளிட்டை உள்ள ஒரே செல்வம் துணிவு ஒண்டுதான். அதுதான் ஏழைகளுக் குள்ள பலம் கொண்ட ஆயுதமும்......''

நடேசன் சொன்ன சொற்கள் வீரசிங்கனின் நெஞ்சிலே வெண்சீலையில் வரையப்பட்ட ஓவியம் போலப் பதிந்து, அர்த்தம் பெற்ற உணர்ச்சியாய் நிலைகொண்டதின்பின்னரே முதலாளியை அவர் சுடு மொழிகளோடு தன்னை மிரட்டி வருகின்ற போதிலே வீரசிங்கம் நிமிர்ந்து ஆக்ரோஷப் பார்வையுடன் பார்த்தான் சீறி நிற்கும் வேங்கையின் முகத்தில். முஷ்டியால் குத்துவதற்கு யாருக்குத்தான் துணிவு வரும்? அன்றைய தினத்திலிருந்து சிங்கத்தோடு சிங்கத்தோடு அதிகம் கதைப்பதினை முதலாளி குறைத்துக் கொண்டு விட்டார்.

கிணற்றடியில், மாலைநேரக் கருக்களின்போது, தாய் சும்மா நீர் அள்ளிக் கொண்டிருந்தவேளையில் நீண்டநாட்க நெஞ்சினுள்ளேயே பதுக்கி வைத்திருந்த ஆசையினைக் கூசுங்கண்களிலே நிறைந்த ஒளியோடும் அசாத்தியமான துணிவோடும் போய் அவளிற்கு முன் நின்ற மெல்லவாகக் கூறினான் வீரசிங்கம். கிணற்றடி ஓரமாக நின்ற வெள்ளெருக்கம் செடியோரமாக அதற்குமுன் பலதடவை நின்று அதனைச் சொல்ல நினைத்துவிட்டு சொல்லமுடியாத மன நிலையில் திரும்பிப் பல தடவைகள் சென்றிருக்கின்றான். அந்தப் பயங்கரமும், பரபரப்பின் சிறகடிப்பும் நிறைந்த நிமிஷங்களின் விளைவோ வேறுவிதமாயிருந்தது. சிங்கம் தன் ஆசையினைச் சொல்லி முடித்த மறுவினாடியே ஒரு சேற்றுப் புழுவினைப் பார்ப்பது போல அவ்வளவு கவலமாக சிங்கத்தைத் தங்கம்மா ஏறிட்டாள். பிறகு தண்ணீர் அள்ள வந்த குடத்தையும் தண்ணீர் நிரப்பாது தூக்கிக்கொண்டு வீட்டினை நோக்கி நடந்து சென்றாள்.

சிங்கம் இடிந்து போய் பரிதாபகரமாக நின்றான் பிறகு சிங்கத்திற்கு வேலையே ஓடவில்லை. எப்போதடா படுக்கையில் போய் விழுவது என்று மனம் அவஸ்த்தைப் பட்டுக் கொண்டிருந்தது. அதோடு தங்கம்மாவின் தாய் அல்லது தகப்பன் உரத்துத் திட்டிக் திட்டிக் கொண்டோ, வன்மம் தெறிக்கும் பார்வையுடனோ கடைக்கு வருவது போலவும் இடையிடையே பிரமை ஏற்பட்டிருந்தது. அடிக்கடி தன்னைத்தானே தேற்றிக் கொண்டிருந்தான். தங்கம்மா இனி என்னென்ன செய்யப் போகின்றாளோ?...... சிங்கத்தின் உடலும் உணர்வுகளும் ஒரு சேர நடுங்கின. தங்கம்மா

வின் தகப்பன் ஒரே குத்தில் சிங்கத்தின் எல்லாப்பற்களையும் நிலத்தில் விழச் செய்து விட்டுத்தான் அடுத்த வேலையினைப் பற்றிக் கவனிப்பான்; கதைப்பான்; சிங்கத்திற்குத் தனியே போயிருந்து தலைதலையாக அடித்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது ...'என்னிலே என்ன பிழை?... இந்தத் தங்கம்மா ஏன் என்னைப் பார்த்து அடிக்கடி சிரித்துக் கொண்டிருந்தாள்? மயக்குவதுபோல என்னைப் பார்த்தாள்? மரியாதையாக நடந்து கொண்டாள்?......சும்மா ஒன்றுமே யோசியாமல் ஒரு பாட்டிலே கிடந்த என்னை இவள் தானே இப்படிக் கேட்கவும், மனந்துடிக்கவும் வைத்தாள்...... இவள் ஏன் என்னை இப்படியொரு பேயனுக்கி சீரழிக்க நினைத்தாள்......இப்போது நான் என்ன செய்ய?' இரவு பதினொருமணி, மிகத் தாமதித்தே அன்று வீரசிங்கத்திற்கு வந்தது. மனத்தில் சுமைகள் மூட்டை மூட்டையாக அமுக்கி அமுத்திக் கொண்டிருந்தன. இரவுச் சாப்பாட்டினை உண்ணுமல், பாயை உதறி விரித்துப் போட்டுக் கொண்டு சுவரையே வெறிச்சிட்டுப் பார்த்தபடி கிடந்தான் வீரசிங்கம். மூலையில் எரிந்து கொண்டிருந்த போத்தல் விளக்கின் வெளிச்சம் பதுங்கிப்பதுங்கி அறைச்சுவர்களுக்கு ஒளி பூசிக் கொண்டிருந்தது.

இன்னும் நடேசன் அறைக்கு வரவில்லை. வழமையாகவே நடேசனும் வேலை முடிந்து வந்ததின் பிறகுதான் வீரசிங்கம் சாப்பிடுவான். அநேகமாக இருவரும் ஒன்றுகவே அறைக்குள் நுழைவார்கள். அதுவும் நடேசன் உரத்துக் கதைத்தபடியே தான் உள்ளே காலடி எடுத்து வைப்பான். இன்றேவெனில் இன்னமும் நடேசனைக் காணவில்லை. வேறொரு நாளாக இருந்தால் நடேசனைத் தேடிக் கொண்டு வீரசிங்கம் புறப்பட்டு விடுவான். இன்றுள்ள மனக்குழப்பத்தில் அவனுக்கு எதைப்பற்றியுமே யோசிக்கமுடியாத மன அலுப்பு ஏற்பட்டு விட்டது.

வெளியே வீதியில் இரண்டொரு லொறிகள் உறுமிக் கொண்டு போயின. மேலே புகைக்கூட்டில் மணிப்புருக்கள் இறக்கைகளை அடித்துச் சடசடத்தன. ஒருவனின் வெறிப் புலம்பல் நொண்டித்தனமான சொற்களாய் அமைதியான இரவிடையே விட்டுவிட்டுக் கேட்டுக் கொண்டிருந்தது. தன் கண்களின் முன்பு நில்லாத ஒருவனோடு அவன் சண்டையிட்டுப் பேசிக் கொண்டிருக்கின்றான்.

கடைசியில் பன்னிரண்டு மணியளவில் நடேசன் அறைக்குள் வந்தான். உரத்த சத்தத்தோடு எதையாவது சொல்

லிக்கொண்டோ அல்லது பாட்டினை விசிலடித்தபடியோ வருகின்ற நடேசன் இன்று ஒரு சத்தமுமேயில்லாது உள்ளே நுழைந்து பாயை உதறி விரித்தவாறு நின்றான். பிறகு போர்வையை உதறி விசுக்கினான்; அந்த விசிறலில் பிறந்த முரட்டுக் காற்றிலே, விளக்கின் வெளிச்சம் உயர்ந்து துள்ளிவிட்டு, இரண்டொரு செந்தணல் துணுக்குகளை உதிர்த்துக் கொண்டு அணைந்து போயிற்று.

எல்லாவற்றையுமே மௌனமாகப் பார்த்துக் கொண்டு கிடந்த வீரசிங்கம் மன அலுப்பினிடையே விளைந்த சில கணநேர மௌனத்திற்குப் பின்னர் தனது பாய்க்கருகில் கிடந்த நெருப்புப் பெட்டியை எடுத்து விளக்கைப் பழைய படியே கொழுத்தி விட்டு, ''ஏன் நடேசு சாப்பிடவில்லையோ?'' என்று கேட்டான். நடேசனிடமிருந்து பதில் வந்தது வெறுப்புமிழ: ''எனக்குத் தேவையில்லை ... ...'' பதிலைச் சொல்லிவிட்டு அவன் மறுபுறமாகப் புரண்டுபடுத்தான், கண்கள் எதிரேயுள்ள காரைச் சுவரின் அழுக்குப் படிவிலே இலேசாகப் பார்வை பதித்தன. சுவரின் புறத்தே சிள்வண்டொன்று புரண்டு கிடந்தது, வழமையான இருப்பிற்கு வேரக்கால்களினால் பதகளித்து இரைச்சலிட்ட வண்ணமிருந்தது, அதனைச் சினத்தோடு சுண்டி எறிந்தான் நடேசன். மீண்டும் வற்புறுத்தும் தொனியிலே வீரசிங்கம் நடேசனை அழைத்தான்.

''எனக்குப் பசிக்கிதில்லை என்டிறன் பிறகென்ன திரும்பத்திரும்பக் கேட்கிறாய்? உனக்கு வேணுமெண்டால் நீ போய்ச் சாப்பிட்டிட்டுப்படு — நான் தவ்வல் குழந்தையில்லை. என்ரை வயித்துக்குப் பசிச்சால் நான் சாப்பிடுவன்தானே — ஏதோ நீ தான் என்ரை வயித்தையும் வைச்சிருக்கிற மாதிரிக் கதைக்கிறாய்... சும்மா போய்ப் படன்'' நடேசனின் குரலில் தொனித்த வேண்டா வெறுப்பு சிங்கத்தின் மனத்தினை மிகவும் வேதனைப்படுத்தியது. ஒருபோதும் நடேசன் இதுபோலத் தன்னோடு வெறுப்போடு பேசியதில்லை. இன்று என்ன இவனுக்கு நேர்ந்துவிட்டது என்ற கவலையோடு, ''நடேசு ஒருநாளுமில்லாமல் ஏன் இண்டைக்கு என்னோடை இப்படி நடக்கிறாய்?'' என்று கரகரக்கும் குரலிலே சிங்கம் அவனிடம் கேட்டான்.

சில கணங்களின் மறைவிற்குப் பிறகு நடேசன் பட்டென்று சொன்னான்; ''எனக்கு தம்பிக்கைத் துரோகம் செய்த உன்னை எப்படி நான் நம்பி நடக்கிறது... ?''

நடேசன் முடிக்கமுன் சிங்கத்தின் வார்த்தைகள் தவிப்போடு குளறிக் கெஞ்சின: ''நடேசு என்ன......— நீ என்ன சொல்லுகிறாய்?'' நடேசன் அவனது பரபரப்பையே கவனத்திற் கொள்ளாதவனாக ஏளனமாகக் கூறினான்:

''சிங்கம் எனக்கு நீ கணக்கு விடாதை.... அல்லாட்டில் என்னோடை இருந்து கொண்டே எனக்கு நீ துரோகம் செய்ய நினைப்பியா.....நான் கலியாணம் முடிக்க நினைச்சிருக்கிற பொன்னம்மாவிட்டை இண்டைக்கு ஏதவோ பேர்ய்க் கதைச்சியாமே.....''

சிங்கத்தின் இருதயம் படக்கென்றது, யாரோ அவனைத் தூக்கித் தலை கீழாக அடித்தது போல உடல் அதிர்ந்தது. ''சிங்கா, இப்படிவேறை யாராவது செய்திருந்தால் நிச்சயமாக காலை அடிச்சு முறிச்சிட்டுத்தான் அடுத்த அலுவல் பார்த்திருப்பன்......'' சிங்கம் எதுவுமே பேசவில்லை. விம்மி அழவேண்டும் போலிருந்தது. வேதனை, ஏமாற்றம் ஆகியன அவனது நெஞ்சினைப் பிய்த்தெடுத்தன. விடிவெள்ளி வானின் விழிம்பில் சுடர் விட்டபோது, நித்திரைக்கலக்கத்துடன் தன் சிறிய உடுப்பு மூட்டையை எடுத்துக்கொண்டு சிங்கம் அங்கிருந்து புறப்பட்டு விட்டான்.

## நான்காம் அத்தியாயம்

அலைந்து பறந்து கொண்டிருக்கும் நீண்ட பரட்டைத் தலைமயிரை இப்போது கொஞ்சம் கட்டையாக வெட்டிக் கொண்டு, சலூனை விட்டு வெளியே இறங்கிய போது எதிரே நின்ற ஆலமரத்திற்கு அருகேயுள்ள வாசிகசாலையடியில் கூட்டம் நடந்து கொண்டிருப்பதனைக் கண்ணுற்றான் சிங்கம். ஒலி பெருக்கியில்லாத கூட்டம். மேடையின் பின்னணியில் பெரிய சிவப்பு நிற பானர் ஒன்று கட்டப்பட்டிருந்தது. பின்னேரம் ஐந்து மணியாகையினால், சிறிது அந்தக்கூட்டத்தினைப் போய்ப் புதினம் பார்த்தாலென்ன என்ற விருப்பமொன்று நெஞ்சினுள்ளே எகிறிற்று. நெஞ்சின் வலது புற மார்பிலே ஆறிப் போய்க் கிடந்த பெரிய தழும்பினைத் தடவிக் கொண்டே அவ்விடத்திற்குச் சென்றான் சிங்கம். கூட்டத்தின் முன்புறமுள்ள சிறிய மேடையிலே மாணிக்கத்தையும் வேறு சிலரையும் கண்டான் சிங்கம். அநேகமாக அவையெல்லாம் தெரிந்த முகங்களாயிருந்தன. கடைத்தெருவில் திரிகையில் கண்ட முகங்கள்; கடைகளில் வேலை செய்கின்ற சிங்கத்தைப் போன்ற சிப்பந்திகள். அவர்களையெல்லாம் ஒன்றாகக் கண்டபோது ஒரு புறத்திலே புதினமாகவும், மறுபக்கம் சிரிப்பாயுமிருந்தது சிங்கத்திற்கு. எனினும் கூட்டத்தை நின்று கவனித்தான். கூட்டத்தில் தொழிலாளர்கள் படுங் கஷ்டங்கள், அவர்களுக்கான அடிப்படைத் தேவைகள் ஆகியனவைபற்றி மிகவும் ஆக்ரோஷமாகப்பலர்

பேசினார்கள். சம்பளப் பிரச்சினை, கடைகளில் வழங்கப் பெறும் மிகக் குறைபாடுகள் நிரம்பிய உரிமைகள், எட்டு மணித்தியாலத்திற்கு மேலாகத் தொழிலாளரைக் கசக்கிப் பிழிதல் ஆகியனவே பிரதானமான விஷயங்களாக அங்கு பேசப்பட்டன. மாணிக்கத்தைப் பற்றி சிதம்பரம் சொன்னவை சிங்கத்தின் காதோடு கேட்டன. அவை எப்படியிருந்தாலும் அந்தக்கூட்டத்திலே பேசிக் கொண்ட விஷயங்கள் நியாய பூர்வமானவை என்பதனை சிங்கத்தின் மனம் ஒத்துக் கொண்டது. அங்கே பேசுகின்ற விஷயங்கள் காமாட்சி விலாசில் வேலை செய்பவர்களுக்கும் நன்கு பொருந்துபவை என எண்ணிக் கொண்டு, கூட்டத்திலுள்ளவர்களை நோட்டம் விட்டபோது அவர்களிடையே பூபாலனையும், சுகுமாரனையும் கண்டான் சிங்கம், அவனுக்கு மனம் திடீரென்று திகைப்பெய்தியது. அந்தத் திகைப்பிலிருந்து விடுபடமுன், அவனது தோளில் தோழமையோடு ஒருகை தொட்டதையுணர்ந்து சிங்கம் பின்னே திரும்பிய போது புன்னகையோடு நின்றான் மாணிக்கம். கறுத்து உருண்ட தோற்றமுடைய மாணிக்கத்தின் நேச பூர்வமான புன்னகையோடு, கம்பீரமான குரலும் வந்தது.

''சிங்கம் அண்ணை, ஏன் பின்னாலே நிக்கிறீங்கள்? வசதியாக முன்னாலே போயிருக்கலாம்— வாருங்க வாருங்க—.'' அவனுடைய இனிய வரவேற்பு சிங்கத்தின் மனதை நெகிழ்த்தியது. இதுவரை காலமும் அவனை இப்படி யாருமே இன்முகத்தோடு வரவேற்றதில்லை. அவன் ஒன்றுமே மறுப்புக் கூறாமல் மாணிக்கத்தின் பின்னால் நடந்துபோய்க் கூட்டத்தின் முன்புறத்திலே உட்கார்ந்து கொண்டான். கூட்டத்திலே அப்போது சிறு கலகலப்பு மெல்லரவாக எழுந்து அதே கதியில் அழிந்து போயிற்று. பூபாலன் மிகவும் அதிசயத்தோடு சிங்கத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

கூட்டத்திலே இறுதியாக மாணிக்கம் பேசினான். அந்தச் சிறிய பட்டணத்திலேயுள்ள கடைச்சிப்பந்திகளின் நிலைமையினை வெகுவிரிவாக அவன் எடுத்துப் பேசினான். காலங்காலமாக உழைக்கும் சிப்பந்தி கடைசி நாட்களில் எவ்வித பணஉதவியுமில்லாமல் வெறுஞ்சக்கையாக வெளியே விரட்டப் படுவதையும், அவனது எதிர்காலப் பாதுகாப்பின்மையையும் பற்றி மிகவும் ஆணித்தரமாக, கோபம் கொப்பளிக்கும் குரலிலே பேசிய மாணிக்கம், ''இந்தக் கொடுமைகளை ஒழித்து, உழைப்புக்கேற்ற ஊதியத்தையும் நம்பிக்கையான எதிர்கால வசதிகளையும் பெற

வேண்டுமாயின் தொழிலாளர்கள் யாவரும் ஒரே அணியில் சேரவேண்டும். சேருவார்கள்......'' என்று கூறி முடித்தான் மாணிக்கம். அவன் பேசி முடிந்த பின்னர் கூட்டமும் முடிவுற்றது. கூட்டம் முடிவுற்றதும் பூபாலனும் சுகுமாரனும் சிங்கத்திற்கு அருகாக வந்தனர். சுருண்ட தலைமயிரும், சிவப்பு நிறமுமான சுகுமாரன் மெல்லிய குரலிலே, ''நாங்கள் இஞ்சை வந்தது தெரிஞ்சால் இண்டைக்கு முதலாளிக்குப் புண்ணிலே புளிப்பத்தின மாதிரி இருக்கும்'' என்றான். சிங்கம் புன்னகைத்தான். சரிகேட்கட்டும் பிறகு பார்ப்பம் என்று சொன்னது அந்தப் புன்னகை.

ஒருமணிக்கு அங்கு பஸ்ஸிலேயிருந்து இறங்கிய அவள் தன்னுடைய மகன் அருணாசலத்தைத் தேடிக் கண்டு பிடிப்பதில் அவ்வளவு சிரமப்படவில்லை. அங்கு வேலை செய்கின்ற சிங்கமே அவளிற்குக் கடைக்கு வழிகாட்டினான். அவளை முதலிலே பார்த்தபோது சிங்கம் முதலிலே திடுக்கிட்டு விட்டான். முப்பது வயதுக்குள்ளான அப்பெண் கண்ணம்மாவைப் போலவே இருந்தாள். மெல்லிய மூக்கு, சிவப்பான உதடுகள், ஒல்லியான தோற்றம். பணிவான குரல். கையை வீசிக் கொண்டு தன்னோடு நடந்து வந்த அவளைக் கூட்டிப் போய் முதலாளியிடம் விட்டபோது, பசித்த பார்வையோடு அவளை அவரின் கண்கள் அளைந்ததையும் கவனித்து விட்டான் சிங்கம். முதலிலே மரியாதையான பாவத்தோடு அவளை எதிர்கொண்ட ஆரோக்கியநாதன், அவள் அருணாசலத்தின் தாய் என்பதை அறிந்த மறுகணமே தன் எல்லாப் போக்குகளையும் மாற்றிக் கொண்டு அழுத்திய குரலில், ''என்ன, ஏன் வந்தனி?'' என்று வெடுக்கெனக் கேட்டார். அவள் அவரின் திடீர் மாற்றத்தால் திகைப்புற்று விட்டாள். பிறகு தன்னைச் சமாளித்துக் கொண்டே ''மகனைப் பார்க்கவெண்டு வந்தனான் ஐயா'' என்றாள். ஆரோக்கியநாதன் மிகவும் ஆத்திரவசப்பட்டவர் போல கதிரையைப் பின்னே தள்ளி விட்டு எழுந்தார். பற்களை நருநருத்தார்.

''வேலைக்கெண்டு விட்டிட்டு இப்படி வந்து போனால் சரிப்பட்டு வராது. மடிக்குள்ளை பிள்ளையை வைச்சு வளர்க்கிறதெண்டால் இண்டைக்கே உன்ரைமகனைக் கூட்டிக்கொண்டு போய்விடு... ...'' ஆவலோடு வந்தவளின் முகத்தில் பரபரப்பும் கவலையும் விம்மின, தளுதளுத்தது குரல்.

''இல்லை முதலாளி ஐயா அவன் சின்னப்பிள்ளை அதுதான் ஆறுதல்படுத்திப் போகவெண்டு வந்தனான்......'' ஆரோக்கியநாதன் வெடிச்சிரிப்புச் சிரித்தார். ''அப்ப கூட்டிக்

கொண்டு போய்ப் பாலைக்குடு ..'' சொன்னவர் அவளைப் பார்த்தார். கூர்மையாக அவர் தன்னைப் பார்ப்பதனை அவதானித்த அவள் அந்தப் பார்வையால் மனம் நொந்து முந்தானையைச் சரி செய்து கொண்டாள். மிக அருகே நின்று இதனை அவதானித்த சிங்கத்திற்கு எரிச்சலும், அருவருப்பும் பொங்கியது. தன்னையறியாமல் இறுக்கிச் செருமினன். சிங்கம் அங்கே நின்றதனை அப்போதுதான் கண்ட ஆரோக்கியநாதன் நிலைமைச் சமாளிக்கின்ற குரலிலே,'' இதில நிண்டு கொள்... இப்ப அவனைக் கூப்பிடுறன்.....டே சுகுமாரன், அருணயலத்தைக் கூப்பிடு...'' என்றார்.

சிங்கம் யோசனையோடு பின்பக்கமாக நடந்து தன் இருப்பிடத்திற்குப் போனன்.

எரியும் நெருப்பினையே பார்த்துக்கொண்டு நின்ற சிங்கத்தின் நினைவுகளை வேப்பமரத்தடியிலிருந்து வந்த குரல்கள் கலைக்கவே, சமையலறையை விட்டு அவன் வெளியே வந்தான்.

வேப்பமரத்தடியில் நின்று கந்தையாவும், சுகுமாரனும் பூபாலனும், வாக்குவாதப் பட்டுக் கொண்டிருந்தார்கள். சிங்கத்தைக் கண்ட அவர்கள் மூவரும் அவன் நின்ற இடத்திற்கு வந்தார்கள். ''என்ன பூபாலு ஏதோ வாக்குவாதம் போலை இருக்குது என்ன விஷயம்?'' பூபாலன் உணர்ச்சியற்ற விதமாகப் பதில் சொன்னன்: ''இல்லை அண்ணை, எங்கடை பெரியவர் எங்களைத் திட்டினவராம்..... அதைத்தான் கந்தையா வந்து சொன்னது புத்தியாக நடவுங்கோ எண்டும் அச்சறுக்கை பண்ணுது ...'' பூபாலனின் குரலில் ஏளனம் தொனித்தது, தொடர்ந்தான் .....''கண்டகண்ட இடங்களுக்கெல்லாம் போறதெண்டால் வேறை கடையளுக்குப் போகட்டுமாம் ...கடைக்கு வெளியிலை போறதெண்டால் தன்னைக் கேட்காமல் போகப்படாதாம்......'' ''அடியடா சக்கை'' என்றான் சுகுமாரன்: ''இனி முதலாளியைக் கேட்டுத்தான் அழவேணுமெண்டும் சொல்லுவாராக்கும்.'' சிங்கத்திற்கு சிரிப்பு பொங்கிற்று, மனதினுள்ளே சிரித்தான். ''என்ன கந்தையா நீ பேசாமல் நிக்கிறாய்? என்ன விஷயமெண்டு சொல்லனடா ..'' கந்தையா தலையைச் சொறிந்து கொண்டு சிங்கத்தைத் தயக்கத்தோடு பார்த்தவாறு ''அண்ணை, முதலாளி இப்ப கொஞ்சம் முந்தியாத்தான் சொன்னவர் இவன் மாணிக்கத்தின்ரை கூட்டத்திற்கு ஒருதரும் போகப்படாதாம், வீணக அந்தக் கொழுவல் கா

ரனோடை சேர்ந்து பழிப்பட வேணும் எண்டு உங்களுக்குச் சொல்லச் சொன்னவர். தான் சொல்லுறது உங்களுக்கு விருப்பமில்லாட்டில் இந்த இடத்தை விட்டுப் போகலாம் எண்டும் சொல்லச் சொன்னவர் ...''

''ஓ விஷயம் அப்பிடியோ?'' சிங்கம் ஆத்திரத்தின் தொடக்கத்தில் நின்றான்; ''இது நல்ல சேட்டையாகத் தான். இருக்குது—நாங்கள் வேலை முடிஞ்சு எங்கைபோனால் தான் இவருக்கென்ன? வேலையிலை பிழையிருந்தால் கேட்கச் சொல்லு...மற்ற ஞாயங்கள் வேணும்—'' சிங்கம் மார்புக் காயத்தினைத் தடவிக் கொண்டே பின்புறமாகப்பார்த்தான்:

''கந்தையா நீ போய்ச் சொல்லு ... நான் சொன்ன எல்லாத்தையும் போய்ச் சொல்லு—ஆனால் நீமட்டும் பந்தம் பிடிக்கிற வேலையைச் செய்யாதை கடைசியிலை எல்லாரிட்டையும் நல்லாக வாங்கிமடிவாய் ..''சொல்லிக் கொண்டு போன சிங்கம் திடீரென எதையோ நினைத்துக் கொண்டவனாய்த் தொடர்ந்தான்: ''அது சரி கந்தையா, கொஞ்சம் முந்தியாய் இங்கை வந்த இவன் அருணயலத் தின்ரை தாய் எங்கை? பெரிய ஞாயமெல்லாம் உன்ரை முதலாளி கதைக்கிறார்... ஆனால் கொஞ்சம் முந்தி அந்தப் பொம்பிளையோடை எவ்வளவு வழிசல் கதைகதைச்சதெண்டு உனக்குத் தெரியுமோ?''

கந்தையா புன்னகை செய்தான்.

''அந்த மனுசிக்கும், அருணயலத்துக்கும் இப்ப முதலாளி வேலை குடுத்திருக்கிறார் என்று உங்களுக்குத் தெரியாதாக்கும்......'' வியப்பு மீறக் கேட்டான் சுகுமாரன்! ''என் னடா சொன்னனி கந்தையா? எங்கை வேலை குடுத்திருக் கிறார்?'' ''ஓமோம் .. அவயளைப் பார்க்கத் தனக்கு வலு இரக்கமாய் இருக்குதெண்டு சொல்லி, தன்ரை ஐம்பதேக்கர் தென்னந் தோட்டத்துக்குள்ளை அவை இரண்டு பேருக்கும் வேலை குடுத்திருக்கிறார் ......'' அப்போது உருளைக் கிழங்கு மூட்டையோடு அங்கு வந்த சிதம்பரம், அவர்கள் மூவரையும் ஆரோக்கியநாதன் கூப்பிடுவதாகச் சொன்னான்.

இரவு படுக்கையில் கிடந்தவாறு சிங்கம் தொண்டையைக் கனைத்துக் கொண்டான்: 'சிதம்பரம் நித்திரையாய்ப் போனியோ?'

''இல்லையண்ணை முழிப்புத்தான்......''

பிறகு சில நிமிஷங்கள் மௌனம். நேரம் பிந்தி வந்த பஸ்ஸொன்றின் கடகடப்பு வீதியிலேஓசையினை விதைத்தது. பஸ் நின்றிருக்க வேண்டும். ஆளரவமும் குரல்களும் வளர்ந்தன; ''என்னத்துக் கண்ணை கேட்டீங்கள்... ...?''

''இவன் அருணாசலம் எங்கை போயிட்டான்?'' பறட்டைத்தலைமயிரை கையினால் அழுத்திக்கொண்டே கேட்டான் சிங்கம்: 'ஆளைக்காணயில்லை— அவனையும், அவன்ரை தாயையும் நான்தான் கூட்டிக் கொண்டு போய்தென்னந்தோட்டத்திலை விட்டுட்டு வந்தனான். இனி அதுகள் அங்கை தான் இருக்குமாம் பாவம், இந்தச் சின்ன வயதிலை அவளுக்குப் புருஷன் செத்துப் போயிற்றான்...'' சொற்களோடு பரிவுணர்வும் கலந்திருந்தது. சிதம்பரம் சொல்லியவாறு எழுந்து உட்கார்ந்தான்; அங்குமிங்கும் பார்த்தான். குரல் அனுங்கினாற்போல தாழ்ந்து கேட்டது: ''அண்ணை, எனக்கு முதலாளியின்ரை போக்குப் பெரிய ஐமிச்சமாயிருக்குது...... அவன்ரை பார்வையும் நல்லாயில்லை.....''

அந்த நேரத்திலே சிங்கம் எதுவும் பேசவில்லை. சிதம்பரம் அவன் நித்திரையாகி விட்டான் என்று நினைத்தவாறு சுருட்டை எடுத்துப் பற்றவைத்தான். சிதம்பரத்தின் மனம் குழம்பியிருந்தது. சுருட்டுப் பிடிப்பதிலே மனம் லயிக்கவில்லை.

**II**

பூபாலனைக் கண்ட சிங்கம் திகைத்துப் போய்விட்டான். முகத்திலே கருமை படர்ந்து கண்களிலே ஆவேசமான வெறியோடு பற்களை நரும்பிக் கொண்டே தொடையில் முஷ்டியால் குத்திக் கொண்டு வேப்பமரத்தின் கீழே நிலைகொள்ளாது நடந்து கொண்டிருந்தான் பூபாலன். ஏதோ பாரதூரமான விஷயம் நிகழ்ந்திருக்க வேண்டும் என்பதனை மனதினுள் யூகித்துக் கொண்டே அவன் நின்ற இடத்திற்குச் சென்றான் சிங்கம். சிங்கத்திற்குப் பின்னாலே சடையனும் சென்றது. ''பூபாலு—என்னடா கொதிச்சுக் கொண்டு நிக்கிறாய்?'' கொஞ்சம் உரத்தே கேட்டான் சிங்கம். உணர்ச்சிகள் கொப்பளிக்கும் உருவமாகவே நின்ற பூபாலன் குரல் கரகரக்கச் சொன்னான்:

''என்னை வேலையை விட்டு உடனே போகச் சொல்லியிட்டான் .....'' ''என்ன?'' அதிர்ந்து போனான் சிங்கம். ''என்னை வேலையை விட்டு எப்பவோ இவன் நிப்பாட்டுவான் எண்டு எனக்குத் தெரியும். அதை நான் பார்த்துக் கொள்ளுவன்......ஆனால் ஒரு பொட்டையனைப் போலை ஆக்களுக்கு முன்னாலை வைச்சு சுகுமாரனுக்கு றேட்டிலை வைச்சு அடிச்சுப் போட்டான்...'' சிங்கத்திற்கு ஆத்திரம்மூள, வார்த்தைகள் கோபத்தோடு சீறின; ''எனக்கு ஏன் இதைச் சொல்லி அனுப்பேல்லை? இப்ப சுகுமாரன் எங்கை?'' பூபாலன் மெதுவாகக் கூறினான்: ''இது கொஞ்சம் முந்தித்தான்

நடந்தது. சுகுமாரன் முன்னுலேதான் நிக்கிறுன் கூப்பிடவா?' சிங்கத்தின் குரல் முந்தியது. ''நானே போறன் நீ நிண்டு கொள்'' என்றவாறு, காலினுள் புகுந்து விளையாடிய சடையனை அதட்டி விட்டு பின்புறமாகச் சென்று கடையினுள் நோட்டம் விட்டான். முன்பகுதியில் ஆரோக்கியநாதனின் அதட்டல்களோடு வியாபாரமும் பரபரப்பாக நடந்து கொண்டிருந்தது. சாப்பாட்டு மேசைகள் நிறைந்திருந்தன சுகுமாரன் சம்பல் வாளியை கையிலே கொண்டு அலுமாரி யடியில் யோசித்தவாறு நின்றிருந்தான். சிவப்பு நிறமான அவனுடைய இரு கன்னங்களிலும் விரலடையாளங்கள் கொழுக்கட்டையாய் வீக்கம் காட்டியிருந்தன, அவனது முகத்தின் புன்னகையும் களையும் அழிந்து போயிருந்தது. பார்த்துக்கொண்டு நிற்கையிலேயே சிங்கத்திற்கு கோபம் நெருப்பின் வேகத்தில் நெஞ்சினில் பற்றி மூண்டது.

''டே சுகுமாரா......''

நெஞ்சைத் தொடும் சிங்கத்தின் கரகரத்த குரல் அங்கே திடுக்காட்டத்தைக் கொடுத்தது. மௌனம் ஒரு இருளாகி அங்கேயிருந்தவர்களில் திரை விரித்தது. யாரும் அசைய வில்லை. முன்னுலேயிருந்த ஆரோக்கியநாதன் பயம் பிதுங்கிய நெஞ்சோடு அவ்விடம் வந்தார்; அந்த முகத்தில் உணர்ச்சிகள் பரபரப்புற்றன.

''என்னடா, உன்னை ஆரவோ ரேட்டிலே வைச்சு அடிச்சானுமடா...... மெய்தானே?''

எந்நேரமும் உறங்குவது போலத் தோற்றங் காட்டும் அவனது கண்கள் இப்போது செவ்விரத்த நிறத்திலே சிவந்திருந்தன. அவன் வார்த்தைகளை முடிக்கமுன் அவனருகே வந்த ஆரோக்கியநாதனுக்கு, சிங்கம் 'அடா' என்ற சொற்களை அழுத்திக் கூறியது மனதினுள் அச்சத்தைக் கொடுத்ததாயினும் நிலைமையைச் சமாளிக்க வேறு வழியின்றி ''என்ன சிங்கம் இது...... ஆக்கள் சாப்பிடுற இடத்திலே.. பின்னலே வா கதைப்பம்......'' என்று தணிந்த குரலிலே கூறினுன். சிங்கத்திற்கு ஆத்திரம் தணியாத நிலையில் சுகுமாரனையும் கைகளால் அழைத்துக் கூட்டிக் கொண்டு வேப்பமரத்தடிக்குச் சென்றுன். அதே வேளையில் சந்தையிலிருந்து ஒரு மூட்டை மரக்கறியைச் சுமந்தவாறு சிதம்பரம் களைக்கக்களைக்க அவ்விடத்திற்கு வந்து கொண்டிருந்தான். அந்த இடைநேரத்தினுள்ளே இனி என்ன மாதிரி நடந்து கொள்ள வேண்டுமென்று ஆரோக்கியநாதன் மனதினுள்ளே முடிவெடுத்துக் கொண்டு விட்டார். ''சிங்கம், இப்ப என்னத்துக்கு நீ கொதிச்சுக் கொண்டு நிக்கிறுய்...... சொல்லு?''

சிங்கம் ஏளனத்தோடு சிரித்தான்: "என்ன நீங்கள் ஒண்டுமே தெரியாத மாதிரிக் கதைக்கிறியள்?" முகத்திலே புன்னகையையும் குரலிலே தணிவையும் வரவழைத்துக் கொண்டே கூறத்தொடங்கினார் ஆரோக்கியநாதன்: "தம்பிமாரே, என்ரை நிலையிலிருந்தால் உங்களுக்குக் கஷ்டம் விளங்கும். எனக்கு இங்கையொரு தொழில் மட்டும்தான் இருக்குதெண்டா நினைக்கிறியள்? வவுனியா விலை கொமிஷனுக்குக் கடையொண்டு நடத்துறன் ...இங்கை ஐம்பதேக்கர் தோட்டமிருக்குது. அதோடை இந்தவருஷக் கடைசிக்குள்ளை இன்னொரு புடவைக்கடை திறக்க யோசிச்சிருக்கிறன்...இப்படி எனக்கு எத்தினை கரைச்சல்கள். நான் மற்றவை மாதிரியில்லை ...உங்களை என்ரை பிள்ளையள் மாதிரித்தானே நடத்திறன். ஏதோ பலகரைச்சல்களுக்கை மனம் அலுத்து எதையாவது அவசரத்திலை செய்திட்டால் அதைப் பெரிய விஷயமாக எடுத்துக் கொள்ளுறதா?"

அவருடைய குரல் தளும்புகிறாற்போல சொற்கள் நடித்தன, "தம்பி சிங்கம், இண்டைக்கு முழுவதும் எனக்கு மனஞ் சரியேயில்லை. உங்கடை கவலையளையெண்டால் நீங்கள் உங்களுக்குள்ளையே சொல்லி ஆறலாம்...என்னுடைய கவலையை நான் சொல்லி ஆற என்ன வழியிருக்குது?"

சிங்கம், சுகுமாரனையும் பூபாலனையும் வியப்போடு மாறி மாறிப் பார்த்தான்.

"எனக்கும் சுகுமாரனையும் பூபாலனையும் போல பிள்ளைகள் இருக்குதுதான் ...என்ரை பிள்ளையளுக்கு அடிக்கிற மாதிரித்தான் நான் உங்களுக்கும் அடிக்கிறன். அது பிழையெண்டு நீங்கள் நினைச்சால் நான் கெட்டவன்தான். இவன் பூபாலனை சும்மா சொன்னனன் நீ இனி வேலைக்கு வரப்படாதெண்டு ...அவன் அதுக்கு ஒரு மறுப்புஞ் சொல்லாமல் இதிலை வந்து நிக்கிறான். ஏன் அந்த நேரம் இவன் இல்லை முதலாளி நான் உங்களோடைதான் நிக்கப்போறன் எண்டு சொன்னால் குறைஞ்சா போயிடுவான்......"

சொல்லி முடித்து விட்டு ஆரோக்கியநாதன் மூவரையும் பார்த்தார். மூவரின் முகமும் குழம்பிப்போயிருந்தது "சரி சரி போய் அவரவர் வேலையைப் போய்ப் பாருங்க" என்று கூறிக்கொண்டே முகத்தில் தவழும் வெற்றிப் புன்னகையோடு உள்ளே சென்றார் ஆரோக்கியநாதன்.

இரண்டு வாரங்களின் பின் புதிதாக மூன்று பேரை காமாட்சி விலாசிற்குக் கொண்டு வந்து சேர்த்துவிட்டார் ஆரோக்கியநாதன். கந்தசாமி, அப்புத்துரை ஆகிய இருவருக்கும் முப்பத்தைந்து வயதிருக்கும்; மற்றவன் பதின்

மூன்று வயதான பத்மநாதன். கந்தசாமியும் அப்புத்துரையும் வாட்டசாட்டமான வாலிபர்கள். இருவருக்கும் சமையல் வேலையை நன்றாகப் பழக்கும் பொறுப்பை ஆரோக்கியநாதன் சிங்கத்திற்கே கொடுத்து விட்டு, "நான் இன்னுமொரு சாப்பாட்டுக் கடையைத் திறக்கப் போறன் அதுக்குரிய ஆட்களை இப்பவே பழக்கியெடுக்க வேணும்" என்றார். அவர்களிருவரும் மிகவும் பயபக்தியோடு சிதம்பரத்திடமும், சிங்கத்திடமும் வேலை பழகிக்கொண்டு வந்தனர். அன்றைக்கு இரவு எட்டு மணிபோல வேப்பமரத்தின் கீழிருந்து யாரோ சிணுங்கும் சத்தம் கேட்கவே அவ்விடத்திற்கு மெதுவாகச் சென்றான் சிங்கம். வேப்பமரத்தடிக்குக் கீழே சிணுங்கிக் கொண்டு நின்றவன் பத்மநாதன்.

"ஏனடா வந்து ஒருநாளாகக் கிடையில்லை பெட்டையளைப் போலை அழுதுகொண்டு நிற்கிறாய்? என்ன நடந்தது?" அந்தக் கரகரத்த குரலளித்த அச்சத்தால், பதில் சடாரென வந்தது; "எனக்கு இன்னும் சாப்பாடு தரேல்லை- தரமாட்டினையாம்......" சிங்கம் அவனது பசித்தகுரலில் மனம் கரைந்தான். "ஏன் மோனை, என்னத்துக்காக கந்தையன் சாப்பாடு தரமாட்டன் எண்டு சொன்னவன், சொல்லு நான் அவனைக் கேட்க?" பத்மநாதன் அந்தக் குரலிலே ஆறுதல் கண்டவனாய் மனம் ஆசுவாசமடைந்தான்: "இண்டைக்கு மத்தியானம் ஒரு பொடியன் கடையிலை வந்திருந்து ரெண்டு வாய்ப்பனும், ரெண்டு வடையும் தரச்சொல்லிக் கேட்டான். நான் அப்படியே எடுத்துக் கொண்டுபோக ஒரு வாய்ப்பன் நிலத்திலை விழுந்திட்டுது. இதை முதலாளி கண்டிட்டார். கண்டிட்டுச் சொன்னார்— சரிசரி கீழே விழுந்ததை இனி ஆக்களுக்கு வைக்காதை அதை இடியப்பப்பெட்டிக்குள்ளை வை. பிறகு தூக்கி வெளியாலை வீசிப் போடு என்றார்... நானும் அவர் சொன்னது போலை கொஞ்ச நேரத்திலை செய்தன். இதைக் கந்தையா கண்டிட்டு முதலாளியிட்டைச் சொன்னார் உடனை முதலாளிக்குக்கோவம் வந்திட்டுது. இந்தநாய்க்கு இண்டைக்குச் சோறுகுடுக்காதை எண்டிட்டார்.. எனக்குப் பசி தாங்கேலாமலிருக்குது."

அந்தச் சூழ்நிலையிலும் சிங்கம் கெக்கட்டம் விட்டுச் சிரித்தான்; "டே விசர்ப் பொடியா, உனக்கு இவங்கள் சொல்லுறது எப்பதான் பிடிபடப் போகுதோ தெரியேல்லை. கள்ளங்கவடு தெரியாத நீ ஏனடா இவங்களுக்குள்ளை வந்தாய்?" பத்மநாதன் சொன்ன சொற்களை மீண்டும் நினைவு கொள்கையில் சிங்கத்திற்கு சிரிப்பு வந்தது. பொதுவாக சாப்பாட்டுக் கடைகளில் நடப்பது இப்படித்தான்.

ஏதாவது தின்பண்டங்கள் எடுக்கும்போது கீழே விழுந்து விட்டால், அந்த நேரத்தில் விழுந்த பண்டத்தை எறிவதற்கென்று சொல்லியவாறு எடுத்துப் பெட்டிக்குள் வைத்து விட்டு, பிறகு கடையில் ஆட்கள் இல்லாத போது அதனை எடுத்து மண்ணைத் தட்டி விட்டு புதிய பண்டம் போல வைப்பது வழக்கம், இது தெரியாமல் பத்மநாதன் அவதிப் பட்டது மனதினுள் சிங்கத்திற்கு பரிதாபகரமாக இருந்தது. ''சரி, சரி நான் அவன் கந்தையனிட்டைச் சொல்லுறன்.. போ, சும்மா இந்த வயதிலை பொட்டையளைப்போலை அழாதை போ......''

நன்றாக அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த சிங்கம் ஏதோ கூக்குரல் காதிற்கு அருகாகக் கேட்பதாயுணர்ந்து திடுக்கிட்டெழுந்து வெளியே போனான். நித்திரைச் சோம்பலுள் புதைந்து வார்த்தைகள் கேட்டுக்கொண்டிருந்தன. காமாட்சி விலாசின் பின்புறத்தில் எரிந்து கொண்டிருந்த அரிக்கன் லாம்பின் கீழே பத்மநாதன் அழுதவாறு நின்றான். அவனை சுகுமாரன் ஏதோ சொல்லித் தேற்றிக்கொண்டிருந்தான். சிங்கம் படியடியிலே நின்று கொண்டு, ''என்னடா, இந்தப் பொட்டையன் இரவு பகல் எந்நேரம் பார்த்தாலும் அழுதுகொண்டிருக்கிறான்...... என்ன, என்ன சங்கதியடா'' என்றான். சுகுமாரன் தலையைச் சொறிந்து கொண்டான்.

''இல்லையண்ணை ----இவன் கந்தையன் இந்தப் பொடியனைப் படுக்கவிடாமல் கரைச்சல் குடுக்கிறான் .. அதுதான் பொடியன் அழுது கொண்டு நிக்கிறான்'' சிங்கத்திற்கு மனம் சுருக்கென்றது. கோபம் நெஞ்சினினுள் வேரிட்டது. பற்களை நரும்பிக் கொண்டு உள்ளே பார்த்தான்:

''எங்கை அந்தக் குப்பாடி றாஸ்கல் --எடே கந்தையா'' சுண்டி விசுக்கி சவுக்கினால் இழுபட்டு வருபவன் போல கந்தையா, சிங்கத்தின் வார்த்தைகள் முடியமுன் அவ்விடத்திற்கு வந்தான். கணங்களுக்குமாகாத நேரந்தான். பளீர் பளீரென்று கந்தையாவின் கன்னங்களில் மாறி மாறி அறைந்தான் சிங்கம். எதிர்பாராத தாக்குதலால் தடுமாறிநிலைசாய்ந்து போன கந்தையா விழப் போன போது அவனை விழாது தாங்கிக் கொண்டான் சுகுமாரன்: ''இனிப் போதுமண்ணை.....பாவம், விட்டிடுங்க ....''

சுகுமாரனின் கெஞ்சிய குரல், சிங்கத்தின் கைகளை நிறுத்தியது. ''நாய்ப் பயல் '' என்று காறித் துப்பிவிட்டு நிமிர்ந்தான் சிங்கம். மங்கிப் பதகளிக்கும் வெளிச்சத்திலே காமாட்சி விலாசில் வேலை செய்கின்ற எல்லோரது முகங்களும் தெளிவில்லாத சித்திரமாகித் தெரிந்தன.

பூபாலனின் குரல் மெதுவாகக் கேட்டது: ''சனியன், உழைக்கிற காசெல்லாத்தையும் பொடியளுக்கே சிலவளிக்குது — ஒரு கலியாணத்தை முடிக்கிறது அல்லாட்டில் பேசாமல் ஒப்பிறேசன் எதையாவது செய்து அறுக்கிறது: வெக்கங்கெட்ட பேயன்......'' சடையன் அப்போதுதான் எங்கோ போய்விட்டு வந்து பலத்துக் குரைத்துக் கொண்டு நின்றது. ''சரி, சரி அவையவை பாட்டிலே போய்ப் படுங்கோ...'' என்று கூறியவாறு காலால் சடையனைச் செல்லமாகத் தட்டிவிட்டு தன் இருப்பிடத்திற்கு நடந்தான் சிங்கம். சிறிது தள்ளி அவனைப்பின் தொடர்ந்தான் கந்தையா, ''அண்ணை, அண்ணை'' தன் பின்னே கெஞ்சியவாறு வந்த கந்தையாவின் குரலைக் கேட்டுத் திரும்பினான் சிங்கம். சிறிது இளகியிருந்தது சிங்கத்தின் குரல்: ''என்னடா போய்ப்படுஎண்டு சொல்லுறன், கேளாத செகிடன் மாதிரிப் பின்னாலே வாறாய்......''

''அண்ணை என்ரை பிழையைப் பொறுத்துக் கொள்ளுங்க... இனி இப்படிப் பிழை செய்யமாட்டன்...'' கந்தையா நாத்தளுதளுக்க அழத்தொடங்கி விட்டான். சிங்கத்துக்கு மனம் இரங்கி வார்த்தைகள் தணிந்து வந்தன:

''டே, விசரா அதுக்கு ஏனடா இப்படி அழுகிறாய்?''

அவன் ஒன்றும் பேசாமல் விசும்பினான். ''ஏனடா நீ ஒரு கலியாணத்தை முடிச்சால் என்னடா?'' கந்தையாவின் விசும்பல் சிறிது சிறிதாக ஓய, ''கலியாணம் முடிக்க விருப்பந்தான் அண்ணை ஆனால்... இருக்க வீடும், சிலவளிக்க செம்புச் சதமும் இல்லாத எனக்கு ஆரு பொம்பிளை தரப் போறாங்கள்?'' என்று மிகவும் உருக்கமாகச் சிங்கத்திடம் கேட்டான். சிங்கம் அதற்குப் பதில் எதுவும் பேசவில்லை. மாணிக்கம் சொன்ன வார்த்தைகளே அந்தவேளையில் நினைவிற்கு வந்தன ...''சுரண்டல் ஒழியும் வரை, எல்லாரும் எல்லாம் பெற்று வாழுங் காலம் வரும் வரை இந்த அவல நிலமைகள்தான் இருக்கும்.''

சிங்கம் தன்னை மறந்தவனாய் முணுமுணுத்தான்!

''இந்தக் கரைச்சல்களில்லாத எங்களுக்கு எல்லா வசதியுமுள்ள வாழ்க்கை எப்பதான் வரப்போகுதோ?''

பாயிலே போய் விழுந்த சிங்கத்திற்கு இரவுமுழுவதும் நித்திரையே வரவில்லை. இன்றைக்கு அவன் தன்னை மட்டும் நினைத்து மனம் அவதிப்படவில்லை. தன்னோடு வேலை செய்கின்ற ஒவ்வொருவனது வாழ்வினையும் அன்று எண்ணிக் கொண்டிருந்தான் சிங்கம்.

''ஆரோக்கியநாதரைப் போலை எத்தினை முதலாளிமார் உலகத்திலை இருப்பாங்கள். அவங்களுக்குக் கீழை எங்களைப் போலை எவளவோபேர் வேலை செய்யிறுங்கள். வெறும் சாக்கும், கிழிஞ்சபாயும், மூட்டைகள் நிறைஞ்ச வாங்குந்தான் அவங்களுக்குப் படுக்கை. அளவான சாப்பாடு...... லீவெண்டு போனுல் திரும்பி வேலைக்குப் போகேலாது. கலியாணம் முடிச்சு குடும்பமா வாழுறதைப்பற்றி நினைக்கேலாத சம்பளம் இதே நேரத்திலை எங்களைப் பிழிஞ்சு வாழுற முதலாளிமாருக்கோ வசதியான வீடு, குடும்பம், வாழ்க்கை என்ன நீதி இது?'' தனக்குள்ளேயே கதைத்துக் கொண்டு உழன்று உழன்று படுத்த சிங்கம் திடீரென்று சிதம்பரத்தை நினைத்துக் கொண்டு படுக்கையைவிட்டு எழுந்தான். சிதம்பரத்தின் படுக்கை வெறுமையாகக் கிடந்தது. சந்தேகந் தலையெடுக்க, படுக்கையிலேயேயிருந்த சிங்கம், விடிவெள்ளி காலித்துக் கொண்டிருந்த அதிகாலையில் சிதம்பரம் தயங்கித் தயங்கித் உள்ளே வருவதனைக் கண்டான்.

## ஐந்தாம் அத்தியாயம்

மாணிக்கம் சொன்ன சொற்கள் உண்மைதானென்பதனை சிங்கம் நன்ருக உணர்ந்து கொண்டான். தன்னேடு முரண்படுகின்ற எல்லோரையும் தனது கடையிலிருந்து மிகத்தந்திரமாக நீக்கிவிடுவதற்காகவே, புதியவர்களை வேலைக்குச் சேர்த்துக் கொண்டிருப்பதாக மாணிக்கம் சொன்னதை சிங்கம் ஏனையவர்களிடம் கூறியபோது அவர்களும் அதனை ஒப்புக் கொண்டார்கள். எல்லோரும் அதனைப்பற்றி திகிலோடும் மனக்கிலேசத்தோடும் கதைத்துவிட்டு இதற்கு என்ன செய்யலாம் என்று ஒருவரையொருவர் பார்த்துக் கொண்ட போது பூபாலன் நிதானமாகச் சொன்னுன்: ''நாங்கள் எல்லோரும் ஒத்து ஒரு முடிவோடை நிண்டமெண்டால் எங்களை ஆருமே அசைக்கேலாது. எங்களுக்கிருக்கிற பிரச்சினையை கடைத்தெருவிலையுள்ள மற்றச் சிப்பந்தியளிட்டைச் சொன்னுல் அவங்கள் எங்களுக்கு முழுஉதவியும் தருவாங்கள்......''

சுகுமாரன் அதனை மனமார ஒப்புக் கொண்டான் ''ஓமோம்.. பூபாலன் சொல்லுறதுதான் உண்மை...... அண்டைக்கு முதலாளி என்ன நைசாய்க் கதைச்சான் பார்த்தீர்களா?— அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பது பொய்யில்லை......''

சிங்கம் பிடரியைத் தடவிக்கொண்டு சிதம்பரத்தை

ஏறிட்டான். சிதம்பரத்தின் முகமோ சூழம்பிப் போய்க் கிடந்தது: ''அண்ணை, முதலாளி பொலிசைக் கொண்டு எங்களைப்பிடிச்சு அடைச்சால் என்ன செய்யிறது?—'' பூபாலன் அட்டகாசமாகச் சிரித்தான்: ''சிதம்பரமண்ணை.. எதுக்கும் ஏன் பயந்து சாகிறியள்: கொலை செய்தால், களவெடுத்தால்தானே பொலிசுக்குப் பயப்படவேண்டும்: நாங்கள் ஒத்து ஒற்றுமையாயிருந்தால் எங்களை ஆரும் அசைக்கேலாது—...''

சிங்கம் எல்லோரையும் பார்த்தான், குரல் கரகரத்தது: ''இப்படியே நாங்கள் அடிமையளைப் போலை இருந்தால் ஒரு காலமும் மீட்சி வரப்போறதில்லை ஒருதனுக்குக் கஷ்டம் வந்தால் எல்லோருமே ஒத்து அவனுக்காக நிக்கவேணும் என்ன கந்தையா?'' கந்தையா கூச்சத்தோடு அவனைப் பார்த்தான். பின்னர் சம்மதத்திற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான். அரைகுறையாகச் சோர்ந்து கிளைத்திருக்கும் கண்களை ஏறிட்டபடியே சிங்கம் நெஞ்சின் வலதுபுற மார்பில் உள்ள தழும்பினைத் தடவிக் கொண்டான்:

''நானுங் கொஞ்ச நாளாக நெடுக யோசிச்சுக் கொண்டு தான் வாறன். எங்களை எல்லாருந்தான் பேப்பட்டம் கட்டிக் கொண்டிருக்கிறுங்கள். ஆரோக்கியநாதனும் கடை தொடங்கி ஆறுவருஷத்திற்குக் கிட்ட இருக்கும் கடைசி இந்தக் காலத்திற்குள்ளை ஒரு நாப்பது அல்லது ஐம்பது பேரையெண்டாலும் வேலைக்கு வைத்திருந்து கலைத்திருப்பார்...நானறியவே அவர் பலருக்கும் சம்பளம் குடுக்காமல் மடைப்பட்டம் கட்டி அனுப்பியிருக்கிறூர். அவரைப்பற்றி எங்கையும் முறையிடுறதுக்கு வழியுமில்லாமல் இருந்தாங்கள்... இப்ப நிலைமை அப்படியில்லை நாங்கள் நிலைமைகளை நல்லா யோசிக்க வேணும்... ..''

சிவப்பு நிறமான சுகுமாரன், தனது அடங்கிய குரலிலே: ''இண்டையைப் போலை ஒற்றுமை மூந்தி இருந்தால் பூபாலனுக்கு அப்படிக் கொடுமை நடக்க விட்டிருக்க மாட்டம்' என்றுன். பூபாலன் லேசாக புன்முறுவல் செய்து கொண்டே வேப்பமரத்தடியைப் பார்த்தான். ஒன்றுமே பேசவில்லை அவன். உள்ளேயிருந்து விசுவலிங்கம் ஓடிவந்தான்: வாக்குக்கண்ணுன அவன் அவசரத்தோடு சொன்னுன்: ''முதலாளி வாறூர் ......'' எல்லோரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு அங்கிருந்து மௌனமாக விலகித் தங்கள் இடங்களிற்குச் சென்றனர்.

மழை ஓயாமல் பெய்து கொண்டிருக்கின்றது. காமாட்சி விலாசிற்குள் ஜனத்திரள் கூடிவிட்டது. மழைக்கு ஒதுங்கிச் சிறிது நேரம் உள்ளே நிற்கவும் ஆரோக்கியநாதன் அனுமதிக்கமாட்டார் என்பதைத் தெரிந்தவர்கள் உள்ளேயிருப்பதற்காக தேனீர் குடித்துக் கொண்டிருக்கிறார்கள், வடை சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள், மிக்ஸரை ருசிக்கிறார்கள். மழை விடுவதாயில்லை. காற்றின் சுழற்சிக்கு ஆடிஆடி மரங்கள் விழுகின்றன. சமையலறையின் எல்லாப்புறங்களிற்கும் ஒழுக்குப்பிடிக்கும் பாத்திரங்கள் வைக்கப் பட்டிருக்கின்றன. டொக் டொக் என்று பாத்திரங்களுள் விழும் தண்ணீர், விழுந்த வேகத்தினில் சிறிது நீரை வெளியே எற்றி நிலத்தை நனைக்கின்றது. அம்மிக் கருகேயுள்ள சாக்கினுள் குறங்கிக் கொண்டு கிடக்கிறது சடையன். அடுப்பு மூன்றிலும் கறிகள் அவிந்து கொண்டிருக்கின்றன, ஜுவாலைவிட்டெரியும் நெருப்பு, அம்மழைக் குளிரிடையே வெத வெதப்பினை ஏற்படுத்தியிருந்தது. காமாட்சி விலாசிற்கும், சமையலறைக்குமிடையேயுள்ள பகுதி முழுவதிலும் வெள்ளம் பாய்ந்து கொண்டிருக்கிறது. சமையலறைக் கதவடியில் நிமிர்த்திப் போட்ட பக்கீஸ் பெட்டியின் மேலிருந்தவாறு பீடி புகைத்துக் கொண்டிருந்தான் சிதம்பரம், சிங்கம், அடுப்பங்கரையடியிலேயே நின்று யோசனையில் மூழ்கியிருக்கின்றான்.

பூபாலன் காமாட்சி விலாசின் வாசற்படியில் வந்து சமையலறைப் பக்கமாகப் பார்த்தான். வேப்பமரத்திற்குச் சிறிது தள்ளியுள்ள கிணற்றடிப்பக்கமாயும் வெள்ளம் தேங்கிவிட்டது. கிணற்றடிக்குப் பத்துயார் தள்ளியே அவர்களுக்குரிய வாளிக்கக்கூஸ் இருக்கிறது. அந்தக் கக்கூஸின் வளையப்புறங்களில் மேவி ஓடிய வெள்ளம் கிணற்றடியோரவெள்ளத்திற்குள் குப்பைகளை அள்ளி வந்து சங்கமித்துக் கொண்டிருக்கிறது. தனக்கருகேயுள்ள பெரிய குப்பை றம்மிற்குள் நிறைந்த எச்சில் இலைகளும் மழையிடையேயும் மணத்து நாறுகின்றதையுணர்ந்த பூபாலனுக்கு வயிற்றைக் குமட்டுகின்றது. காமாட்சி விலாசின் மூலைப்புறத்திலுள்ள சிறிய விறகு கொட்டிலுக்குள் இரண்டு காகங்கள் தஞ்சம் புகுந்திருப்பதைப் பார்த்துவிட்டு உள்ளே போகிறான் பூபாலன். சுகுமாரன் விசுவலிங்கத்தோடு வாழையிலைகளை வெளியே கழுவுவதற்காகக் கொண்டு வருகிறான். காற்றுப் புயலாகப் பலக்கும் அறிகுறி தோன்றிவிட்டது. மழை மேலும் மூர்க்கத்துடன் சீறிப் பெய்கிறது.

"இண்டைக்கு எத்தினை கொத்து அரிசி போடுறது எண்டு கேட்டிட்டு அடுப்பிலை உலையை ஏத்து" என்று சிங்

கூறவே, சிதம்பரம் பீடியை எறிந்து விட்டு, சுழகொன்றை தலைக்குப்பிடிக் எடுத்துக் கொண்டு சாறத்தை உயர்த்திக் கட்டியவாறு மழைக்குள் இறங்கினன்.

''அதோடை கறி எடுக்கிற மூண்டு அண்டாவையும் எடுத்துக் கொண்டுவா... பழப்புளியும் மட்டுமட்டாத்தான் இருக்குது. இண்டைக்கும் இறைச்சி பொரிக்கேலாது எண்டு சொல்லிவிடு...... அறணை போலை மறந்து போய் வந்திடாதை......'' என்ருன் சிங்கம்.

''சரி அண்ணை—'' பதிலைச் சொல்லிக்கொண்டே மழைக்குள் ஓடினன் சிதம்பரம். சிதம்பரத்தைப் பார்த்துக் கொண்டே அவனுடைய வாழ்வினை எண்ணி மனதினுள்ளே புன்னகை செய்தான் சிங்கம். அருணசலத்தின் தாயோடு களவாகச் சந்திப்புகள் வைத்துக் கொள்ளுகிருன் சிதம்பரம். அவளையே வெகுவிரைவிலே திருமணமும் செய்து கொள்ளப்போகிருன் அவன். இது அவர்கள் மூவருக்குள்ளான அந்தரங்கம்.

''அண்ணை, அவள் என்னை நம்பிவிட்டாள்— நான் அவளையே கலியாணமும் கட்டப்போறன்—நீங்கள் தான் எங்கள் ரெண்டு பேருக்கும் உதவி செய்ய வேணும்'' என்று அவன் நாத்தளுதளுக்கக் கூறியபோது சிங்கம்தானே முன்வலிந்து சொன்னன்; ''சிதம்பரம், நானிருக்கும் வரை நீ ஒண்டுக்கும் பயப்படாதை உனக்கும் எல்லா உதவியும் நான் செய்து தருவன்—ஆனல் இதை ரகசியமாய் வைத்திரு, அல்லாட்டில் எல்லாம் குழப்பமாகப் போயிடும்...''

அண்டாக்கள் வைக்கின்ற சத்தத்தைக் கேட்டு யோசனை கலைந்த சிங்கம் தன் எதிரே வேலுப்பிள்ளையும், சிதம்பரமும் நிற்பதனைக் கண்டான். தேத்தண்ணீர் போடுகின்ற வேலுப்பிள்ளை கடையை விட்டு வெளியே போகாத சுபாவமுள்ளவன். யாருடனும் எதற்கும் எதுவுமே கதைக்காதவன். ஒல்லியனான அவன் சிறிய தாடியும் வைத்திருந்தான்.

''என்ன வேலுப்பிள்ளை, கறடி பிறை கண்ட மாதிரி... எங்கடை பக்கம் வந்திட்டாய்... என்ன விஷேசம்?...''

வேலுப்பிள்ளை தாடியைத் தடவிக் கொண்டு சிரித்தான்.

''இல்லையண்ணை ... எனக்கு உதவியாக ரீ அடிக்கிறதுக்கு புதிசா ஒரு பொடியனை முதலாளி எடுத்திருக்கிருர் இப்ப அவனை ரீ அடிக்க விட்டிட்டு வந்திருக்கிறன்... கொஞ்சம் ஆறுதல் தானே!''

அவன் சொல்லிக் கொண்டு போகையிலேயே சிங்கத்தின் முகம் மாற்றம் கண்டது. யோசித்துக் கொண்டே முணுமுணுத்தான்:

''முதலாளி பெரியதிட்டத் தோடைதான் எல்லா வேலை யும் செய்து கொண்டு வாறன்... ஒரே நாளிலை எங்களெல் லோருக்கும் கழுத்தறுப்பு நடத்தப்போருன்...வேலுப்பிள்ளை நீ உடனே போய் பூபாலுவை வரச்சொல்லு...''

தடித்துப் பருத்த வேலுப்பிள்ளை அங்கிருந்து போய்ச் சில நிமிஷங்களுள் அவ் விடத்திற்குப் பூபாலன் வந்து விட் டான். ''என்னண்ணை... என்ன அவசரமாகக் கூப்பிட்டீங் களாம்?'' ஆர்வந்துள்ளக் கேட்ட பூபாலனை அமைதிப்படுத் தினுன் சிங்கம். ''இல்லைப் பூபாலு, ஏதவோ பெரியதிட்டங் களோடை முதலாளி வேலை செய்யிருன்—எனக்கெண்டால் ஒரே யோசனையாயிருக்குது...''

பூபாலன் முஷ்டியால் தன் தொடையிலே தட்டிக் கொண்டே, ''ஓமண்ணை இண்டைக்கு கட்சிக் கந்தோருக்கு ஒரு முறை போய் எல்லாரோடும் கதைப்பம்—. இவையெல் லாம் எங்களை என்ன செய்திட ஏலும்?'' என்றுன் பூபாலன். அவ்வேளையில் ராமையா கீரிட்ட குரலில் பூபாலனைக் கூப் பிட்டுக் கொண்டே அங்கே வந்தான். அவனுக்குப் பெண் குரல். ''அண்ணை, முதலாளி அங்கை எரிஞ்சு கொண்டிருக் கிருர் – அதுதான் சொல்லிவிட்டுப் போக வந்தனுன்......'' என்றுன் ராமையா. பிறகு அவனே சொன்னுன்: ''அண்ணை இண்டைக்கு இப்பவும் ரெண்டு பேரை முதலாளி வேலைக்கு எடுத்திருக்கிருர். ஏழு பேர் நிண்ட இடத்திலை பதின் மூண்டு பேர் வந்திட்டாங்கள்– இங்கை படுக்கவும் இடமில்லை... கக் கூசும் நாறுது.''

சிங்கம் சடக்கென்று கேட்டான்: ''இவங்கள் அப்புத் துரையும், கந்தசாமியும் அப்போதை மார்க்கெற்றுக் கெண்டு போனவங்கள் என்ன இன்னும் காணேல்லை--'' ''வருவாங்கள் வருவாங்கள்'' என்றவாறு, சிதம்பரம் அண்டாவினுள் கறியை ஊற்றினுன்.

II

செவியைத் தடவியவாறு வெற்றிலை கழுவிக் கொண்டி ருந்தான் விசுவலிங்கம். மழை ஆச்சரியப் படும்படியாய் மாலை நேரத்திலே ஓய்ந்து வானம் துடைத்து விட்டாற் போல நீலம் பாரித்துக் கிடந்தது. ஆனுல் காமாட்சி விலா சின் பின்புறமாகத் தேங்கி நின்ற வெள்ளம் சிறிது தான் வடிந்திருந்தது. கக்கூஸ் நாற்றம் மூக்கைத் துளைத்தது. சிங்கம் வெகு ஆத்திரத்தோடு உலவிக் கொண்டிருந்தான்.

''நாற்றம் தாங்கேலாமலிருந்தது. கக்கூசின்ரை அழுக் குத் தண்ணீரெல்லாம் கிணத்துக்குள்ளை ஓடப்போகுது... ஒவ்வொரு வருஷமும் நாங்களும் இந்தப் பள்ளங்களை நிர

வச்சொல்லுறதுதான்: அது நடந்த பாடுதானில்லை; நுளம்புகள் இனிப் பெருகிவிடும்...''

தவளைகள் களகளா என்று இரையத் தொடங்கி விட்டன. ஈசல்கள் படைபடையாய் விளக்குகளைச் சுற்றிப் பறந்து கொண்டிருந்தன. அப்புத்துரையும், கந்தசாமியும் இடியப்ப உரல்களையும், தட்டுகளையும் கிணற்றடியிலே போட்டு அலசிக் கழுவிக் கொண்டிருந்தார்கள். மழையில் தோய்ந்த வேப்பமரம் பசுமையாய் சிலிர்த்திருந்து பார்வைக்கு குளிர்ச்சியளித்தது. நிலவு பால்மழையாகி இப்போது வெளிச்சம் பொழியத் தொடங்கியிருந்தது, பூரண நிலவு. வெள்ளை மேகங்கள் பஞ்சுபஞ்சாய் நீலச் சீலையுள் பொதிந்திருந்தன. எதிரேயுள்ள வேப்பம் இலைகள், அதனைத்தாண்டித் தெரியும் தென்னை மரத்தின் ஓலைகளில் எல்லாம் நிலவு ஒளி தடவிக் கொண்டிருக்கிறது......

வெளியேயுள்ள பக்கீஸ் பெட்டியில் உட்கார்ந்திருந்த சிங்கத்தின் முகத்தில் எதிர்பார்ப்புத் தெரிகிறது. அதே வேளையில் அங்கு பரபரப்போடு வந்தான் சிதம்பரம்: ''அண்ணை உங்களோடை ஒரு கதை...இஞ்சை வந்திட்டுப் போங்க......'' அவனுடைய அவதியை மனமுணர்ந்தவனாய் சிங்கம் அவனிற்கு அருகாகச் சென்று, ''என்னடா என்ன அவசரம்?'' என்றான். சிறிது நேரம் கவலையோடு நின்று விட்டு சிதம்பரம்...' ''சொல்லப் பெரிய அந்தரமாயிருக்குது...இவள் அன்னத்தை ராத்திரிப் பேபாய் முதலாளி வலோற்காரப் படுத்திப் போட்டானும்... அவள் சட்டையெல்லாம் கிழிஞ்சு அழுது கொண்டிருக்கிறாள். இண்டைக்கு தன்னை அங்கிருந்து கூட்டிக் கொண்டு போகாட்டில் தான் கிணத்துக்குள்ளை விழுந்து செத்துப் போடுவன் எண்டு சொல்லுறாள்... எனக்கு என்ன செய்யிறதெண்டே தெரியேல்லை... உடனடியாக இப்ப நான் அவளை ''எங்கை கூட்டிக் கொண்டு போறது? ... ஒண்டுமே விளங்கேல்லை ...'' என்று பதறினன். சிங்கத்திற்கு நெஞ்சினுள் ஆத்திரம் குமுறிப் பொங்கியது, பற்களை நரும்பிக் கொண்டு, சிதம்பரத்தினை தோளில் தன் கையைப் போட்டு விரல்களால் அவனது தோள் முட்டை நசித்தான் ''சிதம்பரம், இந்தளவுக்கு அந்தப் பொறுக்கி வந்திட்டானடா...... அவனுக்கு நல்ல பாடம் படிப்பிக்க இப்பதான் தருணம் வந்திருக்குதுபொறு...,இன்னுங் கொஞ்ச நேரத்துக்குப் பொறு'' சிங்கம் கொஞ்ச நேரம் பேசாதிருந்து விட்டு, சிதம்பரத்தை

ஏறிட்டான், "நீ ஒண்டுக்கும் யோசியாதை கொஞ்ச நேரம் பொறுத்து, தோட்டத்துக்குள்ளை போய் அருணயலத்தின்ரை தாயையும் கூட்டிக் கொண்டு நேரே மாணிக்கத்தின்ரை வீட்டைவா. அதுக்குள்ளை நான் எல்லா அடுக்குகளையும் செய்திடுவன்......"

சிதம்பரம் சிறிது தயங்கினுன். அவனது தயக்கத்தின் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட சிங்கம் சிரித்தவாறு, "வழியில்லாதவனுக்கு வழியில்லாதவன் தானடா உதவி செய்வான்......நீ மாணிக்கத்தை முந்தித் திட்டித் திரிஞ்சதைப் பற்றித்தானே யோசிக்கிருய்?...அதையெல்லாம் மாணிக்கம் ஒருக்காலும் மனதிலை வைச்சிராது. நீ விசர் யோசனையளை விட்டிட்டு ஆகவேண்டியதுகளைப் பார்......"

"சரியண்ணை..." சிதம்பரம் ஆறுதலாகப் பெருமூச்சு விட்டான். அதேவேளையில் பூபாலனும் அவ்விடத்திற்கு வந்துவிட்டான். பூபாலனைக் கண்டதும் சிங்கத்தின் முகத்திலே புன்முறுவல் மலர்ந்தது: "உன்னைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறன்... எல்லாஞ் சரிதானே?"

பூபாலன் தலையசைத்தான்: "எங்களிலே ஆரைவேலையிலிருந்து நிப்பாட்டினுலும் கடைத் தெருவிலை ஒருதன் கூட வேலைக்குப் போகமாட்டான். மாணிக்கம் அதுக்குரிய எல்லா ஒழுங்கையும் செய்திருக்கிருர்... எங்களின்ரை பலத்தை ஆராலும் அசைக்கேலாது..." பூபாலனின் குரலைப் போலவே முகமும் பூரித்திருந்தது: "கொஞ்ச நாள் முந்தித்தான் எனக்கு நல்ல அறிவு வந்திருக்குது. முந்தியிலையிருந்து ஆரோக்கியநாதனைப் பழிவாங்க வேணுமெண்டு ஒரு கிறிஸ் கத்திகூட வைச்சிருந்தன். ஆனுல் மாணிக்கமண்ணையோடை பழகி அவரோடு கனவிஷயங்களைக் கதைச்ச பிறகு என்றை முடிவை மாத்திவிட்டன். ஒரு மனிதனைச் சாகடிச்சு தனிப்பட்ட கோபத்தைத் தீர்க்கிறதாலை மாற்றம் வரப்போறதில்லை. முதலாளிகள் எல்லாருமே ஒரே மாதிரித்தான்... அவங்களுக்கு வசதியான சமூக அமைப்பை உடைச்சு நிர்மூலமாக்கிறவரை எங்களுக்கு நல்லகாலம் வரப் போறதில்லை...... இந்த முதலாளித்துவ முறையை நாங்கள் அழிச்சு இல்லாமல் செய்யவேணும்......" சிங்கம் பூபாலனைப் பார்த்தான். அந்த நோஞ்சானுன இளைஞனின் வைராக்கியம், துணிவு ஆகியன சிங்கத்தினுடைய மனத்திற்கு மிகவும் உறுதியை ஏற்றியது. பூபாலனின் தோளில் தட்டியபடியே, அவனை அருகாக இழுத்துக் காதிற்குள் குசு

குசுத்தான். பூபாலனின் கண்கள் அவ்வேளை செந்தணலெனச் சிவந்தன. கைமுஷ்டியால் இறுக்கித் தொடையிலே அடித்துக் கொண்டான்.

அன்று நடு இரவு பன்னிரண்டுமணியளவில் சிதம்பரமும், அன்னமும் காமாட்சி விலாசிலேயே சாப்பிட்டனர். சிதம்பரத்தை சிங்கம் வாஞ்சையோடு தோளில் தட்டிக் கொடுத்தான். சிதம்பரத்துக்கு கண்களிலே கண்ணீர் துளிர்த்திருந்தது. பறணிலேயிருந்த பூட்டுப்போட்ட சிதம்பரத்தின் பக்கீஸ் பெட்டியைத் தூக்கி, நன்றாகத் துடைத்து அவனது கையிலேயே கொடுத்தான் சிங்கம். தாங்கள் அனைவரும் சேர்ந்து சேர்த்த நூற்றிப்பத்து ரூபாவை பூபாலன் அன்னத்தின் கையினில் கொடுத்தான். மாணிக்கம் அவர்களை அவசரப்படுத்தினான். சிதம்பரம் எல்லோருக்கும் கையைக் கூப்பினான். குரல் தளு தளுக்க கண்கலங்கினான். ''நான் போயிட்டு வாறன்...... உங்களை ஒரு நாளும் நான் மறக்கமாட்டன்... வாறன்...'' சிங்கம் உணர்ச்சிப்பிழம்பாக நின்றான். அவனால் எதையுமே பேசமுடியவில்லை. விசும்புகிறாற்போல'' டே, சிதம்பரம் அன்னத்தைக் கவனமாக வைச்சுப்பார். அருணாயலத்தை ஒரிடத்திலும் அடிமை வேலை செய்யிறதுக்கு அனுப்பி விடாதை அவனை மனிசனாக ரோசமுள்ளவனாக வாறதுக்கு வழியைச் செய் ..... எதுக்கும் பயப்படாதை. கைவிடுகிறதுக்கு ஒண்டுமில்லாத எங்களுக்குள்ள ஒரேயொரு ஆயுதம் துணிவுதான் எண்டிறதைக் கடைசி பரியந்தமும் மறந்திடாதை .. '' என்று கூறிமுடித்தான், வாஞ்சையும், பரிவும் கண்டிப்பும் நிறைந்த அந்தவார்த்தைகள் சிதம்பரத்தின் இருதயத்தினுள் ஆழப்பதிந்ததை நன்றிகசியும் அவனது கண்கள் துலாம்பரப்படுத்தின. பின்னர் அங்கிருந்து வாடகைக் காரொன்றிலே சிதம்பரம் தன் குடும்பத்தோடு ஏறி அயலூருக்குப் பயணமாகிவிட்டான். அங்கிருந்தவர் களெல்லோருக்கும் இனம் தெரியாததோர் ஆறுதலும் ஆனந்தமும் அன்று ஏற்பட்டு தங்கள் சொந்தச் சகோதரன் ஒருவனுக்குத் திருமணம் செய்து வைத்த மகிழ்வு நெஞ்சிலே ததும்பிக் கொண்டிருந்தது. தங்கள் மனதின் ஆழத்திலிருந்து நிம்மதியானதோர் பெருமூச்சினை அன்று அவர்கள் உதிர்த்தார்கள்.

■■■

விடியற் புறமாகி விட்டது. கிணற்றடியிலும் கக்கூஸ் பக்கத்திலும் வெள்ளம் தேங்கி நின்றது. தவளைகள் இன்னமும் களகளத்துக் கொண்டிருந்தன. வேலி ஓரமாக நின்ற

இரண்டு பூவரச மரங்கள் வேரோடு பாறிச் சரிந்திருந்தன. கிணற்றடியோரமாக நின்ற கமுகமரம் கிணற்றுக் கட்டில் முறிந்து தொங்கியது. அதனருகே செத்துப்போய்க்கிடந்த பூனையொன்றின் கண்களைக் காகங்கள் கொத்திப்பறந்தன. கக்கூஸ்ப்புறத்திலிருந்து வயிற்றைக் குமட்டுகின்ற நாற்றம் சமையலறைக்குள்ளும் மணத்தது. சிங்கத்திற்கு ஆத்திரம் தாளவில்லை. தூஷணத்திலே திட்டிக்கொண்டு பக்கீஸ் பெட்டியில் உட்கார்ந்திருந்தான்.

"சீ என்ன கொடுமையான மனுஷன் இவன்! நாங்க எவ்வளவுதான் கஷ்டப்பட்டு வேலை செய்யிறம்.....அப்பிடியிருந்தும் எங்களுக்கு படுக்கிறதுக்கு நல்ல பாயில்லை...... நேரத்துக்கு நேரம் சாப்பாடில்லை...நிம்மதியான வாழ்க்கையில்லை...எங்களை உணர்ச்சியளே இல்லாத மிருகமெண்டா இவன் நினைச்சிருக்கிறான்? .. மாணிக்கந் தோழர் சொல்லுற விஷயங்கள் ஒண்டு கூடப் பொய்யில்லை. முதலாளியின்ரை ஒரே நோக்கம் சுறண்டிக் கொழுக்கிறதுதான்......தொழிலாளியைப் பற்றி அவனுக்கு ஒரு போதிலும் அக்கறை வரமாட்டுது. இல்லாட்டில் இப்படி மோசமாக ஆரோக்கியநாதன் எங்களை நடத்துவானே? பதினலு பேருக்கு ஒரு கக்கூஸ், படுக்கவே இடங்காணுத கொடுமை, துப்பரவேயில்லாத கிணறு ... மனச்சாட்சியே இல்லாத இந்த நாய்ப்பயலை என்ன செய்ய?... "சிங்கத்திற்கு சமையல் வேலையை ஆரம்பிக்கவேவிருப்பமில்லை. புதிய சமையற்காரர்களும் அடுப்பிலே நெருப்பை மூட்டிவிட்டு சிங்கத்தின் கட்டளைக்காக காத்திருந்தனர். நெருப்புப் பற்றியெரிந்து கொண்டிருந்தது. சடையன் மூலையிலே சுருண்டு குறங்கிக்கிடந்தது.

வெளியே வீதியில் சனக்குரல்கள் கேட்டுக்கொண்டிருந்தன. பழைய லொறி ஒன்று கடகடத்தபடி காமாட்சி விலாசின் முன்னே உறுமிக் கொண்டு நின்றது. ஆரோக்கியநாதன், சமயநற்சிந்தனையை வானெலியில் உரக்கக் கேட்கும்படி விட்டிருந்தார். இந்நேரத்தில் அவர் சாம்பிராணிப் புகையைச் சாமிப்படங்களுக்குக் காட்டித் தேவாரத்தை முணுமுணுத்துக் கொண்டிருப்பார். நெருக்கடியான மனநிலையிலும் சிங்கத்திற்கு திடீரென்று மனத்தினுள்ளே புன்னகை சுழித்தது. இன்னும் சிறிது நேரத்திலே சந்தைக்கு அனுப்புவதற்காக ஆரோக்கியநாதன் சிதம்பரத்தைத் தேடி அங்கே வருவார். அவன் இல்லையென்று அறிந்த பின்னர் அவர் படப்போகும் பாடு சிங்கத்தின் கண்களின் முன்னே வந்து நின்றது. "சரி பார்ப்பம்—என்ன நடக்குதெண்டு கொஞ்ச நேரத்திலை தெரிஞ்சுடுந்தானே..."

கிணற்றடியில் நாலைந்துபேர் கரிக்கட்டியால் பல் தீட்டிக் கொண்டு நின்றனர். எல்லோரது மனமும் சிதம்பரத்தை ஆரோக்கியநாதன் வந்து விசாரிக்கப் போகும் நிமிஷங்களிலேயே தரித்து நின்றன.

சிங்கம் சிதம்பரத்தையும், அன்னத்தையும் மனதினுள்ளே நினைத்துக் கொண்டான். சிதம்பரம் எப்பாடுபட்டும் அன்னத்தைக் கவனமாக வைத்துப் பார்ப்பான் என்று சிங்கம் நம்பினான். சிதம்பரமும் தானும் முதலில் சந்தித்த நாளையும், பின்னர் தனக்கு அஞ்சிஅஞ்சி சிதம்பரம் நடந்து கொண்ட வேளைகளையும் மனப்பதிவிலே துலக்கிப் பார்த்தான் சிங்கம். அன்னத்தை நினைவு கூர்ந்தபோது கண்ணம்மா மனதிலே வந்தாள். தங்கம்மாவைப் போல அவனைக் கண்ணம்மா வேதனைப் புளுக்கத்திலே ஒருபோதும் ஆழ்த்தியதில்லை. சிறு குழந்தையின் பரிவு கொண்ட இனியவள் கண்ணம்மா. இருபது வயதிலும் பிஞ்சுக் குழந்தையின் கபடறியா முகம். அந்த முகமே அவனை அவள்பால் நேசங் கொள்ள வைத்தது. மெலிவான புன்னகைதனையே அறிந்த அவளை அவன் அறிந்த நாள் பத்து வருஷங்களுக்கு முன்னரே நிகழ்ந்ததாயினும் இன்றுகூட நேற்றுப் போலவே நினைவின் சேமிப்பிலிருக்கிறது. அவளை அவன் விரும்பியிருந்தான். அவளுந்தான், கண்ணம்மா அவனுக்குப் பல உதவிகள் செய்தாள். ஆனால் திடீரென அவளுக்குத் திருமணம் நடந்தது. யாருமே அறியாது அவள் அங்கிருந்து போய்விட்டாள். அது பழைய கதை. சிங்கமும் அவளுமே அறிந்திருக்கும் சரித்திரம். சிங்கம் தன்னுள்ளேயே சிரித்துக் கொண்டான், கவலையோடு; வேடிக்கையோடு; தன் கழிந்துபோன வாழ்வினைப் பற்றிய கசப்புணர்வோடு,

அடுப்புகளில் நெருப்பு ஜுவாலை விட்டெரிந்து கொண்டிருக்கிறது. சிங்கத்தின் யோசனைகளைக் குலைக்க யாருக்கும் தைரியமில்லை. சடையனும் இன்னமும் குறங்கிக் கொண்டு கிடக்கிறது. கிணற்றடியிலே நிமிஷங்களாக நின்று சிங்கத்தையே பார்த்திருந்த பூபாலன் அவ்விடத்திற்கு வந்து மெதுவாகச் செருமினான்.

பூபாலனின் செருமல் சிங்கத்தின் யோசனையைக் கலைத்தது. நிமிர்ந்து பார்த்தான். பூபாலனின் முகத்தில் ஆத்திரம் புதைந்து கொண்டிருந்தது. முஷ்டியால் தொடையில் தட்டிக் கொண்டே, ''அண்ணை இந்த நரகத்துக்கை எப்படி சீவிக்கிறது? படுக்க ஏலாது சாப்பிட ஏலாது. நேரகாலத் தோடை சாகிறத்துக்குத்தான் இஞ்சையிருக்கிறம் நாங்

கள்.... எல்லோரும் போய் முதலாளியிட்டைக் கேட்டு இதுக்கொருமுடிவு காணுவம் வாருங்க ..'' என்றான்.

பூபாலன் சொன்ன யோசனை சிங்கத்திற்கு மிகவும் சரியாகவே பட்டது. மற்ற எல்லோரையும் அங்கே கூப் பிட்டு அந்த யோசனையை அவர்களுக்குச் சிங்கம் சொன் ஞன். அவர்கள் எல்லோரும் அதனை ஒப்புக் கொண்டனர். நாங்கள் எல்லோருமே தாங்க முடியாத ஒரே விதமான வேதனையினை அனுபவிப்பதனை அவர்கள் நன்றாகவே உணர்ந்திருந்தனர்.

சிங்கம் நன்றாகவே யோசித்தான். தன் கடந்தகாலத் தின் இழிவான அடிமை வாழ்வினைப் பற்றி நினைவு கூர்ந் தான். விளைகின்ற துன்பங்களும், கஷ்டங்களும் தனக்கு விதிக்கப்பட்டவையே என நினைந்து அவற்றையெல்லாம் தலையினாலே தாங்கித் துயர் பொருமிய நெஞ்சோடு கழிந்து போயின அவனது வயதுகள். தன்னைவிடப்பிறரைப் பற்றி அவன் எண்ணியதில்லை. இன்றோ எல்லாம் தலைகீழாய் மாறிப் போயின. சிறுஅடிமைத்தனத்தையும் இன்று அவன் தாங்க விரும்பவில்லை. வாழ்க்கையென்பதே அர்த்தமுள்ள தாயும், அயலவரோடு பிணைப்புற்றதாகவும் மாறிப்போய் விட்டதனை சிங்கம் இப்போது உணருகிறான். இந்த மாற் றம் அந்தச் சிறிய பட்டணத்திலுள்ள கடைச் சிப்பந்திகள் ஒவ்வொருவனது நெஞ்சிலும் அரும்பக் காரணமாயிருந்த மாணிக்கத்தை நினைவு கொள்கையில் சிங்கத்தின் நெஞ்சி னுள்ளே நன்றியுணர்ச்சி பிரவகித்தது. அடிக்கடி மாணிக் கம் சொல்வது இப்போதும் உணர்ச்சி மயமாக சிங்கத்தின் காதோடு கேட்கின்றது; ''இழக்கிறத்துக்கு உலகத்திலை எங்களுக்கு ஒண்டுமே இல்லை. ஆனால் வெல்லுறதுக்கோ இந்த உலகம் முழுவதுமே இருக்குது ..பிறகு என்னகவலை?''

சிங்கம் ஒரு முடிவான யோசனைக்கு வந்தவனாய், முன்னே போக அவனை மற்றவர்கள் பின் தொடர்ந்து சென்றார்கள். ஆரோக்கியநாதன் பக்திசிரத்தையுடன் விநாயகர் லட்சுமி படங்களுக்கு பூச்சரங்களை அணிவித்து சாம்பிராணிக் குச்சியைக் குத்திக் கொண்டிருந்தார். இனிய மணம் எங்கும் கமழ்ந்தது: தேவாரத்தை முணு முணுக்க ஆரம்பித்தவர் கடைச்சிப்பந்திகள் எல்லோரும் தன்னெதி ரே நிற்பதனைக் கண்டதும் திடுக்கிட்டு விட்டார். ஆனால் மறுகணமே தனது முகபாவத்தினை மாற்றிக் கொண்டு முகத்திலே புன்முறுவலை வரவழைத்தவராய் மிகவும் நிதா னமான குரலிலே கேட்டார்: ''என்ன, எல்லோரும் இஞ்சை வந்திட்டியள்...என்ன காரியம்?... சொல்லுங்க...''

சிங்கம் நேருக்குநேராக ஆரோக்கியநாதனை ஏறிட்டுப் பார்த்தான். கண்கள் தணலாக எரிந்தன. வார்த்தைகள் இருதயத்தின் கொதிப்பினைக் கொப்பளித்துச் சீறின:

''ஆறுபேரே இருக்கேலாத இந்த இடத்திலை பதின் மூண்டு பதின்நாலுபேர் இந்த மழைக் காலத்திலை இருக் கேலாது. நாங்கள் இதை உங்களிட்டைப் பலதடவை சொல்லியிருக்கிறம். நீங்கள் அதைக் கொஞ்சமும் கவனிக் கிறுதாகத் தெரியேல்லை......''

''இப்ப அதுக்கு என்ன?'' வெகு சாதாரணமாகவே ஆரோக்கியநாதன் கேட்டது சிங்கத்தின் முகத்திலே உதைத் தாற் போலிருந்தது. மனதினுள் குமுறிய ஆத்திரத்தோடு தோளைத்தடவிக் கொண்டே கேட்டான் சிங்கம்.

''இதை நாங்க இனித் தாங்க முடியாது. இரண்டத்தரி ஒரு முடிவு இண்டைக்கு எங்களுக்குத் தெரியவேணும்...''

ஆரோக்கியநாதனின் முகம் சிவத்தது. நாடியை விர லினுல் உரஞ்சிக் கொண்டே அடிக்குரலில் சினம் பொங்கக் கேட்டார்: ''இப்ப என்ன சங்கம் கூட்டியா இங்கை வந்தி ருக்கிறீயள்? பெரிய பிரபுக்கள் கணக்கிலை என்னோடை சரிக்குச்சரி சமனுக ஞாயம் பேசுறியளே...ப்பூ..''

நின்றவர்கள் இதயத்திற்குள் அந்தச் சொற்கள் ஆழச் சென்று தாக்கியதை அவர்களினது முகங்கள் காட்டின. உணர்ச்சிப்பிழம்புகளாய் நின்ற அவர்களின் மௌனத்தைக் கலைத்துக் கொண்டு பூபாலன் முன்னே வந்தான்:

''நாங்கள் சங்கம் கூட்டிக் கொண்டு உங்களோடை பேசவரேல்லை. எங்களுக்குள்ளை உள்ள கஷ்டத்தை உங்க ளிட்டைச் சொல்லி நிவாரணம் தேடத்தான் வந்திருக்கிறம். நல்லா யோசிச்சுப் பாருங்க மிருகத்தை விடக் கேவலமாயி ருக்குது எங்களின்ரை நிலமை ..''

பூபாலன் மிகவும் நிதானமாகவே கூறிக் கொண்டுபோனுன்

''இந்த நிலமைகளுக்கையிருந்து நாங்கள் என்னமாதிரி வேலை செய்யிறது? இது திருந்தவேணும்..... அல்லாட்டில் நாங்கள் வேறை வழி பார்க்க வேணும்.......''

நோஞ்சானுன பூபாலனின் உருண்ட கண்களிலே ஒளி பொங்கியிருந்தது. வலது கையின் சின்னி விரல் நகத்தை பற்களினுல் கடித்துத் துப்பினுன். அவன் கூறியதைத்தாங் கிக் கொள்ள முடியாதவராய் தலையணை போட்ட கதிரை யைப் பின்னுலே தள்ளிவிட்டு தன் வழமையான அடிக் குரலில் கத்தினுர் ஆரோக்கியநாதன்:

''டே பூபாலு ...நீயாடா கதைக்கிறாய் முந்தி உனக்குத் தந்த அடியிலே ஒருகாது செகிடாப் போச்சு... உனது மற்றக் காதையும் செகிடாக்கிறதுக்குத்தான் இந்த நாயளோடு சேர்ந்திருக்கிறியாடா.....''

பூபாலன் ஏதோ சொல்ல வாயெடுத்தபோது சுகுமாரன் கந்தையாவைத் தள்ளிக்கொண்டு முன்னே வந்தான். சிவந்த அவனது முகம் கோபத்தில் பொருமி வெடித்தது:

''முதலாளி அந்தப் பழைய சேட்டையளை இனி விடலாமெண்டு யோசிக்காதையுங்க இனிக்கொஞ்சம் யோசிச்சுக் கவனமாய்க் கதையுங்க . ...''

ஆரோக்கியநாதன் மேசையில் ஓங்கிக்குத்தினர். பற்களை நறநற என்று நரும்பினர்: உடம்பு இனி இல்லையென்ற கோபத்தில் ஆடிக் கொண்டிருந்தது. சினம், கண்களைப் போலச் சொற்களிலே தெறித்தது.

''உங்களுக்கு விருப்பமில்லாட்டில் நீங்க எல்லாரும் உடனே வெளியிலே போகலாம்—உங்களை நம்பி நான் இங்கை இருக்கேல்லே... ..எனக்கும் ஆக்களிருக்கு... —''

''அவ்வளவு லேசிலே நாங்க இஞ்சையிருந்து போகமாட்டம் எங்களுக்கும் கணக்கு வழக்குத் தீர்க்கவேணும். அதைத் தீர்த்ததுக்குப் பிறகுதான் நாங்கள் இங்கையிருந்து போகேலும்... ..''பூபாலன் உறுதியோடு சொன்னன். அவ்வளவுதான்: ஆரோக்கியநாதன் கையை வீசிக்கொண்டு பூபாலனின்முன்னே வெறிநாய்போலப் பாய்ந்தார். சிங்கம் சட்டென்று எவ்வி ஆரோக்கியநாதனின் கையை வேகமாகத் தட்டிவிட்டான். ஆரோக்கியநாதன் தன்னை மறந்து கத்தினர்:

,'டே... பொறுக்கிப்பயலுகளே வெளியிலே போங்கடா—'' அந்தக்குரல் அடிவலியில் அலறும் மிருகத்தின் குரலைப் போல அவர்களுக்குக் கேட்டது. ஆயினும் அதனையே கேளாதவர்கள்போல நின்ற அவர்களிடையையிருந்து பூபாலனின் குரல் வெகு தீட்சண்யமாக ஒலித்தது:

'நாங்கள் போறம் ஆனல் அதுக்கு முந்தி எங்களின்ரை கணக்கைப்பார்... காசு தராமல் இந்த இடத்தை விட்டு நாங்கள் போகமாட்டம். உன்ரை விருப்பப்படி எங்களைக் கலைக்க ஏலாது...'' ஆரோக்கியநாதன் விக்கித்தவர்போல சில கணங்கள் பேசாது நின்ருர். ஒரு கண வீச்சுத்தான். திடீரெனப் பூபாலன் மேலே வேங்கையாகிப் பாய்ந்தார். பிருக்கியிலிருந்த சோடாப் போத்தலை உருவியதும், அதன்

அடிப்புறத்தை மேசைமுனையில் வைத்துத்தட்டியதும் கணப் பொழுதுதான். வேகத்தோடு கையிலிருந்த உடைந்த சோடாப் போத்தலை பூபாலனின் அடிவயிற்றினுள்ளே பாய்ச்சிவிட்டு உருவி இழுத்தார் ஆரோக்கியநாதன். எதிர் பாராத தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாது அடிவயிற் றைப் பிடித்தவாறு பூபாலன் சுருண்டு சரிந்தான்.

விசுவலிங்கமும் கந்தையாவும் அலறினுர்கள். இரத்தம் தண்ணீர் போலச் சீறிற்று. பூபாலனைத் தாங்கிய சிங்கத்தின் முகத்தில் பச்சை இரத்தம் பீச்சியடித்தது. பூபாலன் வேதனை தாளாது பற்களைக் கடித்துக் கொண்டு அவஸ்த் தைப்பட்டான்; ஆயினும் துயரோடு அனுங்கக்கூட இல்லை அவன்.

''ஐயோ பூபால்......''

சிங்கம் பூபாலனை அள்ளித் தூக்கினுன்.

பூபாலன் வேதனையை உள்ளடக்கிப் பல்லைக் கடித்துக் கொண்டு தொடையிலே முஷ்டியால் அடித்துக் கொண்டி ருந்தான். நோஞ்சானுன அந்த உடலிலே தளர்வு தெரிய வில்லை. அடிவயிற்றிலிருந்து ரத்தம் வழிந்தோடிக் கொண் டிருந்தது.

''சிங்கம் அண்ணை, எங்களை ஒருதரும் அசைக்கேலாது அசைக் கேலாது —...''

மாணிக்கத்தின் தளதளத்த குரல் திடீரென அங்கே முளைத் தது. பூபாலனின் கோலம் மாணிக்கத்தின் முகத்தையே தலைகீழாக மாற்றியது. கண்களில் ரௌத்ரம் பொங்கியது; ''பூபாலு...பூபாலு—'' என்று பதறிற்று மாணிக்கத்தின் குரல்.

''தோழர்......வந்திட்டீங்களா...?''

மாணிக்கத்தை வாஞ்சையோடு தேடின பூபாலனின் கண்கள். பூபாலனின் உறுதியான முகத்தையே பார்த்துக் கொண்டு அசைவற்று நின்முன் சிங்கம். பூபாலனின் ஒரு கை சிங்கத்தின் தோளை இறுக்கிக் கொள்ள மறுகை முஷ் டியைத் தூக்கி மெதுவாக உயர்த்திவிட்டுப் பொத்தென்று செயலற்றுச் சரிந்தது. பூபாலனின் கடைசி வார்த்தைகள் முணுமுணுத்து அடங்கின: ''அண்ணை...எங்களை ஒருத் தரும் அசைக்கேலாது.. நாங்க சிந்துறரத்தம் வீண்போகாது ஒரு நாளும் வீண் போகா...து—...—''

# கட்டுமரங்கள்

''காற்று உரத்து வீசுது; கட்டுமரத்தை இனிக்கரையோரமாகத் திருப்படா!...''

சீறிவிழும் அலைகளின் பேரோசையை அமுங்கவைத்து வீசும் மூர்க்கத் தனமான காற்றின் சுழித்த வீச்சுக்களிடையே செபமாலையின் கட்டைக்குரல் உரத்துக் கேட்கின்றது. காற்றின் வேகத்தில் பொங்கியெறியும் அலைகளிடையே அவ்விரு கட்டு மரங்களும் நிலைகொள்ள முடியாது எற்றுண்டு தவி தவிக்கின்றன. திசை தடுமாறிக் கரையறியாத நிலைமையில் திகைத்துப் போய் அந்த நான்கு மனிதர்களும் பிரயத் தனப் பட்டு தமது கட்டுமரங்களை தமது கைப்பிடிக்குள் அடக்கி விடுவதற்கு முயன்று கொண்டிருக்கிறார்கள். கருநீலத்திலே குளித்துப் போயிருக்கும் கடலும் வானமும் எல்லைக் கோடறுந்து ஒன்றெனச் சங்கமாகித் தெரிகின்றன.

கடலில் தடுமாறும் இரு கட்டு மரங்களிலும் நால்வர் மட்டுமேயிருக்கின்றார்கள். முதற் கட்டு மரத்தில் செபமாலையும், சவரிமுத்துவும் அடுத்த கட்டு மரத்தில் பொன்னம்பலமும் பிரான்சிஸ் பெரேராவும்.

இன்று காலையிலே கடல் நிறைய மீன்கள் விளைந்து கிடந்தன. கைகள் அலுத்துப் போகும் மீன் அறுவடை, கரையோரத்தில் கட்டுமரங்கள் ஏதுமில்லை. முதுகு காட்டிக் குப்புறக் கிடந்த கட்டு மரங்கள்கூட இன்று கடலினுள் சுழன்று வந்தன. கடற்கரையில் பெண்களும், குழந்தைகளும் நிற்க, கடலினுள்ளே கட்டுமரங்களில் ஆண்கள் வலையிழுத்துக் கொண்டிருந்தனர். கடல் அலைகளினைக் கட்டு மரங்கள் கீறிப்பிளந்து மீன்களை வலையினுள் அள்ளி வந்து கரையிலே குவித்து விட்டு மீண்டும் மீண்டும் கடலைத்துளாவி வளைந்

தன. வலைகளை விரிப்பது சுலபம். ஆனால் அள்ளிச் சேர்ப்பது தான் கடினம் என்ற மீனவனின் அனுபவ வாக்கியங்களை பொய்த்தன போல மிகவும் துரிதகதியில் வலைகள் கனத்த மீன்களோடு கட்டுமரங்கள் கசகசத்த மண்ணருகே வீச்சோடு வந்து நின்றன. கடற்கரை உழைப்பின் குரல்களால் களித்துப் போயிருந்தது. பெண்களும் குழந்தைகளும் வலைகளினுள் கிடந்த மீன்களை மிகப்பக்குவமாகப் பொறுக்கிக் கொண்டிருக்கிறார்கள். மிகப் பக்குவமாகத்தான் பொறுக்க வேண்டும். மீனின் தலையோ வாலோ ஒடிந்து விட்டால் அவை கழிக்கப்பட்டு விடும். முதலாளி எவனும் அதனைக் கணக்கில் எடுக்கமாட்டான். வலையிலிருந்து மீன்களை எடுப்பது கைதேர்ந்த விரல்களாலேயே முடியக்கூடியது. நீண்ட கடற் கரையின் வெண்மணற் பரப்பு காலடிகளின் பரபரப்பால் உருக்குலைந்து ஈரமாகிக்கிடந்தது. இவையெல்லாம் இன்று நான்கு மணி வரையுள்ள நிகழ்ச்சிகள். இப்போது ஆறுமணி. மாதா கோயில்மணி அடித்து ஓய்ந்து விட்டது. தூரக்கடலில் தத்தளிக்கின்ற கட்டுமரங்களுக்கு மணிநாதம் கேட்க நியாயமில்லை. காற்றின் வீச்சு சுற்றுப்புற ஒலிகளையெல்லாம் கரைத்து அழித்து விட்டது.

மாலையை மங்க வைத்த காற்றின் வீச்சிடையே தலை விரித்து நடுநடுங்குகின்ற தென்னை மரக் கூட்டங்களின் கீழேயுள்ள குடிசைகளின் உள்ளே துயரம் கலந்த பெருமூச்சுக்கள் தகித்துக் கொண்டிருந்தன. தூரக்கடலில் போனவர்களின் உறவுகள் அழுத அழுகை நெஞ்சைப் பிய்த்து எடுக்கின்றன. பெண்களினது பிரலாபங்கள் மரண ஒப்பாரிகளாயுள்ளன. தேவமாதாவையும் முருகனையும் பிள்ளையாரையும் வேண்டிநிற்கும் குரல்களிடையே அற்புதராசாவின் குரல் ஓங்கிக் கேட்கிறது.

''பெர்ணாண்டோச் சம்மாட்டியிட்டமோ அல்லது கனகசபைச் சம்மாட்டியட்டமோ உள்ள இஞ்சின் போர்ட்டை எடுத்துக் கொண்டு போனால் கடலுக்குள்ளை நிற்கிற ஆட்களைப் பாதுகாப்பாகத் திருப்பி எடுக்க இயலும்...—''

அந்த நம்பிக்கையான குரல் அங்கே தென்றலென ஊர்ந்தது.

'' நல்ல யோசினை, தாமதிக்காமல் சம்மாட்டியிட்டை போங்க ..'' பெண் குரலொன்று ஊக்குவிக்கிறது.

''பெர்ணாண்டோச் சம்மாட்டியின்ரை போர்ட் எஞ்சின் பழுதாகிக் கிடக்குது என்று றைவர் சிமியோன் எனக்குச் சொன்னவர்...''

வந்த குரலை அன்னம்மா எதிர் கொண்டு கூறினாள்.

"அதிலிட்டாடில் கனகசபைச் சம்மாட்டியாரிடம் போய்க் கேட்கிறதுதான் இந்த அவசரத்துக்கு இல்லாத உதவி பிறகு எதுக்காம்."

"மிச் சங் நல்லது, வாங்கோசம்மாட்டி வீட்டுக்கு.'

சிங்களப் பெண்ணான சிறியா அன்னம்மாவை வாஞ்சையோடு பார்த்துக் கொச்சைத் தமிழில் கூறுகிறாள்.

வெளியே காற்றோடு மழையும் வீசிப்பெய்கிறது. உறுமும் மின்னலும் இடியும் வர வர அதிகரித்து ஈரலிப்பான நிலைமையை குடிசைகளுக்கு வெளியேயும் உள்ளேயும் அள்ளியிறைக்கின்றன. உடலை ஜில்லென்று நடுங்க வைக்கும் காற்றும் சீறல் மழையும் அங்குள்ளோரின் முகங்களில் பயத்தினையே நிறுவியிருக்கின்றன.

யசிந்தா குடிசையின் ஓரப்புறமாக விம்மி விசும்பிக் கொண்டு தன்னுள் அடைக்கலமாயிருக்கும் குழந்தை இருதய மேரியின் தலையை வருடியவளாக சிந்தனையைத் தனது கணவன் சவரிமுத்துவில் செலுத்தி இருக்கின்றாள். அவர்கள் இள வயதினர், சவரிமுத்துவுக்கு இருபத்தேழுவயது. அவளுக்கும் அவனுக்கும் கைப்பிடித்தல் முடிந்து மூன்று வருஷங்களே கழிந்திருக்கின்றன. அவளின் வாய் பரமண்டலத்திலிருக்கும் பிதாவிடம் ரட்சிப்பும் ஆதரவும் கேட்டுக் கேட்டு மன்றாடுகின்றது. அந்தச் சின்னக் குடிசையின் ஒதுக்குச் செத்தையிலே பிறேமிட்ட கண்ணாடியுள் அடங்கியிருக்கும் சிலுவையில் அறையுண்ட யேசுக் கிறிஸ்துநாதரும் குடிசையுள் துளாவும் காற்றினால் மேலும் கீழுமாய் அசைவதை பார்த்த சிறியா எழுந்து சென்று அந்தப் படத்தினை சரியாக நிலைப்படுத்தி வைக்கின்றாள்.

சிறியா பிரான்சிஸ் பெரேராவின் சொந்த அக்கா.

"தம்பியையும் குடும்பத்தையும் மிச்சஞ் கஸ்டப்படுத்தித்தான் சம்மாட்டி இஞ்சை கூட்டி வந்தது. தம்பி சம்மாட்டிக்கு நல்லா கஷ்டப்பட்டது. எல்லாருந்தான் சம்மாட்டிக்கு கஷ்டப்படுகிறது. வாங்க சம்மாட்டி வீட்டுக்கு" சிறியாவின் கறுத்த முகத்தில் உறுதி நிரம்பியுள்ளது,

"சம்மாட்டி நாங்க வீட்டுக்குப் போனால் கோபப்படுவாரோ?" தயங்கியபடியே கேட்கிறான் அன்ரன்.

"நாங்க என்ன களவு பண்ணவா போறது?" சில்வாவின் குரலில் சினந் தொனிக்கத் தொடர்ந்தான்;

''சம்மாட்டி எங்கடை ஊர்வந்து ஐந்நூறு ரூபாவைக் கையிலே தந்து பிள்ளைகுட்டியோடை கூட்டி வந்தது. நாங்க றஸ்தியாதிப்பட்டுத் தொழில் செய்யிறது இந்தக்கடலிலே பயமில்லாமல் நாங்க மீன் பிடிக்க வந்து சம்மாட்டியிடம் குடுக்கிறது. நாய்மாதிரி வேலை செய்யிறது நாங்க...! பிற கென்ன? உயிருக்கு ஆபத்தானு சம்மாட்டிதான் உதவ வேணும் அது கேட்கிறதிலே நியாமில்லே?''

சில்வாவின் ஆக்ரோஷமான குரலைக் கேட்டவண்ணம் தனிநாயகம் யோசித்துக் கொண்டிருந்தார்.

சில்வா சொல்வது மிகவும் நியாமானதுதான். அங் குள்ள மீன் முதலாளிகளான சம்மாட்டிகள் எத்தனையோ மைல்களுக்கு அப்பால் சென்று குடும்பங் குடும்பமாக மீனவர்களைக் கொண்டு வருவார்கள். அப்படிக் குடும்பங் களைக் கொண்டு வந்து சேர்ப்பதற்காக சம்மாட்டிகள் தங் களுக்கெனக் கங்காணிகளை வைத்திருப்பார்கள். கங்காணி கள் மீனவக் குடும்பங்களோடு பேரம் பேசி ஆறுமாதம் மீன் பிடித்தொழில் செய்வதற்கான கூலியினை முன்பணமாகக் கொடுத்து விட்டு அந்தக் குடும்பங்களைத் தங்கள் இடத் திற்குக் கூட்டிக் கொண்டு வருவார்கள். மீன் முதலாளிகளே கடற்கரையோரமாக அவர்களுக்கு சிறிய குடிசைகளைக் கட்டிக் கொடுப்பார்கள். மீன் முதலாளிகள்தான் அங்குள்ள பெரியகடைகளின்சொந்தக்காரர்கள். அவர்களிடமே இந்த மீன் பிடிகாரர்கள் பொருட்கள் வாங்கவேண்டும். குடிசை க்கு வாடகை, பொருட்களுக்கு விலை என்று சம்மாட்டி கணக்குப் பார்த்தால் மீனவனே கடைசியில் கடன்காரனுகி விடுவான். அந்தக் கடனை அடைப்பதற்காக மீண்டும் அவன் தன்னுடைய முதலாளிக்காக உழைத்துக் கொடுக்க வேண்டும். இதே கதை தொடரும்... அங்கே எல்லாச் சம்மாட்டிகளுக்கும் பல வீடுகள், தோட்டங்கள், வயல்கள், அரிசி மில்கள் என்று சொத்துக்களிருக்கின்றன ...

''நாங்கள் உயிரை வெறுத்து வேலை செய்தும் கண்ட தென்ன?... பஞ்சமும் கஷ்டமும் தான் எங்களுக்கு மிஞ்சி இருக்கிற சொத்து''

தனிநாயகத்தின் நெஞ்சைக் கீறிக் கொண்டெழுந்தது பெருமூச்சு!

வெளியே காற்று உறுமிற்று. குடல் கிழியும் உறுமல் எங்கோ தென்னை மரம் ஒன்று தடாரென்று விழவும் நாயொன்று வாளென்று கத்தவும் சரியாயிருந்தது.

''இந்நேரம் அப்பு கடலிலே என்னென்ன ஆனுரோ?...''

பொன்னம்பலத்தின் மகள் விமலா குளறும் குரலில் சொன்ன போது அங்கே ஒரு புதியபலம் போல நுழைந்தான் கமலநாதன். அவன் இஞ்சின் போர்ட் றைவர்,

''கடலுக்கை போய் மீன் பிடிக்கிறவன் அழுதுகொண்டிருக்கப்படாது. கடல் எங்களின்ரை அம்மா, யாரும் யோசிக்கவேணும்.......''

நம்பிக்கை பரபரப்போடு எல்லோர் நெஞ்சிலும் தலை தூக்குகின்றது.

''எப்படி? எப்படி?''

கேள்விகள் வினவின,

''நான் இஞ்சின் போர்ட்டிலை போகப்போறன். அது நான் ஓடுகிற இஞ்சின் போர்ட்.....''

கெம்பீரமான அவனை அன்னம்மா களிகூரப் பார்த்தாள்.

''கனகசபைச் சம்மாட்டி சம்மதங் குடுத்தவரா?''

சிரித்துக்கொண்டு பதிலளித்தான் கமலநாதன்.

''கனகசபைச் சம்மாட்டி மீன் வியபாரி ஒருவரைக் காணுறதுக்கு கொழும்புக்குப் போய்விட்டாராம். மகனிட்டைக் கேட்டன். இஞ்சின் போர்ட்டைத் தொடவேகூடாது என்று சொன்னான். அப்ப நான் சரி சொல்லிவிட்டுத் திரும்பினன்''

எல்லோரும் திகைத்தனர்;

என்ன சொல்லுகிறான் இவன்?

அடுத்த கணம் கமலநாதன் ஆத்திரமுற்றான்:

''இந்தப் பெருங்கடலிலை போய் உயிரையும் வெறுத்து மீன் பிடிக்கிறது நாங்கள். வீட்டிலை இருக்கிறது சம்மாட்டிகள்; நாங்கள் பிடிக்கிற மீனிலைதான் சம்மாட்டி வீடுகட்டுறான். சாப்பிடுகிறான். இஞ்சின்போர்ட் வாங்கிறான். இப்ப அவனுக்காக மீன் பிடிக்கப்போய் கடலிலை நாலு உயிர் தத்தளிக்குது. அதைக் காப்பாற்ற இஞ்சின் போர்ட் தரேலாது எண்டு அந்த மைனர்ப் பயல் சொல்லுறான்...''

சிறியா தணிந்த குரலிற் கேட்டாள்:

''தம்பி இப்ப என்ன செய்யப் போறது''

கமலநாதன் கர்வத்தோடு சொன்னான்:

''இஞ்சின் போர்ட் சாவி என்னுடைய கையிலை இருக்குது. நான் அதை எடுத்துக் கொண்டு போகப்போறன்...''

''தம்பி சம்மாட்டி பொல்லாத ஆள் கரைச்சல்கொடுக்கும்'

அன்ரன் முணுமுணுத்தான்:

"அண்ணை, எனக்குச் சம்மாட்டியை நல்லாத் தெரியும் நான் பயப்பிடேல்லை. எனக்குக் கடலிலை அந்தரப்படுகிற எங்கடை கூட்டாளிகள் தான் இப்ப பிரதானம்..."

யசிந்தா நன்றி பொங்கக் கமலநாதனைப் பார்த்தாள். அவளின் உடல் பெருமையினாலும், நன்றியுணர்வாலும் சிலிர்ப்புற்றது.

"காட்டுக்குள்ளை வெறும்மரமாகக் கிடக்கிற நாலு கட்டைகளைச் சேர்த்துப் பிணைச்சால் கட்டுமரம் வந்திடும் கடலைக் கடக்கலாம். அதுபோல நாங்க கூலிக்காரர் எல்லோரும் ஒன்றுபட்டா எங்களை யாரும் வெல்ல முடியாது..."

அனுபவ மொழிகளாய்க் கூறினான் கமலநாதன்.

காற்றும், மழையும் வேகமாய் இயங்கிய நிலையிலும் அதைத் துச்சமாக மதித்து வெளியே விரைந்தான் கமலநாதன். அவனை இன்னுஞ் சிலர் பின் தொடர்ந்தனர்; பாயும் மீனென இருந்தது அவர்களது நடையின் வேகம்.

கடற்கரை யோரமாகப் பல தென்னைமரங்கள் விழுந்து கிடந்தன. குரும்பைகளும், தேங்காய்களும் பரவிச்சிதறிய கொடிய காற்றின் வீச்சத்தைக் காட்டியிருந்தன. அலைகள் மடார் மடாரென்று தலைமுறிந்து விழும் பேரோசைகள் மட்டுமே இப்போது எங்கும் கேட்டவண்ணமிருக்கின்றன.

அங்குள்ள கட்டுமரங்களில் இரண்டினைத் தவிர ஏனையவையெலாம் மிகப்பத்திரமாக கரைக்கு உட்புறமாக மீன் வாடிகளை அடுத்துக் கவிழ்த்து வைக்கப் பட்டிருக்கின்றன. கனகசபையரின் மீன் வாடிக்கு பக்கத்திலிருக்கும் தகரஷெட்டிற்குள் இஞ்சின் போர்ட் பூட்டி வைக்கப்பட்டிருக்கின்றது.

கனகசபைச் சம்மாட்டியின் வாடிக்குள் யாருமில்லை. அங்கு மீன் அள்ளும் ஆறேழு கூடைகளும், பக்கீஸ் பெட்டிகளுமே வைக்கப்பட்டுள்ளன. கொழுத்த நாயொன்று குடங்கிக் கொண்டு பக்கீஸ் பெட்டியொன்றுடன் ஒதுங்கிக் கிடக்கின்றது. கனகசபைச் சம்மாட்டியாருக்குச் சொந்தமான ஐஸ்மில்லில் இயந்திரஓசைதாளகதியில் கேட்கின்றது.

கடற்கரைப் பக்கமாக கமலநாதன் வேகமாக நடந்து வந்து கொண்டிருக்கின்றான். அவனைப் பின் தொடர்ந்து சிலர். கொட்டும் மழையையோ, காற்றின் சீற்றத்தையோ கணக்கெடுக்கவில்லை அவர்கள்.

அதே நேரத்தில், கடற்கரைக்கு நேர் கிழக்காகவுள்ள வீதியில் நால்வர் சோர்ந்த நடையோடு கடற்கரைப்பக்கமாக வந்து கொண்டிருக்கிறார்கள்.

தீட்சண்யமான கண்களினையுடைய கமலநாதன் மழைத் திரையையும், இருள் பொழுதையும் ஊடுருவுகின்றான்.

''யாரோ வருகினம்''

எதிர்திசையிலிருந்து 'கூ' என்ற ஓசை எழுந்தது. பதிலிற்கு கமலநாதனும் கூவிட்டான். அது பரஸ்பர அழைப்பு

''யாரோ எங்கடை ஆட்கள்தான் வருகினை. நின்று பார்ப்பம்...

அலைகள் உச்சஸ்தாயில் குமுறி விழுகின்றன.

எங்கிருந்தோ எற்றுண்ட தென்னோலை சடாரென்று மண்ணைக் குழி தோண்டியபடி விழுந்து மடங்கிற்று,

வந்தவர்கள் அண்மித்து விட்டார்கள்,

கமலநாதன் உரத்துக் குரல் கொடுத்தான்: ''யாரது வாறது?''

''... நாங்கள்...''

குரலில் கமலநாதன் அடையாளம் காண்கிறான். செபமாலையின் தம்பி சூசைமுத்துவிற்குரிய குரல் அது

'எங்கையண்ணை போயிட்டு வாறிங்கள்.'

ஜினதாஸாவின் குரலிலே பதில் வந்தது.

''நம்ம சம்மாட்டிட்டை போட்டு வாறது.''

'எந்தச் சம்மாட்டி?'

''கனகசபை......''

வெறுப்போடு பதிலளித்தான் சூசைமுத்து.

கமலநாதன் கட கட வென்று சிரிக்கின்றான்.

'ஏன் போர்ட் கேட்கவா போனீர்கள்?'

பதில் சொல்லாமல் சூசைமுத்துவையே ஏக்கத்தோடு பார்க்கிறான் ஜினதாஸா. பிறகு அவனே சொல்கிறான்.

'கனகசபை சம்மாட்டி மகனை அண்ணை போர்ட் கேட்டது. அவன் அண்ணணைப் பேசினது. கெட்ட பேச்சு. எனக்கு ஜுவால் வந்தது. என்னடா அப்பிடிப் பேசறது எண்டு கேட்டிட்டு வந்திட்டம்.'

ஜினதாஸாவின் போக்கை கமலநாதன் நன்கு அறிவான். அவனது முரட்டு உடலும், சடைமுடியும், கிறுதா மீசையும் பயமூட்டுகின்ற வெளித் தோற்றங்களாயிருப்பினும் மனமோ குழந்தையின் மென்மையானது. ஆயினும் அந்த மனமே கொடுமையைக் கண்டால் சுற்றுச் சூழலையும் கவனியாது துணிவோடு எதையும் நொருக்கியெறிய எழுச்சி பெறுமெனவும் அவன் அறிவான்.

'மழை பிறகும் பிலக்குது,'

அன்ரன் தன் தலைமயிரைத் தட்டிக்கொள்கிறான்.

'அங்கை பாருங்க, சிறியாவும் யசிந்தாவும்' சிறியாவும் யசிந்தாவும் ஆளுக்கொரு சுழகைத் தலைக்குப் பிடித்துக் கொண்டு வந்து அங்கு நிற்கிறார்கள்.

கமலநாதன் அவர்களைப் பார்க்கிறான். முகத்தில் வழியும் மழை நீரை சிறியா ஈரக்கையாலேயே துடைக்கிறாள்.

மின்னல் கிளைபரப்பி வானத்தினைக்கீறி அழிகின்றது.

'நின்றென்ன? வாருங்க.' கமலநாதனின் குரல் மற்றவர்களைப் பின் தொடர அழைக்கின்றது. சூசைமுத்து கழுத்திலுள்ள குருசை வருடியபடி அனுங்குகிறான்.

'எங்கை?'

சிறியா சுளகை உதறிக்கொண்டு சொன்னாள். 'இஞ்சின் போர்ட்டை எடுத்து தம்பி கடலுக்குப் போகப்போறது...' 'என்ன?' ஜினதாஸாவின் குரல் திகைத்தது, அவனுக்கு எப்போதுமே கனகசபைச் சம்மாட்டியை நினைத்தால் கடல் பன்றிதான் நினைவுக்கு வரும். கனகசபைச் சம்மாட்டி மூர்க்கத்தனமான மனிதன், கடற் பன்றியைப் போல.

'ஏன் பயம்?' சிறியா கேட்டுக் கொண்டே தொடர்கிறாள் 'நாங்க போர்ட்டைக் களவெடுக்கவா போறது. இல்லைதானே. நாலு உசிரைத் தப்புவிக்கத்தானே போர்ட்டை எடுக்கப் போறது'

அன்ரன் தயக்கத்தோடு வினவுகிறான், 'சம்மாட்டியார் பொலிசிலை சொன்னால்...' சிரிக்கின்றாள் சிறியா,

'அண்ணை நீங்க எதுக்குங் பயந்தான். மண்கொள்ளைக் காரனும், பொய்க்காரனுந்தான் பயப்பிடுறது.'

கமலநாதன் சிறியாவின் துணிவைக் கண்டு மனதுள் பெருமிதமுற்றுக் கொண்டே அவளின் கொச்சைத் தமிழ்ப் பேச்சினை நினைத்துச் சிரித்த வண்ணம் திரும்பி வீதியினைப் பார்த்தான், வீதியின் முகப்பில் கனகசபைச் சம்மாட்டியாரின் லாண்றோவர் வேகமாக வந்துகொண்டிருந்தது.

இஞ்சின் போர்ட் ஷெட்டிற்கு முன்னால் நின்ற லாண்றோவரின் முன்புற விளக்குகள் பிரகாசத்தை உமிழ்ந்து தன்னெதிரே வருபவர்களைத் தெளிவாகவே காட்டிக் கொண்டிருக்கின்றன. லாண்றோவரினுள் இருந்தபடியே வெளிச்சத்தில் முன்னேறி வருபவர்களை அவதானித்துக் கொண்டிருக்கின்றான் கனகசபை சம்மாட்டியின் மூத்தமகன் இரத்தினசபாபதி. அவனிற்குப் பக்கத்தில் ஸ்டியரிங்கில் கைவைத்தபடி களைத்த முகத்தோடு ரூபசிங்கா உட்கார்ந்திருக்கின்றான். சுகவீனமென்று அலுப்போடு படுத்திருந்த

அவனை இரத்தினசபாபதி அவசர அவசரமாகக் கூப்பிட்டுக் கொண்டு வந்திருக்கின்றான். றெயின் கோட்டைக் கழற்று மலே தனக்குப் பக்கத்திலிருக்கின்ற இரத்தினசபாபதியை அர்த்தம் தெரியாத வெறுப்போடு பார்த்துவிட்டு சேர்ட் கொலரை மிதத்துகின்றான் ரூபசிங்கா.

மழையின் வேகம் தணிந்து விட்டதை லாண்ட்ரோவரின் முன்புற விளக்குகளின் ஒளிவெள்ளம் துலக்கமாகக் காட்டு கின்றது.

லாண்ட்ரோவரையே கவனியாதவர்கள் போல் கமலநா தனும் மற்றவர்களும் செல்வதை அவதானித்த ஆத்திரத் துடன் தன் கிறீச்சுக் குரலில் உறுமுகின்றான் இரத்தின சபாபதி. 'கமலநாதன் இங்கே வா...'

கமலநாதன் ஒரு கணம் நின்று விட்டு மீண்டும் முன் னே நடந்தான். 'ஆரும் முன்னுக்குப் போகப்படாது. போனால் சுட்டுத்தள்ளிப் போடுவன்'

ஜினதாஸா அட்டகாசமாகச் சிரித்தான். எதிரிக்கு எரிச்சலூட்டுகின்ற விஷமச்சிரிப்பு. இரத்தினசபாபதிக்கு முகத்தில் இரத்தம் பொங்கிற்று; 'ஆரடா அந்த நாய்?'

ஜினதாஸா லாண்ட்ரோவர் ஓரமாக வந்தான். 'ஆரடா அந்த நெத்திலி பயில்வான்! மோடையா ..'

எதிர்பாராத சொற்களின் தாக்குதலால் நிலைகுலைந்த இரத்தினசபாபதி தன்னைச் சமாளித்துக் கொண்டு ரூபசிங் காவைப் பார்த்தான். ரூபசிங்காவின் முகமோ குழம்பிப் போய்க் கிடந்தது.

'இப்ப எல்லாரும் எங்கை போறீங்கள்'

இரத்தினசபாபதி கனைத்தான். கைகள் துப்பாக்கியை இறுகப் பற்றியிருந்த போதிலும் அவற்றின் நடுக்கத்தை நிறுத்த முடியவில்லை.

கமலநாதன் முன்னே வந்து சொன்னான், ''உங்களுக்கு மீன் பிடிக்கப்போன நாலுபேர் கடலுக்குள்ளை அகப்பட்டி ருக்கிறாங்கள். அவங்களை உயிரோடை மீட்கிறதுக்கு இஞ் சின் போர்ட் வேணும், அதுதான் எடுத்துக் கொண்டு போகப்போறன்'

இந்த வார்த்தைகளிலே அளவற்ற திமிரும் காடைத் தனமும் பொங்கியிருப்பதாக இரத்தினசபாபதியின் மனம் உணர்வுற்றது. அவனது நெஞ்சு அளவு மீறிய கோபத்தி னால் படபடக்கத் தன்னை மீறியவனாய் அவன் கத்தினான்.

'றாஸ்கல்...'

அவனே தொடர்ந்தான், 'எண்ணாயிரம் ரூபா பெறுமதியான இஞ்சின் போர்ட்டை இந்த நேரத்திலே கடலுக்குள்ளே இறக்க முடியாது. பேசாமல் இஞ்சின் போர்ட் சாவியை என்னிடம் தா. கொண்டு வா.....'

ரூபசிங்காவிற்கு எல்லாமே விளங்கி விட்டது. தன்னையே மறந்தவனாகப் பக்கத்திலே நின்ற சிறியாவிடம் சிங்களத்திலேயே யார் யார் அந்த நாலுபேர் என்று கேட்டு அவர்களை அறிந்ததும் முக உணர்ச்சிகள் மாறியவனான்.

'எண்ணாயிரம் ரூபாவை விட இந்த நாலு மனிதரின்ரை உயிர் தான் பெரிசு' தனிநாயகத்தின் குரல் அமைதியாக வெளிவந்தது.

'எனக்கு அதைப்பற்றி அக்கறையில்லை'

'அப்படிச் சொல்லாதேங்க முதலாளி. உங்களிட்டை தான் ஐஞ்சு வருஷமா நாங்க வேலை செய்யிறம். உங்களுக்காகத்தான் உசிரையே வெறுத்து இவங்கள் கடலுக்குள்ளே போயிருக்கிறாங்கள். நீங்களூரக்கம் காட்டாட்டில் எனக்கும் புருஷனே இல்லாமல்..... போயிடுவன்'

யசிந்தா விம்மி விம்மிக் கரைந்தாள். அவளின் கண்ணீரும் கதறலும் அவனது கால்களைப் பிடித்துக் கொண்டு கெஞ்சின. அலட்சியமாகச் சொன்னான் இரத்தினசபாபதி!

'காற்றும் மழையும் நிற்கட்டும், பிறகு பார்க்கலாம், ரூபசிங்காவின் இருதயத்தினுள் முள்ளென அச்சொற்கள் தைத்தன. சிறியா கைகளைப் பிசைந்து கொண்டாள், தன்னைச்சுற்றி நின்றவர்களை துணிவு ததும்ப உற்று நோக்கினாள். பிறகு தன்னுடைய இடுப்பில் செருகியிருந்த குறடு ஒன்றை எடுத்து கமலநாதனிடம் நீட்டினாள். முகத்திலே புதிய ஒளியொன்று துலங்கிற்று சிறியாவுக்கு.

'தம்பி, இவனிட்டை என்ன கேக்கிறது. நீ போய் கருச்சைத் திறந்து போர்ட்டை எடு ..' கமலநாதன் அந்த வார்த்தைகளுக்குக் கட்டுண்டான். இரத்தினசபாபதி சீறினான். ''ரூபசிங்கா ஸ்ராட் பண்ணு, இப்ப எல்லாரையும் இடிச்சுத் தள்ளுறன்'' யசிந்தா நெடுமூச்செறிந்தாள். 'யேசுவே எங்களைக் காப்பாற்றும்!' சடாரென்று லாண்றோவரின் முன்னால் கைகளை விரித்துக் கொண்டு நடுப்பக்கமாக மறித்துக் கொண்டு நின்றாள் சிறியா. லாண்ட் றோவரின் முன்புற விளக்கு வெளிச்சத்தில் சிறியாவின் தைரியமான தோற்றத்தை வியப்புற நோக்கினான் ரூபசிங்கா. அவள் கறுப்பான தடித்த உயர்ந்த பெண். கண்களிலேமின்னும் துணிவு. மழையில் தோய்ந்த தோற்றம்.

உழைப்பிலேயே வலிவு பெற்ற அவளின் கைகளை ஆயுதங்களாகத் தெரிகின்றன.

ரூபசிங்காவின் மனக்கண்களிலே கடலில் தத்தளிக்கின்ற செபமாலை சவரிமுத்து, பொன்னம்பலம், பிரான்ஸிஸ் பெரேரா ஆகியோர் மாறிமாறித் தோன்றினர். கண்களின் முன்னுலோ அவர்களுக்காக உயிரையும் துறக்கச் சித்தமாக நிற்கிருள் சிறியா, அவனின் மனம் நினைக்கிறது .. இதென்ன துணிவு! சிங்களவன், தமிழன், கத்தோலிக்கன், சைவன் என்பதையெல்லாம் மறந்து தங்களையெல்லாம் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாக நினைத்து ஒருவருக்கொருவர் உயிர்விடத் துணியும் இத்துணிவை இவர்களுக்குக் கொடுத்த உணர்வு என்ன பெருமை மிக்கது: ரூபசிங்காவின் நெஞ்சினுள் அந்த எண்ணங்களே அலையடித்தன.

'ரூபசிங்கா, ஒண்டுக்கும் யோசியாதை இந்தச்சிறுக்கியை இடிச்சுத் தள்ளு. வாறதை நான் பார்க்கிறன் ..'

ரூபசிங்கா நிதானமாக இரத்தினசபாபதியைப் பார்த்தான். பிறகு லாண்ரேவர் சாவியை எடுத்து வெளியே மணலில் வீசி எறிந்து விட்டு லாண்ரேவரை விட்டுக் கீழே இறங்கி நடந்தான்.

அதே வேளையில் கடலினுள் எழுந்த இஞ்சின் போர்ட்டின் புறப்படும் உறுமல் ஒலி வெகு தெளிவாகவே எங்கும் கேட்டுக் கொண்டிருக்கிறது — ... —



செ. யோகநாதன் எழுதிய 'காவியத்தின் மறுபக்கம்' என்ற இக் குறுநாவல் தொகுதியில் மூன்று குறுநாவல்கள் அடங்குகின்றன.
''காவியத்தின் மறுபக்கம்'' என்ற குறுநாவல்
சிரித்திரன் குறுநாவல் போட்டியில் முதற் பரிசு பெற்றது,
செ. யோகநாதனின் தொகுதிகளாக 'யோகநாதன் கதைகள்' (1964) ஒளி நமக்கு வேண்டும் (1973) ஆகியவை ஏற்கனவே வெளியாகியுள்ளன.
''ஒளி நமக்கு வேண்டும்'' தொகுதி 1973 ன் சிறந்த படைப்பிலக்கியத்திற்கான சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றது,
சிறுகதை குறுநாவல்களோடு புனைபெயரிலே கவிதைகளும் எழுதிவருபவர் செ, யோகநாதன்.

தனிப்பிரதி ரூபா 5-00

எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம்